[பேரவைத் தலைவர்] [2023 நவம்பர் 18

இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.)

முற்பகல் 10–05

3. அரசினர் தனித் தீர்மானம்

13-11-2023 அன்று மாண்புமிகு ஆளுநர் அவர்களால் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்து, திருப்பி அனுப்பப்பெற்ற 15-வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 2 சட்டமுன்வடிவுகள் மற்றும் 16-வது சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பெற்ற 8 சட்டமுன்வடிவுகள் ஆகியவற்றை மறு ஆய்வு செய்திட தீர்மானித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தனித் தீர்மானம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை" என்றார் புரட்சியாளர் மா சே துங். காய்ச்சல், தொண்டை வலி காரணமாக சில நாட்கள் வீட்டில் நான் ஓய்வெடுத்து வந்தாலும், எனது உடல்நலனைவிட இந்த மாநிலத்து மக்கள் நலன், (மேசையைத் தட்டும் ஒலி) தாய் தமிழ் நாட்டின் நலன், நூற்றாண்டு கண்ட இந்த மாண்புமிகு சட்டப் பேரவை நலன்தான் அதைவிட முக்கியம் என்ற மன உறுதியோடு உங்கள் முன்னால் நான் நின்று கொண்டிருக்கிறேன்.

கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கும் நம்மை, இந்திய அரசியல் சட்டம் வழங்கிய அதிகாரத்தின் மையமாக இருந்து சட்டமியற்றும் இந்தச் சட்டமன்றத்தைத்

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

தடுக்கும் சக்தி ஒன்று முளைக்குமானால், இந்தச் சூழ்நிலை என்பது இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான வகையில் கொண்டு செலுத்திவிடும் என்ற அச்சத்துடன்தான் உங்கள் முன்னால் நிற்கிறேன்.

இங்கே படமாக மட்டுமல்ல; பாடமாக நின்று கொண்டு இருக்கிறார் வான்புகழ் வள்ளுவர்.

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறை என்று வைக்கப்படும்"

என்று ஈராயிரம் ஆண்டுகளுக்குமுன் எழுதியவர் அவர்தான்.

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான் என்று இதற்கு உரை எழுதினார் எங்களையெல்லாம் ஆளாக்கிய தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆளாக்கிய தலைவரின் நெறிநின்றுதான் ஆட்சி நடத்தி வருகிறோம். அதற்குத் தடைக் கற்கள் விழுமானால், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வழியில், 'தடந்தோள்கள் உண்டு' என்பதையும் மெய்ப்பித்துக் காட்டி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவில் மக்களாட்சி மாண்பை உருவாக்கும் சட்டமன்றமாக முதன்முதலாக எழுந்த சட்டமன்றம் நமது தமிழ்நாடு சட்டமன்றம். இந்திய விடுதலைக்கு முன்பும், பின்புமாக ஒரு நூற்றாண்டு காலமாக பல கட்சிகள், பல முதலமைச்சர்கள், பல நூறு உறுப்பினர்களைக் கண்ட தமிழ்நாடு சட்டமன்றம், ஜனநாயக விழுமியங்களைப் போற்றிப் பாதுகாத்து வருவதுடன், சமூக நீதியின் அடிப்படையில் சமூக நலத் திட்டங்களை அனைத்துத் தரப்பு மக்களின் நலன் கருதி செயல்படுத்துவதில் இந்திய ஒன்றியத்திற்கே முன்னோடியாகத் திகழ்ந்து வருகிறது என்றால், அது மிகையல்ல.

இரட்டையாட்சி முறைப்படி தேர்தல்கள் நடந்து, 1920 ஆம் ஆண்டு இங்கு அமைந்த சட்டமன்றம்தான், ஒரு சட்டமன்றம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்ற நெறிமுறை, நடைமுறை மரபுகளை உருவாக்கியதாக அமைந்திருந்தது. இது எப்படி நடைபெறுகிறது என்பதைப் பார்வையிட இங்கிலாந்து நாடாளுமன்றத்தில் இருந்தெல்லாம் இங்கு பார்வையாளர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றுள்ளார்கள்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 நவம்பர் 18 முற்பகல் 10–10

இத்தகைய சிறப்பினைப் பெற்ற, மாண்புமிக்க தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்தான், நூறு ஆண்டுகாலமாக எத்தனையோ சமூக, அரசியல், பொருளாதார, சமதர்ம, சமூக நீதிச் சட்டங்களையும், திட்டங்களையும் நிறைவேற்றிக் காட்டி இருக்கிறோம். இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் தலையாய மாநிலம் தமிழ்நாடு என்று சொல்லத்தக்க வகையில் சிறப்பான மக்கள் நலத் திட்டங்களை உருவாக்கி மாநிலத்தை வளர்த்தெடுத்து இருக்கிறோம். இன்றைக்கு நாம் காணும் வளர்ச்சி என்பது நமது தலைவர்களால், அவர்கள் உருவாக்கிக் கொடுத்த சட்டங்களால், திட்டங்களால் வந்தவை ஆகும்.

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற மாபெரும் தலைவர்களின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் பின்பற்றி, பார்போற்றும் திராவிட மாடல் ஆட்சியை வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

சமூக நீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் காத்தல் ஆகிய கொள்கைகளை அடித்தளமாகக் கொண்டு, எண்ணற்ற மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை இதே சட்டமன்றத்தில் அறிவித்துச் செயல்படுத்தி வருவதை இன்றையதினம் அனைத்துத் தரப்பினரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டுக்கான திட்டங்கள், தமிழ்நாட்டை வளப்படுத்தும் திட்டங்களாக மட்டுமல்ல; இந்தியாவுக்கான வழிகாட்டும் திட்டங்களாக அமைந்து வருகின்றன. இத்தகைய சூழ்நிலையை, 'கெடுக்கும் வகையில்' என்றுகூடச் சொல்ல மாட்டேன்; தடுக்கும் வகையில் சில இடையூறுகள் இருக்கின்றன என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். நிதி நெருக்கடி, ஒன்றிய அரசின் சில இடையூறுகள்.

இவை மட்டும் இல்லாமல் இருந்தால் இன்னும் பல திட்டங்களை எங்களால் செய்து காட்ட முடியும் என்று இதே மாமன்றத்தில் ஓராண்டுக்கு முன்னதாக நான் குறிப்பிட்டதையும் நினைவூட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

இடையூறுகள் என்று நான் சொன்னதன் விளைவாகத்தான் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டியதாக உள்ளது. பொதுவாக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சிறப்புக் கூட்டங்கள், முக்கிய நிகழ்வுகளுக்காகவும், முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்காகவும் கூட்டப்படுவது வழக்கம்.

அதேபோல், இன்றைக்கு நாம் கூட்டியிருக்கும் சிறப்புக் கூட்டம், அவசர, அவசியம் கருதி, ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின் நலன் கருதியும், ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய அவசியத்தின் அடிப்படையிலும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டியும் கூட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சித் தத்துவத்தின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்தச் சட்டமன்றப் பேரவையில் நாம் நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் வழங்காமல் இருந்தார் மாண்புமிகு ஆளுநர் அவர்கள். "I withhold assent" அதாவது, தான் அனுமதியை நிறுத்திவைத்துள்ளதாகக் குறிப்பிட்டு, நாம் இங்கு நிறைவேற்றி அனுப்பிய சட்டமுன்வடிவுகளை கடந்த 13-11-2023 அன்று திருப்பி அனுப்பி வைத்திருக்கின்றார். ஆளுநரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ள சட்டமுன்வடிவுகளை நாம் இங்கே மீண்டும் இயற்றி, அவரது ஒப்புதலுக்காக மீண்டும் அனுப்பி வைக்க இருக்கிறோம். அதற்காகத்தான் இன்றைக்கு இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களாட்சித் தத்துவத்தின்படி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மைமிக்க ஓர் அரசால், மாநில நலன் கருதி சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் சட்டமுன்வடிவுகளுக்கு ஒப்புதல் தர வேண்டியது ஆளுநர் அவர்களின் கடமை. அவருக்கு அதில் சட்டரீதியாக அல்லது நிர்வாகரீதியாக ஏதேனும் தெளிவுரை தேவைப்பட்டால், அதனை அவர் அரசிடம் கோரலாம். அதனை அரசு வழங்க வேண்டும். அந்த வகையில் இதற்கு முந்தைய சில நிகழ்வுகளில் அவர் எழுப்பிய சில வினாக்களுக்கு முறையாக எழுத்து மூலமாகவும், சம்பந்தப்பட்ட அரசு செயலர்கள், தலைமைச் செயலாளர் ஆகியோர் நேரிலும் விளக்கம் அளித்துள்ளனர்.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 நவம்பர் 18

முற்பகல் 10–15

எந்த ஒரு நிகழ்விலும் அவர் கோரிய விளக்கங்கள் அவருக்கு வழங்கப்படாமல் இருந்ததில்லை. இந்தச் சூழ்நிலையில் அவர் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளின் அடிப்படையில், சட்டமன்றப் பேரவையினால் நிறைவேற்றி அனுப்பப்பட்ட சில சட்டமுன்வடிவுகளுக்கு அனுமதி வழங்காமல் திருப்பி அனுப்பி வைத்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களையும், இந்தச் சட்டமன்றத்தையும் ஆளுநர் அவர்கள் அவமதிக்கின்றார் என்றுதான் பொருளாகும். 10 சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட 12 சட்டமுன்வடிவுகள் மற்றும் வேறு சில கோப்புகளுக்கும் இவர் ஒப்புதல் வழங்காமல் இருப்பது சட்ட விரோதம் ஆகும்; ஜனநாயக விரோதம் ஆகும்; மக்கள் விரோதம் ஆகும்; மனசாட்சிக்கு விரோதம் ஆகும்! அனைத்திற்கும் மேலாக இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மைக்கு எதிரானதாகும்!

தமிழ்நாட்டுக்கு ஆளுநராக இருப்பவர், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவிகரமாக இருக்க வேண்டும்; தமிழ்நாட்டின் மேம்பாட்டுக்குத் தேவையான முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஒன்றிய அரசிடம் அவருக்கு இருக்கும் நெருக்கத்தைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டுக்கான நிதியை வாங்கித் தருவதற்கு முயற்சிக்கலாம்; ஜி.எஸ்.டி. நிலுவைத் தொகையைப் பெற்றுத்தரலாம்; எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு உரிய நிதியை வாங்கித் தரலாம்; புதிய ரயில்வே திட்டங்களைப் பெற்றுத் தரலாம்; மாநில ஆட்சிக்கும், ஒன்றிய அரசுக்கும் பாலமாக இருக்கலாம்.

ஆனால், இதில் எதையும் செய்யாமல், மாநில அரசின் திட்டங்களுக்கு எவ்வாறு முட்டுக்கட்டை போடலாம் என நாள்தோறும் யோசித்து யோசித்து செயல்பட்டு வருகிறார். அதோடு, தினந்தோறும் யாரையாவது கூட்டிவைத்துக் கொண்டு அவர் வகுப்பு எடுக்கிறார். வகுப்பு எடுக்கட்டும்; தவறில்லை. அதில் மொத்தமும் தவறான பாடங்களைச் சொல்லித்தந்து கொண்டு இருக்கிறார். விழாக்களுக்குச் செல்கிறார். செல்லட்டும்! ஆனால், விதண்டாவாதமாகக் கருத்துகளைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். அரசின் கொள்கைகள் குறித்து பொதுவெளியில் விளக்கம் அளிப்பதும்-விவாதம் செய்வதும் அவர் வகிக்கும் பதவிக்கு அழகு அல்ல. தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் திராவிடக் கொள்கை, சமத்துவம், சமூக நீதி,

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

பகுத்தறிவு மற்றும் சுயமரியாதை ஆகியவை மக்களின் மனங்களில் இருப்பது அவருக்கு ஏற்கவியலாத ஒன்றாக உள்ளது. பொது மேடைகளில் அவர் நமது தமிழ்ப் பண்பாடு, இலக்கியம் மற்றும் சமூக அமைப்பிற்கு எதிரான கருத்துகளையும் தெரிவித்து இருக்கிறார், தெரிவித்துக்கொண்டும் வருகிறார். அவரது அபத்தமான கருத்துகளுக்கு அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்புச் செய்திகளை உடனுக்குடன் வெளியிட்டு வருகிறார்கள்.

அவர் தெரிவிக்கும் கருத்துகளை வைத்துப் பார்க்கும்போது, அவருக்கும் தமிழ்நாடு சட்டமன்றத்துக்குமான பிரச்சினை என்பது நாம் நிறைவேற்றி அனுப்பும் சட்டங்களில் மட்டுமல்ல; சமூக நீதியாகவும் இருக்கிறது. அதனால்தான் முடிந்தளவு அனைத்து வகையிலும் முட்டுக்கட்டை போட்டு வருகிறார்.

அவருக்கு முடிந்தவரை, அனைத்து வகையிலும் நாம் உணர்த்திக் கொண்டிருக்கிறோம். தமிழ்நாடு வளர்ந்திருப்பதை, வளர்வதைக் காணப் பொறுக்காத காரணத்தினால்தான் என்னவோ, ஆளுநர் அவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுகிறார் என்று நடுநிலையாளர்கள் கருதுகிறார்கள்.

"அரசியல் சட்டத்திற்கு முழுவதும் மாறாக, அரசுடன் ஆளுநர் மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகிறார். எனவே, அவருக்கு உரிய அறிவுரைகளை வழங்க வேண்டும்" என்று மாண்புமிகு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து, இக்கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தியுள்ளார்கள். நானும் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு, இப்பிரச்சினை குறித்து கடிதமும் எழுதியிருக்கிறேன். இந்த அனைத்து முயற்சிகளும் எவ்வித பயனும் தராததால்தான், தமிழ்நாடு அரசு மாண்பமை உச்ச நீதிமன்றத்தின் கதவுகளைத் தட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

மாண்புமிகு ஆளுநர் அவர்களிடம் தேங்கிக் கிடக்கும் அனைத்துக் கோப்புகள், சட்டமுன்வடிவுகள் உள்ளிட்ட விவரங்களைக் குறிப்பிட்டு, மாண்பமை உச்ச நீதிமன்றத்தில், தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்தது.

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 நவம்பர் 18 முற்பகல் 10–20

தமிழ்நாடு அரசு எடுத்துரைத்த வாதங்களைக் கவனித்துக் கேட்ட மாண்பமை உச்ச நீதிமன்றம், ஆளுநரின் செயல்பாடுகள் குறித்து தெரிவித்த கருத்துகள், தமிழ்நாடு சட்டமன்றத்திற்குக் கிடைத்த முதற்கட்ட வெற்றியாகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் இத்தருணத்தில், மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவசர அவசரமாக 10 சட்டமுன்வடிவுகளுக்கு எவ்வித ஒப்புதலும் வழங்காமல், கடந்த 13–11–2023 அன்று கோப்புகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்திற்குத்தான் முழு அதிகாரமும், முதன்மையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-ன்படி, இந்தச் சட்டமுன்வடிவுகளை மீண்டும் பரிசீலித்து, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் திருப்பி அனுப்பி வைக்கும் அதிகாரம் இந்த மாமன்றத்திற்குத்தான் உள்ளது. அந்த அடிப்படையில்தான், இந்த 10 சட்டமுன்வடிவுகளும் இன்றைக்கு உங்கள்முன் வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாட்டு மக்களின் நலன் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, இந்திய நாடு இதுவரை கண்டிராத முன்னோடித் திட்டங்களை நிறைவேற்றி, மக்களின் எண்ணங்களில் இடம் பிடித்துள்ளது திராவிட முன்னேற்றக் கழக அரசு. இதனை அரசியல் ரீதியாக சகித்துக்கொள்ள இயலாத சிலர், அரசு நிர்வாகத்தை முடக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஆளுநர் என்ற உயர்ந்த பதவியின் மூலமாக அரசியல் செய்ய விரும்புகிறார்கள்.

ஆளுநர் பதவி என்பதே அகற்றப்பட வேண்டிய பதவியாக இருந்தாலும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அது இருக்கும் வரை மக்களாட்சித் தத்துவத்துக்கு அடங்கி இருக்க வேண்டியதுதான் மரபு ஆகும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பா.ஜ.க. ஆளாத மாநிலங்களில், ஆளுநர்களின் மூலமாக குடைச்சல் கொடுத்து வருகிறார்கள். இப்போது மாண்பமை உச்ச நீதிமன்றம் தலையில் ஓங்கி குட்டு வைத்தவுடன் அவசர

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

அவசரமாக கோப்புகளைத் திருப்பி அனுப்புவதும், (மேசையைத் தட்டும் ஒலி) சில கோப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதும் என நாடகம் ஆடுகின்றார் ஆளுநர்.

அவருக்குத் தெரிந்ததை அவர் செய்கிறார். செய்துவிட்டுப் போகட்டும். ஆனால் நாம் எப்போதும் சட்டத்தின் வழி நடப்பவர்கள். எனவே, அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 200-ன்படி, அவர் எந்தக் காரணமும் குறிப்பிடாமல் திருப்பி அனுப்பி வைத்துள்ள 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றித் தருமாறு நூற்றாண்டு கண்ட இச்சிறப்புமிக்க சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியபடி, மக்களுக்கும் மனசாட்சிக்கும் மட்டுமே நாங்கள் கட்டுப்பட்டவர்கள் என்பதையும் பதிவு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) பின்வரும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்:

முற்பகல் 10-25

அரசினர் தனித் தீர்மானம்

"பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 2 சட்டமுன்வடிவுகள், பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் ஆய்வு செய்யப்பட்டு, நிறைவேற்றப்பட்ட 8 சட்டமுன்வடிவுகள் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக உடனுக்குடன் அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், நெடுநாட்கள் நிலுவையில் வைத்திருந்து, கடந்த 13-11-2023 அன்று எவ்வித காரணமும் குறிப்பிடாமல், ஏற்பிசை அளிப்பதை நிறுத்திவைப்பதாக (I withhold Assent) சட்டமுன்வடிவுகளில் குறிப்பிட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அச்சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பியுள்ளார்கள். காரணம் ஏதும் குறிப்பிடாமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைத்துள்ளதாகத் தெரிவித்து, சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பியுள்ளது ஏற்புடையதல்ல என இப்பேரவை கருதுகிறது.

இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பு 200-ன் வரம்புரையின்கீழ், மேற்காணும் சட்டமுன்வடிவுகள் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு ஆளுநரின் ஏற்பிசைவுக்காக முன்னிடப்படுமாயின்,

[திரு. மு.க. ஸ்டாலின்] [2023 நவம்பர் 18

மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதற்கு ஏற்பிசைவு அளித்திட வேண்டும் என்பதை அவை கவனத்தில் கொள்கிறது.

ஏற்கெனவே பதினைந்தாவது சட்டமன்றப் பேரவையில் 8-1-2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 9-1-2020 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/2020);

9-1-2020 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட, 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2020);

பதினாறாவது சட்டமன்றப் பேரவையில்,

25-4-2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 24/2022);

5-5-2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10-5-2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2022);

9-5-2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 10-5-2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2022);

10-5-2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2022);

18-10-2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 19-10-2022 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம்

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/2022);

19–10–2022 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2022 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/2022);

19–4–2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21–4–2023 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2023) மற்றும்

20–4–2023 அன்று அறிமுகம் செய்யப்பட்டு, 21–4–2023 ஆம் நாளன்று ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2023)

ஆகிய சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 143-ன்கீழ் இப்பேரவை மறு ஆய்வு செய்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். பேச அனுமதியளிக்கிறேன். மாண்புமிகு ஆளுநர் அவர்களால் கடந்த 13–11–2023 அன்று திருப்பி அனுப்பப்பட்ட 10 சட்டமுன்வடிவுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானமாகக் கொண்டு வந்து, மறு ஆய்வு செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு அனுமதி அளிக்கப்படுவதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தம்முடைய கருத்துகளைப் பேச வேண்டும். பேச முன் வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் நம்முடைய சட்டமன்ற மரபு, மாண்பு, இறையாண்மையையும் பாதுகாத்திட இந்திய குடியரசுத் தலைவரைப் பற்றியோ

[பேரவைத் தலைவர்] [2023 நவம்பர் 18

அல்லது இந்திய நாட்டில் உள்ள நீதிபதிகள் பற்றியோ அல்லது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் பற்றியோ களங்கம் கற்பிக்கும் வகையில் எந்தக் கருத்துகளையும் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதற்கான அனுமதி உங்களுக்கு மறுக்கப்படுகிறது. ஏற்கெனவே, தெரிந்த ஒன்றுதான். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை அடிப்படையாக வைத்து கருத்துகளைச் சொல்ல வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற, தமிழ்நாட்டில் வாழ்கின்ற 7 கோடி மக்களின் உள்ளுணர்வுகளை, நியாயமான அபிலாஷைகளை, கோரிக்கைகளை நாட்டுக்குத் தேவையான சட்டங்களை இயற்றுகின்றது இந்த மாமன்றம். அந்தச் சட்டங்களை இயற்றி, தமிழ்நாட்டினுடைய அரசமைப்புச் சட்டத்தின் தலைவராக இருக்கின்ற ஆளுநர் அவர்களுக்கு நாம் அனுப்பிவைக்கின்றபோது, ஆளுநர் அவர்கள் அந்தச் சட்டத்திற்கு உரிய ஏற்பிசைவு அளித்து, உடனடியாக கையொப்பமிட்டு, அரசு ஏனைய நடைமுறைக்கு அந்தச் சட்டம் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகத்தான் தமிழக ஆளுநராக இருந்து வருகிறார்கள். ஆனால், ஆளுநர் தனது கடமையை, தன்னுடைய பணியை இந்திய அரசமைப்புச் சட்டத்தின்பால் எடுத்துக்கொள்ளப்பட்ட உறுதிமொழியைச் செய்யத் தவறுகின்றபோது அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுக்கின்ற வகையில், விதி 143-ன்படி, மறு ஆய்வு செய்வதற்காக இந்தப் பேரவை இன்றைக்குக் கூடியிருக்கிறது. இந்திய அரசமைப்புச் சட்டம் நமக்குத் தந்திருக்கிற உட்பிரிவு 200-ன்கீழ் இன்றைக்கு மீண்டும் இந்தச் சட்டத்தை இயற்றி, நாம் ஆளுநரின் ஏற்பிசைவுக்கு அனுப்பவிருக்கிறோம். அப்படி அனுப்பவிருக்கிற இந்த அரசின் சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இந்த அவையில் இன்று முன்மொழிந்து, வாசித்திருக்கின்றார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் முன்மொழியப்பட்ட சட்டமுன்வடிவுகள் என்பது தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளையும், நமக்கு வாக்களித்து இந்த ஆட்சி அதிகாரத்தில் அமர வைத்திருக்கின்ற தமிழக மக்களின் நியாயமான கோரிக்கைகளையும் நிறைவேற்றத் தவறிய ஆளுநர் அவர்களை, நீங்கள் குறிப்பிட்டதுபோல், அவர் அரசியல் ரீதியாக, அரசியல்

2023 நவம்பர் 18] [திரு. தி. வேல்முருகன்]

சாசன சட்டத்திற்குட்பட்டு செயல்பட நியாயமான தன்னுடைய நீதியான கருத்துரையின்பால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த அரசினர் தனித் தீர்மானத்தை இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் சார்பாக நான் வரவேற்று தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்ப் பல்கலைக்கழக (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்களே அதைக் குறிப்பிட்டுவிட்டார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பல்கலைக்கழகம் என்று முடியுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத் (திருத்தச்) சட்டமுன்வடிவு ஆகிய 10 மசோதாக்களையும் நாம் ஒரே நேரத்தில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்கின்றபோது, நாளைய வரலாற்றில் இந்த 10 மசோதாக்களையும் குறித்து இந்த மன்றம் ஆய்ந்தறிந்து, ஆய்வு செய்து அதற்குப் பிறகு ஏகமனதாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றதாக வரலாற்றுக் குறிப்புகளில் இடம்பெற வேண்டும் என்பதற்காகத்தான் நான் இந்த 10 மசோதாக்களையும் வாசித்து அளித்திருக்கிறேன். இந்த 10 மசோதாக்களையும் இன்றைக்கு திருப்பியனுப்பிய ஆளுநர் அவர்களுக்கு எமது கட்சியின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், ஜனநாயக சக்திகளின் சார்பாகவும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின் நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு இந்த மண்ணில் வாழ்கின்ற அனைத்து மக்களின் சார்பாகவும், என்னுடைய கடுமையான கண்டனத்தை நான் இங்கு பதிவு செய்கிறேன். உச்ச நீதிமன்றம் இதிலே தலையிட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

[திரு. தி. வேல்முருகன்] [2023 நவம்பர் 18

அவர்களால், தமிழ்நாடு வழக்கறிஞர் பெருமக்களால் தமிழக அரசின் சார்பாக உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையிலும், பஞ்சாப்பில் அந்த அரசால் தொடுக்கப்பட்ட வழக்கின் அடிப்படையிலும் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர்கள் தலைமையிலான அமர்வு மிகச் சரியாக இந்த ஆளுநர் என்று சொல்லக்கூடியவர்களை குட்டியும் காட்டியிருக்கிறார்கள், சுட்டியும் காட்டியிருக்கிறார்கள்.

முற்பகல் 10–35

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அவர்களுக்கு குட்டு வைத்தால்கூட ஏற்றுக்கொள்ள மறுக்கிற மனம் படைத்தவர்களாக ஏதோ ஒரு சித்தாந்தத்தின் அடிப்படையில், ஏதோ ஒரு சிந்தனையின் அடிப்படையில் ஆளுநராகப் பொறுப்பேற்றுக் கொண்டு, ஆளுநர் பொறுப்பிற்கு வந்ததிலிருந்தே தொடர்ச்சியாக அவருடைய நடவடிக்கைகள் என்பது மக்களுடைய ஜனநாயக மாண்புகளுக்கு எதிராக இருக்கின்றன. ஏழு கோடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அரசு இயற்றிய பல சட்டங்கள் இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சிகளும், பிரதான எதிர்க்கட்சியும் ஏற்றுக்கொண்டு, அங்கீகரிக்கப்பட்டு, இந்த அவையில் நிறைவேற்றி, அனுப்பி வைக்கப்படுகின்ற சட்டங்களைத் தூக்கி குப்பையில் போடுவதுபோல வீசிவிட்டு அவர் இன்றைக்கு அமைதி காக்கிறார். அதைக் காத்திருப்பு பட்டியலில் வைத்திருந்தால் அந்தச் சட்டம் காலாவதியாகிவிட்டது என்று பத்திரிகையாளர்களிடத்திலே பேசுகிறார். தமிழ்நாட்டின் இலச்சினையைத் தூக்கி எறிகிறார். தமிழ்நாடு என்ற பெயரைத் தூக்கி எறிகிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு கொண்டு வருகின்ற அரசு அறிக்கையை, ஆளுநர் உரையின்போது வாசித்தளிக்க மறுக்கிறார். தந்தை பெரியார் என்றாலே கசக்கிறது; பேரறிஞர் அண்ணா என்றாலே கசக்கிறது; தலைவர் கலைஞர் என்றாலே கசக்கிறது. சமூக நீதி என்ற வரியை படிக்க மறுக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போதுமா?

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒன்றுமே பேசவில்லையே! 10 மசோதாக்கள் குறித்து விவாதிக்க வாய்ப்பு தந்திருக்கிறீர்கள். இதற்காகத்தான் சிறப்புக் கூட்டம். இதுகுறித்து. . .

2023 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ஏற்கெனவே 10 மசோதாக்களும் இங்கு கொண்டுவரப்பட்டு, ஆய்வு செய்து, கருத்துக்களைச் சொல்லி, அதற்குப் பிறகுதான் அவையின் ஒப்புதலோடு அனுப்பப்பட்டுள்ளன. அதில் ஒரு full stop, comma கூட மாற்றாமல்தான் திரும்பவும் அனுப்பப் போகிறோம். அதனால், நீங்கள் வழிமொழிந்துவிட்டாலே போதும்.

திரு. தி. வேல்முருகன்: சரி, மகிழ்ச்சி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொல்லிவிட்டீர்கள், appeal-லே இல்லை. ஆனாலும், உச்ச நீதிமன்றம் இன்றைக்குச் சுட்டிக்காட்டிய பிறகு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவசரம் அவசரமாக இந்த 10 மசோதாக்களையும் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டம் வகுத்து அளித்ததன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்தத் தீர்மானத்தையும், இந்த 10 சட்ட மசோதாக்களையும் நாங்கள் வரவேற்கிறோம். இது மக்களுக்கானது, இந்த மண்ணுக்கானது, இந்த இனத்திற்கானது, இந்த மக்களின் மேம்பாட்டிற்கானது. இன்றைக்கு அண்ணா பல்கலைக்கழகத்தில் தொடங்கி, தமிழ்நாட்டில் இருக்கின்ற மீன்வளப் பல்கலைக்கழகம், கால்நடை பல்கலைக்கழகம், பொறியியல் பல்கலைக்கழகம் அல்லது சென்னை பல்கலைக்கழகம் என்று எந்த பல்கலைக்கழகத்திற்கு சட்டம் இயற்றினாலும், அது இந்த மக்களின் வாழ்வுரிமைக்காக இயற்றப்படுகின்ற சட்டங்களே தவிர, இந்த மக்களுக்கு எதிராக இயற்றப்படுகின்ற சட்டங்கள் அல்ல. ஆகையால், இந்த 10 சட்டங்களும், குறிப்பாக, கல்வி, ஆராய்ச்சி, வேளாண்மை, மருத்துவம் தொடர்பான பல்கலைக்கழகச் சட்டங்கள் என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும். இந்தச் சட்டங்களை எந்தக் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பினார் என்பதை நாடே அறியும், நாட்டு மக்களும் அறிவார்கள் என்பதை இந்த நேரத்திலே பதிவு செய்கிறேன். சட்டத்திற்குட்பட்டு செயலாற்ற வேண்டிய மாண்புமிகு ஆளுநர் அவர்கள், சட்டத்திற்குட்பட்டு செயலாற்ற மறுக்கின்ற காரணத்தினால், அவருடைய நடவடிக்கைகளை மிக வன்மையாகக் கண்டித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்று, 10 மசோதாக்களையும் மீண்டும் இயற்றி அனுப்புவோம். அதை அங்கீகரிப்பதைத் தவிர வேறு வழியில்லை, தமிழ்நாட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர

[திரு. தி. வேல்முருகன்] [2023 நவம்பர் 18

மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு வேறு வழியில்லை என்று கூறி அரசினர் தனித் தீர்மானத்தை வரவேற்று அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக மனமார வரவேற்கின்றோம். சில சட்டமுன்வடிவுகளை ஏறக்குறைய 4 ஆண்டுகள் கழித்து, தமிழகத்தின் மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஆளுநர் மாளிகையிலிருந்த மசோதாக்களை எந்தக் காரணமும் சொல்லாமல் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். தமிழ்நாடு அரசை உச்ச நீதிமன்றத்தை நாட வைத்திருப்பது வருத்தத்திற்குரியது. நமது மாநிலத்தில் இருக்கிற ஆளுநருக்கு எதிராக நாம் உச்ச நீதிமன்றத்தை நாட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. உச்ச நீதிமன்றம் பலமுறை சொல்லியிருக்கிறது, ஆளுநர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்குக் கட்டுப்பட்டவர். இந்த அமைச்சரவை என்ன சொல்கிறதோ அதைச் செய்ய வேண்டுமென்று பல முறை சொல்லியும்கூட, மறுபடியும், மறுபடியும் இதைச் செய்துகொண்டே இருக்கிறார். எய்தவர்கள் அமர்ந்துகொண்டு வேடிக்கை பார்க்கிறார்கள். அம்பு, எய்தவர்கள் சொன்னதைவிட கொஞ்சம் அதிகமாகக் குதிக்கிறது. கண்டிப்பாக, தற்போது, பல மாநிலங்களிலே ஆளுநர்களுடைய இந்தச் செயல்பாடுகள், டெல்லியில் இருக்கிற ஆட்சி மாற்றத்திற்கு வழிவகுக்கக்கூடியதாக அமைந்துவிடும் என்பதைத்தான் மக்கள் மத்தியிலே இன்றைக்குப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–40

மாண்புமிகு ஆளுநர் அவர்கள், என்றைக்காவது அதிகாரிகளையோ, மாண்புமிகு அமைச்சர்களையோ, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையோ அழைத்து, தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்களைப் பற்றி பேசியது உண்டா? மாண்புமிகு ஆளுநர் அவர்கள், தமிழகத்திற்கு இந்த நல்லதை செய்திருக்கிறேன், ஒன்றிய அரசிலிருந்து இதைக் கொண்டு வந்திருக்கிறேன், உங்களால் முடியாததை நான் செய்திருக்கிறேன் என்று ஏதாவது சொன்னது உண்டா? தமிழ்நாடு அரசின்

2023 நவம்பர் 18] *[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்]*

செயல்பாடுகளை முடக்குகின்ற முயற்சியைத்தான் அவர் தொடர்ந்து செய்துகொண்டிருக்கிறார். இது இன்றைக்கு உள்ள போராட்டம் அல்ல, 60 ஆண்டு கால போராட்டம். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அவ்வப்போது இதுபோன்ற பிரச்சினைகளைச் செய்துகொண்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சிம்லாவில் நடந்த பேரவைத் தலைவர்கள் மாநாட்டில் பேசியபோதுகூட பேசினார். 'ஆளுநர் என்றால், அவர் மசோதாக்களை வைத்துக்கொள்வதற்கு ஒரு காலவரையறை வேண்டும். அது இல்லை என்றால், அனைத்து மாநிலங்களிலும் ஜனநாயகம் பாதிக்கப்படும்' என்பதை அழுத்தமாக சிம்லாவிலேயே அன்றைக்குச் சொன்னார். அதைத்தான் உச்ச நீதிமன்றம் இன்றைக்குச் சொல்லியிருக்கிறது. தமிழ்நாடு அரசின் செயல்பாடுகளை, தமிழக மக்களின் நலத் திட்டங்களை அவர் முடக்குவதற்கு என்ன காரணம் என்பதைக்கூட சொல்வதற்கு எதுவுமே இல்லை.

60 ஆண்டு காலம் என்று சொன்னேன், பேரறிஞர் அண்ணா அவர்கள் காலத்தில் தொடங்கியது. பேரறிஞர் அண்ணா அவர்கள், 'ஆளுநர் பதவி வேண்டாம். இது ஜனநாயகத்திற்குக் கேடானது, மக்களாட்சிக்குக் கேடானது' என்று அன்றைக்குச் சொன்னார். தொடர்ந்து இத்தனை ஆண்டுகள் கழித்து, இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆட்சியிலே இது ஒரு முடிவுக்கு வரும் என்று நான் நினைக்கின்றேன். இது முடிய வேண்டும், இது தொடரக் கூடாது. நமக்கு மட்டுமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் இது பொதுவானது. எப்படி, கோட்டையில் கொடியேற்றுவதற்கு நம்முடைய மாநிலம் அனுமதி வாங்கி, அனைத்து மாநிலங்களிலும் முதலமைச்சர்கள் கொடியேற்றிக் கொண்டிருக்கிறார்களோ, அதேபோல பெண்களுக்குச் சொத்துரிமை, தமிழ்நாடு வழிகாட்டியது. இன்றைக்கு பெண்களுக்கான பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி தமிழ்நாடு அரசு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட இந்தச் சூழலில், மாண்புமிகு ஆளுநர் அவர்களுடைய இந்தச் செயல்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டிய உச்சக் கட்டம் வந்துவிட்டது. நாம் எதற்கும் துணிந்தாக வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆனால், உச்ச நீதிமன்றமும் நமக்குத் துணையாக இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டியிருக்கிறது. கண்டிப்பாக நமக்கு

[திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்] [2023 நவம்பர் 18

வேலையில்லாமல் உச்ச நீதிமன்றமே காலவரையறையை நிர்ணயித்து, ஆளுநர்கள் மசோதாக்களை இதற்குமேல் வைத்துக்கொள்ளக் கூடாது என்பதை முடிவு செய்யும் என்று நம்புவோம். அப்படி தவறினால், இது சர்வாதிகார ஆட்சியின் தொடக்கமாக இருக்கும். இந்தியா முழுவதும் சர்வாதிகார ஆட்சிக்கு அடிகோலியதாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே வலியுறுத்தி, நான் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த அரசினர் தனித் தீர்மானத்தை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பாக மீண்டும் நெஞ்சார வரவேற்கின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 15-வது சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட 2 சட்டமுன்வடிவுகள் மற்றும் தற்போதைய 16-வது சட்டமன்றத்தில் இயற்றப்பட்ட 8 சட்டமுன்வடிவுகளை நிறுத்தி வைப்பதாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அரசுக்குத் தெரிவித்திருக்கக்கூடிய நிலையில், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 200-வது பிரிவின்கீழ், மீண்டும் அந்த 10 சட்டமுன்வடிவுகளையும் நிறைவேற்றி, மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் திரும்ப அனுப்பக்கூடிய தீர்மானத்தை முன்மொழிந்து பேசியதை, நான், மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றேன்.

முன்னுரையாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த கருத்துகளையும் நான் மனதார வரவேற்கின்றேன். குறிப்பாக, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசுக்கு எதிராக, ஒன்றிய அரசின் பிரதிநிதியாக இந்த மாநிலத்திற்கே தொடர்பில்லாதவர்போல் இங்கே உட்கார்ந்துகொண்டு, சட்டமன்றம் இயற்றக்கூடிய சட்டமுன்வடிவுகள், அதேபோல அரசு முடிவெடுத்து அனுப்பக்கூடிய கோப்புகள் ஆகியவற்றை காலவரம்பில்லாமல், ஒப்புதல் அளிக்காமல் இருப்பது, இந்திய ஜனநாயகத்தை மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் என்ற ஒரு அழுத்தமான கருத்தை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே மிகச் சரியாக எடுத்துரைத்திருக்கிறார்கள். அதற்கு ஒருபடி மேலே சென்று ஆளுநர் இப்படிச் செயல்படுவது சட்டத்திற்கு விரோதமானது,

2023 நவம்பர் 18] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

மக்களுக்கு விரோதமானது, ஜனநாயகத்திற்கு விரோதமானது, மனசாட்சிக்கு விரோதமானது என்று தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய அவை கூடியபோது நம்மைவிட்டுப் பிரிந்து சென்ற பல ஆளுமைகளுக்கு இரங்கல் தீர்மானத்தை முன்மொழிந்தீர்கள். அதில் ஒன்று, நம்மிடையே 102 வயது வரை வாழ்ந்து, சில நாட்களுக்கு முன்பு மறைந்த விடுதலைப் போராட்ட வீரர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய முதுபெரும் தலைவர் திரு. சங்கரய்யா அவர்கள் தொடர்பான அந்த இரங்கல் தீர்மானம். தமிழர்களுடைய நெஞ்சமெல்லாம் கொதிக்கின்றது. காரணம் 1941 ஆம் ஆண்டிலே விடுதலைப் போராட்டம் நடைபெற்ற அந்த நேரத்திலே, இன்றைக்கு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்புக் கல்லூரியாக இருக்கக்கூடிய, Affiliated College ஆக இருக்கக்கூடிய அமெரிக்கன் கல்லூரியிலே படித்துக் கொண்டிருந்த நேரத்திலே, தேர்வை எழுத வேண்டுமா, விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட வேண்டுமா என்ற கேள்வி அவருக்குள் எழுந்தபோது, தேர்வை ஒதுக்கித் தள்ளிவிட்டு விடுதலைப் போராட்டத்திலே களம் கண்டவர் தோழர் சங்கரய்யா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட ஒரு மாபெரும் விடுதலைப் போராட்ட வீரருக்கு—அவர் படித்திருந்தால் B.A. பட்டம் பெற்றிருக்கலாம். அதற்குப் பிறகு, அவருடைய தந்தையினுடைய விருப்பத்தை நிறைவேற்றக்கூடிய வகையிலே சட்டம் பயின்றிருக்கலாம். ஆனால், விடுதலைப் போராட்ட வீரர் என்ற மாபெரும் பட்டத்தைப் பெற்ற அவருக்கு, தமிழ்நாட்டுக்கும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கும் பெருமை சேர்க்கின்ற வகையில் மதிப்புறு முனைவர் பட்டத்தை திரு. சங்கரய்யாவுக்கு அளிப்பதற்கு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தினுடைய ஆட்சிமன்றக் குழு, சிண்டிகேட் தீர்மானத்தை நிறைவேற்றியது. அது ஒட்டுமொத்த தமிழக மக்களுடைய உணர்வு, அந்த உணர்வை மதிக்காமல், 'நான் அவருக்கு முனைவர் பட்டம் அளிக்கமாட்டேன்' என்று சொன்னால், நிச்சயமாக அது சர்வாதிகாரத்தினுடைய உச்சமே தவிர, வேறு ஒன்றும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 நவம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது? மக்களவையினுடைய Secretary General ஆக இருந்த திரு. P.D.T. Achary அவர்கள் ஒரு கட்டுரையிலே மிகத் தெளிவாக, மிகச் சரியாக பல்வேறு கருத்துகளை அரசமைப்புச் சட்டத்தினுடைய அடிப்படையிலே சொல்கிறார். அரசமைப்புச் சட்டத்தினுடைய 154(1) பிரிவு ஆளுநர் என்ன செய்யவேண்டும் என்று தெரிவித்துள்ளது. 'The Governor can act only on the aid and advice of the Council of Ministers' அமைச்சரவையினுடைய ஆலோசனையின் அடிப்படையில் மட்டும்தான் ஆளுநர் செயல்பட வேண்டுமென்று அரசமைப்புச் சட்டத்தினுடைய 154(1) பிரிவு சொல்கிறது என்பதை விளக்குகிறார். 1974 ஆம் ஆண்டில் இதுபோன்ற ஒரு வழக்கு வந்தது. Shamsher Singh Vs. State Of Punjab என்ற வழக்கிலே உச்ச நீதிமன்றம் சொல்கிறது, ஆளுநர்கள் 'exercise their formal constitutional powers only upon and in accordance with the advice of their Ministers' என்று சொல்கிறது. அதாவது, மாண்புமிகு அமைச்சரவையினுடைய ஆலோசனைகளின் அடிப்படையிலே மட்டும்தான் செயல்பட முடியும், தன்னுடைய சுயநலத்தின் அடிப்படையில் ஆளுநர்கள் செயல்பட முடியாது என்று உச்ச நீதிமன்றம் மிகத் தெளிவாக 1974-லேயே விளக்கியிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–50

1935-ல் இயற்றப்பட்ட சில சரத்துகள் நம்முடைய அரசமைப்புச் சட்டத்திலே இருக்கின்றது. குறிப்பாக, ஆளுநர் தொடர்பான பிரிவு, 1935-லேயே, விடுதலைக்கு முன்பாகவே இருந்த ஆங்கிலேயர் காலத்தினுடைய சட்டத்திலே அப்படியே வந்திருக்கின்றது. இது தொடர்பான விவாதம் Constituent Assembly-யிலே அரசியல் நிர்ணய சபையிலே நடைபெற்றபோது டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் பேசினார். அவர் என்ன சொன்னார் தெரியுமா? 'The Governor, under the Constitution has no functions which he can discharge by himself; no functions at all' என்று சொல்லியிருக்கிறார். அரசமைப்புச் சட்டத்தின்படி, ஓர் ஆளுநர் தனியாக இயங்குவதற்கு எந்தவிதமான அதிகாரமும் இல்லை. அவர், தனியாக, தன்னிச்சையாக செயல்படவே முடியாது என்று, நீங்கள்

2023 நவம்பர் 18] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

சொல்லவில்லை; நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை; நாங்கள் சொல்லவில்லை; டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள், விடுதலை பெற்ற இந்தியாவில், ஆளுநர்கள் எப்படி செயல்பட வேண்டும் என்பதற்கு ஒரு தெளிவான விளக்கத்தை அளித்திருக்கிறார். அதேபோல், ஒன்றிய அரசு மற்றும் மாநில அரசுகளுக்கு இடையேயான உறவுமுறைகளை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட சர்க்காரியா ஆணையமும், 'So long as the Council of Ministers enjoys the confidence of the Assembly, its advice is binding on the Governor' என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது. சட்டமன்றத்தினுடைய நம்பிக்கையை, ஓர் அமைச்சரவை பெற்றிருக்கக்கூடிய காலமெல்லாம், ஆளுநர், அந்த அமைச்சரவை தரக்கூடிய/சட்டமன்றம் இயற்றக்கூடிய விஷயங்களுக்கு கட்டுப்படுவதைத் தவிர வேறு வழியில்லை என்று சொல்லியிருக்கிறது. 2016 ஆம் ஆண்டில், நபாம் ராபியா வழக்கிலும், உச்ச நீதிமன்றத்தின் 5 நீதிபதிகள் கொண்ட அமர்வானது மீண்டும் இதே சட்டத்தை/நிலைப்பாட்டை தெரிவித்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 361 ஆவது பிரிவின்கீழ், ஓர் அமைச்சரவை எடுக்கக்கூடிய முடிவு, ஒரு சட்டமன்றம் நிறைவேற்றக்கூடிய சட்டமுன்வடிவு குறித்து பிரச்சினை எழுந்தால், நீதிமன்றத்தில் ஆளுநர் சென்று பதில் சொல்லத் தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர்களும்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர, responsibility is not on the Governor at all. *அவருக்கு எந்தப் பொறுப்புமே கிடையாது; அமைச்சரவைக்குத்தான் பொறுப்பு என்று சொல்லும்போது, மக்களுடைய நலனுக்காக, தமிழக மக்களுடைய நலனுக்காக நாம் இயற்றக்கூடிய சட்டமுன்வடிவுகளை நிறுத்தி வைப்பதற்கு ஆளுநருக்கு எந்த அதிகாரமும் இல்லை. அரசமைப்புச் சட்ட ரீதியாக மட்டுமே பேசுகின்றோம்.*

அதேபோல், தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றத்தினுடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, 24 ஆகஸ்ட், 2023 அன்று 49 வாழ்நாள் சிறைவாசிகளை விடுதலை செய்வதற்கான கோப்பினை ஆளுநருக்கு அனுப்பியிருக்கிறார்கள். சற்றேறக்குறைய 3 மாதங்கள் ஆகிவிட்ட நிலையில், அந்தக் கோப்பிற்கும் ஒப்புதல் அளிக்கப்படாமல் அது

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2023 நவம்பர் 18 உறங்கிக் கொண்டிருக்கிறது. இதுபோன்று, மக்கள் நலனுக்கான பல கோப்புகளையும் அவர் கிடப்பிலே வைத்திருக்கக்கூடிய ஒரு சூழலில், நமது மாநில அரசாங்கத்தின் சார்பாக இந்த விஷயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்றத்தை நாடியிருப்பது வரவேற்கத்தக்கது. நிச்சயமாக இந்தப் பிரச்சினைக்கு முடிவு வேண்டும்; இதோடு நாம் நின்றுவிடக் கூடாது. பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல், 'ஆட்டுக்கு தாடி தேவையில்லை, நாட்டுக்கு ஆளுநர் தேவையில்லை' என்ற அந்தத் திசையை நோக்கிச் செல்லும்போதுதான், (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றிய அரசாங்கத்தினுடைய பிரதிநிதியாக இங்கே வரக்கூடிய அந்த சர்வாதிகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கப்படும் என்று சொல்லி, இந்தத் தீர்மானத்தை நான் வரவேற்று அமர்கிறேன், நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதினைந்தாவது சட்டமன்றம் மற்றும் பதினாறாவது சட்டமன்றப் பேரவையில் அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு நிறைவேற்றி அனுப்பிய 10 சட்டமுன்வடிவுகளை மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கிடப்பில் போட்டுவிட்டு, தற்போது திருப்பி அனுப்பியிருப்பது நம்முடைய சட்டமன்றத்தை மட்டுமின்றி, தமிழகத்தில் வாழ்கின்ற மக்களை அவமானப்படுத்துவதாகத் தெரிகிறது. சமத்துவம், சமூக நீதி, பகுத்தறிவுச் சிந்தனை கொண்ட தமிழ்நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு இது ஏமாற்றமளிப்பதாக இருக்கின்றது. அந்தச் சட்டமுன்வடிவுகளை, பல்கலைக்கழக திருத்தச் சட்டமுன்வடிவுகளை மறு ஆய்வு செய்து மீண்டும் நிறைவேற்றி, கவர்னரின் ஒப்புதலுக்காக அனுப்புவது குறித்து நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த அரசினர் தனித் தீர்மானத்தை மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் ஆதரிக்கிறேன், வரவேற்கிறேன்.

முற்பகல் 10–55

அரசமைப்புச் சட்டப்படி மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் இருக்கின்ற அமைச்சரவை முடிவை ஏற்று,

2023 நவம்பர் 18] [டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்]

செயல்படுவதே ஆளுநர் அவர்களின் கடமை. அதைச் செய்யத் தவறிய அந்த ஆளுநர் அவர்கள் இப்போது பதவி விலகி ஓட வேண்டும்.

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்"

என்று வள்ளுவர் சொன்னதுபோல், அவர் நல்ல ஆலோசகர்களை பக்கத்தில் வைத்துக்கொண்டு செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தனித் தீர்மானத்தை ஆதரிப்பதோடு, நம்முடைய விடுதலைக்காகப் பாடுபட்ட தோழர் சங்கரய்யா அவர்களுக்கு மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் முனைவர் பட்டம் கொடுப்பதைக்கூட ஏற்றுக்கொள்ளாத இந்த கவர்னரை நான் மிகவும் கண்டித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழரை கோடி தமிழ் மக்களுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கின்ற மன்றமாக தமிழ்நாடு சட்டமன்றம் விளங்குகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு அமைச்சரவை கூடி பெரும்பான்மை சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆதரவோடு நிறைவேற்றப்பட்ட 10 சட்ட மசோதாக்களை கடந்த பல மாதங்களாக ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல், திருப்பி அனுப்பியிருக்கிறார். தொடர்ந்து தமிழக ஆளுநர் அவர்கள் மாநில அரசோடு இன்றைக்குப் போட்டியாகச் செயல்பட்டு வருகிறார். அதோடில்லாமல், ஆளுநர் அவர்கள் சட்டமன்றத்திலே நிறைவேற்றப்பட்ட மசோதாக்களை நிறைவேற்றவில்லையென்றால், அது நிராகரிக்கப்பட்டதாக * சிறுகுழந்தைத்தனமாக பொதுவெளியிலே பேசி வருகிறார். அதோடில்லாமல் இன்றைக்கு ஆளுநர் அவர்கள், ஏற்கெனவே கூறியதைப்போல், (குறுக்கீடு)*

---

* *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.*

[*2023 நவம்பர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் இருங்கள், (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்துவிடட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *என்பதை சிறுகுழந்தைத்தனமாக என்று சொல்லிவிடலாமா?*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக ஆளுநர் அவர்கள் தொடர்ந்து தமிழக அரசோடு மோதல் போக்கைக் கடைபிடித்து வருகிறார்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமச்சந்திரன், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பேசி முடித்தவுடன் உங்களைப் பேச அனுமதிக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் பேசியது ஒன்றும்* unparliamentary word *அல்ல. ** சின்ன குழந்தைத்தனம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சிறுகுழந்தைத்தனம் அப்படியென்று சொல்லிவிடலாமா? (குறுக்கீடு) உங்களுக்கு வாய்ப்பு வரும்போது நீங்கள் பேசுங்கள். நான் வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன், சொல்லுங்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ** என்று சொன்னால் சிறிய குழந்தை என்று அர்த்தம். ஆனால், திருநெல்வேலி பாஷையில் அதை **

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 நவம்பர் 18] [திரு. நயினார் நாகேந்திரன்]

என்று சொல்வார்கள். அந்த அர்த்தத்தில்தான், (குறுக்கீடு) அதில் உள்நோக்கம் இருக்கிறது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தையைப் பதிவு செய்ய வேண்டாம். நீங்கள் சொன்ன அந்த வார்த்தையை எல்லாம் அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடுகிறேன். ** என்பது நல்ல வார்த்தை; குழந்தை; (குறுக்கீடு) குழந்தையாகவே எடுத்துக்கொள்வோம். Right உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வார்த்தையை நான் திரும்பப் பெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு ஆளுநர் அவர்கள் குழந்தைத்தனமாகப் பேசி வருகிறார். (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இது நல்ல வார்த்தைதானே உட்காருங்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *தொடர்ந்து மாநில அரசுக்கு எதிராக பிடிவாதப் போக்கை ஆளுநர் அவர்கள் கடைப்பிடித்து வருகிறார். அதோடுமட்டுமல்லாமல் ஆட்சி அதிகாரத்தில் இல்லாத மாநிலங்களில், குறிப்பாக, ஆளுநரைத் தன்னுடைய கருவியாக வைத்து, அந்த ஆட்சியாளர்களை, அரசுகளைச் செயல்படவிடாமல் இன்றைக்கு ஒன்றிய அரசு முடக்கி வருகிறது. தமிழகத்தைத் தொடர்ந்து கேரளா, மேற்கு வங்கம், தெலுங்கானா மற்றும் பஞ்சாப் உள்ளிட்ட மாநில அரசுகளுக்கு எதிராக அந்த ஆளுநர்கள் செயல்பட்டு வருகிறார்கள். இன்றைக்கு தமிழக அரசு உச்ச நீதிமன்றத்திலே ஆளுநருக்கெதிராக வழக்கு தொடர்ந்திருக்கிறது. அதை விசாரித்த உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி தலைமையிலான அமர்வு கடுமையான கருத்துகளை தமிழக ஆளுநருக்கு எதிராகத் தெரிவித்திருக்கிறது. ஆளுநர் என்பவர்கள் ஆட்சியாளர்கள் அல்ல; மக்களால் தேர்ந்தெடுக்கப்படக் கூடியவர்கள் அல்ல. ஆகவே, அரசமைப்புச்*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. ட்டி. இராமச்சந்திரன்] [2023 நவம்பர் 18 சட்டத்திற்குட்பட்டு அவர்கள் செயல்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்திருக்கிறார்கள். அதையும் மீறி நம்முடைய ஆளுநர் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆளுநர் அவர்கள் தமிழ் மொழி, கலாச்சாரம், பண்பாட்டுக்கு எதிராக, தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக, தமிழ்நாட்டு மக்களுடைய நலனுக்கு எதிராக தொடர்ந்து பேசி வருகிறார். பொது வெளியிலே, இன்றைக்கு ஏதோ ஒரு கிராமத்திற்குச் சென்று, அவர் பழங்குடியினக் குழந்தைகளைக் கூட்டி, அந்தக் குழந்தைகளுக்கு பூணூலை அணிவித்து, சனாதன அரசியலைப் பேசி வருகிறார். ஆளுநர் மாளிகையை RSS அலுவலகமாக மாற்றி, அங்கே சனாதனக் கருத்துகளைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறார். தொடர்ந்து இவ்வாறு கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக, மாநில உரிமைகளுக்கு எதிராக, இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக ஆளுநர் அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். ஆகவே, ஆளுநரை ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டும்.

முற்பகல் 11-00

அதேபோல, அரசமைப்புச் சட்டத்திற்கு எதிராக, தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசை முடக்குகின்ற ஆளுநரை, குடியரசுத் தலைவர் திரும்பப் பெற வேண்டுமென்ற தீர்மானத்தை சட்டப் பேரவை விதி 39-ன்கீழ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் காலையில் கொடுத்திருக்கிறேன். அந்தத் தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஜனநாயகரீதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த அரசு, ஜனநாயகரீதியாகப் போராடி நாங்கள் எதையும் சாதிக்க முடியும் என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற 10 மசோதாக்களை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வரவேற்று, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.

திரு. வி.பி. நாகைமாலி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15-வது சட்டமன்றப் பேரவை நிறைவேற்றியிருக்கிற இரண்டு சட்டமுன்வடிவுகள், அதேபோல 16-வது சட்டமன்றப்

2023 நவம்பர் 18] [திரு. வி.பி. நாகைமாலி]

பேரவை நிறைவேற்றியிருக்கிற 8 சட்டமுன்வடிவுகளை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 143-ன்கீழ் இப்பேரவை மறு ஆய்வு செய்திட இம்மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் மனதார ஆதரிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்திலே அவர் சொல்லியிருக்கிற, அவர் கையாண்டிருக்கிற அந்தச் சொற்கள் மிகவும் நிதானமாக, இதற்குமேல் கீழிறங்கி வார்த்தைகளை பிரயோகம் செய்ய முடியாது என்கிற அளவுக்கு இருந்த அவருடைய வார்த்தைகளை நான் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். யாரையும் புண்படுத்தாமல் ஒரு தனித் தீர்மானத்தைக் கொண்டுவர முடியும் என்று சொன்னால், அது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, நம்முடைய பேரவைத் தலைவர் அவர்களும் ரொம்ப எச்சரிக்கையாக, யாருடைய மனமும் புண்படாமல் உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று கூறியவிதம், மிகவும் நிதானமாக, எச்சரிக்கையாக, விழிப்பாக இருந்து எங்களையெல்லாம் கவனித்துக் கொண்டிருக்கிறார். ஆனால், பேச வேண்டியதைப் பேசித்தான் ஆக வேண்டும். பதிவு செய்ய வேண்டியதைப் பதிவு செய்துதான் ஆக வேண்டும். இது ஒரு வரலாற்று நிகழ்வு. இதனைச் சுருக்கமாகவோ, வேறு விதமாகவோ பேசும்போது, ஒட்டுமொத்த சபையினுடைய உணர்வுகளை நாம் பதிவு செய்யவில்லை என்று அர்த்தம். ஆகவே, இதில் நேரம் காலம் பார்க்க வேண்டாமென்று, நம்முடைய மாண்புமிகு அவை முன்னவர் அவர்களிடம் நான் முதலில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அந்த உத்தரவின்படி, நாங்கள் பேச வேண்டும்; மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தத் தனித் தீர்மானத்திலே சொல்லியிருக்கிற, அந்தச் சொல்லாடலோடு நாங்களும் இணைந்து பேச வேண்டுமென்கிற ஒரு நிர்பந்தம் எங்களுக்கு இருக்கிறது. ஆகவே, எங்கள் உணர்வுகளை முழுவதும் இங்கே பேச வேண்டுமென்று சொன்னால், நாங்கள் வேறுவிதமாகப் பேசுவோம். வேறுவிதமாகப் பேசத் தெரியும். ஆனால், மாண்புமிகு

[திரு. வி.பி. நாகைமாலி] [2023 நவம்பர் 18

முதல்வர் அவர்கள் மற்றும் மாண்புமிகு பேரவைத் தலைவருக்குக் கட்டுப்பட்டு நாங்கள் இங்கே சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறோம். கோடிக்கணக்கான மக்கள் வாக்களித்து, மக்களால் தேர்வு செய்யப்பட்ட அரசு, இந்த அரசு. ஜனநாயகபூர்வமான முறையில் தேர்வு செய்யப்பட்டு, 7 கோடி மக்களின் மனசாட்சியாக செயல்படுகிறது நம்முடைய அரசு.

முற்பகல் 11-05

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னதுபோல், தமிழ்நாடு அரசு பாரம்பரியமான வரலாற்று பெருமையைக் கொண்டிருக்கிறது. எத்தனையோ ஆளுநர்களை இந்தப் பேரவை கண்டிருக்கிறது. பல நேரங்களில், சில ஆளுநர்களோடு நம்முடைய தமிழ்நாடு அரசும் சில கருத்து முரண்பாடுகள், வித்தியாசங்களைக் கண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் வரலாற்றிலேயே நாம் பார்க்கிறோம். ஆனால், சகல ஜனநாயக மாண்புகளையும் புறந்தள்ளிவிட்டு, அராஜகமான முறையில் செயல்படுகிற திரு. ஆர்.என். ரவி அவர்கள் போல் ஓர் ஆளுநர், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியாவிலே எந்த மாநிலத்திலும் இருந்தது கிடையாது என்பதுதான் வரலாறு. அரசமைப்புச் சட்டம் கவர்னருக்கு எந்தவிதமான அதிகாரமும் வழங்கவில்லை. நம்முடைய பேராசிரியர்கூட இதுகுறித்து சொன்னார். ஆகவே, எந்தவிதமான அரசியல் அதிகாரமும் இல்லாத ஒருவர், சகல அதிகாரத்தையும் நான் கையில் எடுப்பேன் என்று முயற்சிப்பதை இந்த மாமன்றம் இனிமேல் அனுமதிக்காது, அவ்வாறு அனுமதிக்கக் கூடாது என்பதை இங்கே நான் பதிவு செய்ய விரும்புகிறேன். இதுதான் தமிழ்நாட்டினுடைய ஆளுநருக்கு நாம் தருகிற இறுதி எச்சரிக்கை என்கிற முறையிலும், இந்த அவையிலே என்னுடைய கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தோழர் திரு. ந. சங்கரய்யா அவர்களைப் பற்றியும் சொன்னார்கள். நானும் அவர்களைக் குறித்து சுருக்கமாகச் சொல்கிறேன். தோழர் திரு. ந. சங்கரய்யா அவர்கள் சுதந்திரத்திற்கு முன்பும், சுதந்திரம் பெற்றதற்குப் பின்பும் 8 ஆண்டு காலம் சிறையிலே தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்திருக்கிறார். 8 ஆண்டு காலம் சிறை வாழ்க்கை, 4 ஆண்டு காலம் தலைமறைவு வாழ்க்கை. இது ஒருபுறமிருக்க, நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 'தாய் நாவலை' இலக்கியமாக, கவிதையாக வடிவமைத்து கவிதை நூல் ஒன்றை வெளியிட்டார்.

2023 நவம்பர் 18] [திரு. வி.பி. நாகைமாலி]

'தாய் நாவல்' ஒரு பிரசித்த பெற்ற நாவல், ரஷ்யப் புரட்சிக்கு வித்திட்ட நாவல், பெரிய நாவல். அந்த நாவலை நம்முடைய கலைஞர் அவர்கள், அவருக்கே உரித்தான கவிதை நடையில் ஒரு நூலாக வெளியிட்டார். அந்த நூலுக்கு முன்னுரை எழுதுவது குறித்து திரு. ந. சங்கரய்யா அவர்களிடம் கேட்டார் என்று சொன்னால், எந்த அளவிற்கு திரு. ந. சங்கரய்யா அவர்கள் தமிழ் இலக்கியத்திலே புலமை பெற்றிருந்திருக்கிறார் என்பதை கலைஞர் அவர்கள் வாயிலாக நாம் அறிய முடிகிறது. ஆகவே, அவருக்கு மதுரை பல்கலைக்கழகத்தினுடைய Senate, Syndicate *எல்லாம் சேர்ந்து முனைவர் பட்டத்தை வழங்குகிற நேரத்தில், நம்முடைய ஆளுநர் அவர்கள் ஓர் ஆளுநராகச் செயல்படாமல், ஒரு மிகச் சிறந்த* BJP *அரசியல்வாதியாகச் செயல்பட்டு, அந்த முனைவர் பட்டத்தைக்கூட கொடுப்பதற்கு அவருக்கு மனமில்லாமல் இருந்திருக்கிறார் என்று சொன்னால், ஆளுநருடைய உள்ளக்கிடக்கையை நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அந்த வகையிலே, (மணியடிக்கப்பெற்றது) மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை மீண்டும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. சிந்தனை செல்வன் அவர்கள்.*

திரு. ம. சிந்தனை செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெருக்கடி நிறைந்த ஒரு தருணத்தில், கம்பீரம் குறையாமல், கருத்துத் தெளிவு சிதையாமல், சமூக நீதியின் பாதையில் தமிழகத்தை வழிநடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றியை முதலில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

விடுதலை சிறுத்தைகளின் தலைவரால், சமத்துவ நாயகர் என்று பாராட்டப்படுகிற நம்முடைய தளபதி அவர்களுடைய குரல், வழக்கத்திற்கு மாறாக இன்று நிதானமாகவும், அமைதியாகவும் வெளிப்பட்டிருக்கிறது. ஆயினும், அந்தக் குரல் ஒரு சிங்கத்தின் குரலைப்போல, ஒரு கம்பீரமான குரலாக இந்த அவையில் பதிவாகி இருப்பதை நான் பார்க்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நேற்று இரவு, நாளை கொண்டுவரப்படவிருக்கிற தீர்மானத்தின்மீது எதை நான்

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 நவம்பர் 18

பேசப்போகிறேன் என்கிற கேள்வி எனக்குள் எழுந்தபோது, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களை நான் எண்ணிக்கொண்டேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது பேசியபோது, இந்த தேசத்திற்கு ஒரு பேராபத்து உருவாகியிருக்கிறது. அரசமைப்பு சாசனத்தின் விழுமியங்களுக்கு எதிராக குறுக்கு வழியில் மக்களாட்சியை முடக்க நினைக்கிறவர்களால் இந்த தேசத்திற்கு ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்கிற அச்ச உணர்வு எனக்கு இருக்கிறது என்று இந்த அவையில் பதிவு செய்தார்களே, அதே வார்த்தைகளை அதே தொனியில் 1949 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் தேதி புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் சொன்னார்கள். அதே ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் தேதி அரசமைப்புச் சட்ட நாள் ஆகும். அதற்கு முந்தைய நாள், அதாவது நவம்பர் மாதம் 25 ஆம் தேதி, புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் அவையிலே பேசியபோது, இதே தொனியில், இதே வார்த்தைகளை பதிவு செய்திருக்கிறார். "இந்த தேசம் பெற்றிருக்கிற சுதந்திரத்தை இழந்துவிடுமோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. இந்த தேசத்தின் நலனைவிட தனது சொந்த சாதி, மத நம்பிக்கைகளின் நலன்களே முக்கியமானது என்று எண்ணுகிறவர்களால் இந்த தேசத்தின் சுதந்திரத்திற்கு ஆபத்து இருக்கிறது. ஒருவேளை இந்த தேசம் மீண்டும் தன்னுடைய சுதந்திரத்தை இழந்துவிடுமோ என்று நான் அச்சப்படுகிறேன்" என்று புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள் பதிவு செய்ததை இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

"The same thought comes to my mind. What would happen to her democratic Constitution? Will she be able to maintain it or will she lose it again?" என்கிற கேள்விகளை எழுப்பிய புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின் குரலை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்று மறுபதிவு செய்திருக்கிறார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் பதிவு செய்திருக்கிற இந்த ஆபத்து, ஓர் அரசுக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து மாத்திரமல்ல; ஓர் அரசியல் கட்சிக்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து மாத்திரமல்ல; ஒரு மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கிற ஆபத்து மாத்திரமல்ல; ஒட்டுமொத்த அரசமைப்பு விழுமியங்களுக்கு எதிராக ஏற்பட்டிருக்கிற ஆபத்து என்பதை இந்த நாடு புரிந்துகொள்ள வேண்டும்.

2023 நவம்பர் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

சாதாரண காலங்களில் எல்லோரும் இயல்பாக இருப்பார்கள். ஒரு தலைவனும்கூட சாதாரண காலங்களில் சக படைவீரனோடு இணைந்து செயல்படுவது வழக்கம். ஆனால், நெருக்கடிகள் வருகிறபோதுதான், தலைவன் யார், படைவீரன் யார், என்பது தெரிய வரும். அவ்வாறு, அரசமைப்பு சாசனத்திற்கு ஏற்பட்டிருக்கிற இந்த நெருக்கடியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் எதிர்கொண்டிருக்கிறவிதம், தமிழ்நாட்டிற்கு மாத்திரமல்ல; இந்திய அளவில் இந்த தேசத்தைப் பாதுகாப்பதற்கான ஆகச் சிறந்த ஆளுமையாக, தமிழகத்தில் நான் இருக்கிறேன் என்பதை அவர் உறுதிபடுத்தியிருக்கிறார் என்பதை நன்றியோடு இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முதலில் நெருக்கடிகளை உணர்ந்துகொள்வது மிகவும் அடிப்படையானது; இரண்டாவது, அந்த நெருக்கடிகளை மக்களிடத்தில் புரிய வைப்பது; மூன்றாவது, அந்த நெருக்கடிகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று வியூகம் அமைப்பது; நான்காவது, அந்த நெருக்கடிகளைக் கடந்து இந்த தேசத்தைப் பாதுகாப்பது என்கிற இலக்கை நோக்கி நகர்வது ஆகும். புயல் வீசுகிற சூழலில் கப்பலை எப்படியாவது கரையேற்றி விட வேண்டும் என்று நினைக்கிற மாலுமி பாராட்டத் தகுந்தவர்தான். ஆனால், புயலும், நெருக்கடியும் இருக்கிற நிலையிலும்கூட, சமூக நீதிப் பாதை வழியாகத்தான் இந்தக் கப்பல் செல்ல வேண்டும் என்பதை உணர்ந்து, அந்தப் பாதை வழியாகவே அந்தக் கப்பலைக் கரையேற்றுகின்ற முயற்சியை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மாமன்றம் என்பது வெறும் சட்டமன்ற உறுப்பினர்கள் கூடியிருக்கிற அவை அல்ல. 'மாண்புமிகு' என்கிற சொல் இன்று சிந்தனை செல்வன் என்ற பெயருக்கு முன்பு ஒட்டியிருக்கிறது என்றால், அது, நான் படித்த படிப்பிற்கோ, என்னுடைய தனிப்பட்ட திறமைகளுக்கோ தரப்பட்ட மரியாதை அல்ல; அது 2¼ இலட்சம் வாக்காளர்களுக்குத் தரப்படுகின்ற மரியாதையாகும். அதைப்போன்று, 9 கோடி வாக்காளர்களின் உரிமைக்கு அடையாளமாக இந்த மாமன்றம் அமைகிறது எனும் நிலையில், இந்த மாமன்றத்தால் நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்களை,—மரியாதைக்குரிய

[திரு. ம. சிந்தனை செல்வன்] [*2023 நவம்பர் 18* மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் சொன்னார்களே,—இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 200–வது பிரிவு இன்று எல்லோராலும் விவாதிக்கப்படுகிறது. "As soon as possible" என்கிற சொல்லுக்கு என்ன விளக்கம் என்பதுதான் இன்று வேதனைக்குரிய ஒரு கேள்வியாகியிருக்கிறது. 'உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே' என்பதுதான் "as soon as possible" என்கிற ஆங்கிலச் சொல்லுக்கு விடையாக இருக்க முடியும்; அதற்கு வேறு ஒன்றும் விடையாக இருக்க முடியாது.

நான் கோப்புகளில் பார்க்கிறேன்; கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரை நாம் நிறைவேற்றி அனுப்பியிருக்கிற மசோதாக்கள் கடந்த 1½ ஆண்டு காலமாக அவை இன்னும் கவனிக்கப்படவில்லை என்றால், பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், புரட்சியாளர் அம்பேத்கர் போன்ற ஆளுமைகளும் உருவாக்கி வைத்திருக்கிற "as soon as possible" என்கிற ஆங்கில வார்த்தைகளைப் புரிந்துகொள்ள முடியாத நிலைமையிலா மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இருக்கிறார்கள் என்கிற கேள்வியை வேதனையோடு நான் எழுப்ப விரும்புகிறேன்.

முற்பகல் 11–15

மரியாதைக்குரிய ஆளுநர் அவர்கள் ஏற்கெனவே புரட்சியாளர் அம்பேத்கருடைய பெயர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராசர் ஆகிய ஐம்பெரும் தலைவர்களின் பெயர்களைக்கூட இந்த மன்றத்திலே உச்சரிக்க மனமில்லாதவராக வெளியேறிப் போனார். அந்தச் சமயத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டு அமைதியாக இல்லை. உடனடியாக அடுத்த வினாடியே எழுந்து நின்று, இந்த அவையிலே அந்த ஐம்பெரும் தலைவர்களின் பெயரும் அவைக் குறிப்பில், ஆளுநர் உரையில் இடம்பெற வேண்டுமென்கிற நிலையை உருவாக்கியவர், நம்முடைய மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள்.

'தமிழ்நாடு' என்ற பெயரை தக்கவைத்துக்கொள்வதற்கே நாம் போராட வேண்டியிருக்கிறது. நீங்கள் கண்ணியத்தோடு பேச வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். அந்தக் கண்ணியம் குறையாமலேயே, கவலையோடு இந்தக் கருத்துகளை நான் பதிவு செய்துகொண்டிருக்கிறேன். 'தமிழ்நாடு' என்கிற அந்தச் சொல்லைப் பதிவு செய்ய முடியாது என்று பொங்கல் விழாவிற்கான

2023 நவம்பர் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

அழைப்பிதழிலே மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மறுதலிக்கிறார். 'தமிழ்நாடு' என்ற சொல் பதிவு செய்யப்பட வேண்டும்; தமிழ்நாடு இலச்சினையைப் பதிவு செய்வதிலும்கூட அவருக்குத் தயக்கமிருக்கிறது. ஆக, இவையெல்லாம் பதிவு செய்யப்பட வேண்டுமென்று உடனடியாக நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் போர்க் கொடி உயர்த்தியதால்தான் 'தமிழ்நாடு' என்கிற பெயரும், தமிழ்நாடு அரசின் இலச்சினையும் குடியரசு தின விழாவிலே பதிவு செய்யப்பட்டன என்பதை இந்தத் தருணத்திலே எண்ணிப் பார்க்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேர்ந்திருக்கிற இந்த அபாயம், ஓர் அரசமைப்பு சாசனத்திற்கு நேரடியாக விடப்பட்டிருக்கிற சவால் என்பதை மெத்தப் பணிவோடு, நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், ஒன்றரை ஆண்டுக் காலத்திற்குப் பிறகு, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் I withhold assent என்கிற ஒற்றை வார்த்தையைப் பதிவு செய்து, இவற்றைத் திருப்பி அனுப்பியிருக்கிறார். இதற்காக நான் மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டிருக்கிற இந்த மசோதாக்களில் ஏதாவது ஓர் ஓட்டையை அவர் கண்டுபிடித்திருந்தால்கூட, கட்டாயமாக அதனைப் பதிவு செய்திருப்பார். ஒன்றரை ஆண்டுக் காலமாக தேடித் தேடிப் பார்த்து, ஒரு ஓட்டையைக்கூட அவரால் கண்டுபிடிக்க முடியாததால் (மேசையைத் தட்டும் ஒலி) I withhold Assent என்ற வார்த்தையைப் பதிவு செய்கிறார். இந்த வார்த்தையின்மூலமாக இதில் எதிர்ப்பதற்கு ஒன்றுமில்லை; ஆனால் ஏற்பதற்குத்தான் எனக்குத் தயக்கமாக இருக்கிறது என்று வெளிப்படையாக மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

இத்தகைய சூழ்நிலையில், இந்த 10 மசோதாக்களையும் நிறைவேற்றக்கூடிய இந்த முன்மொழிவை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிறார். இந்த 10 மசோதாக்களையும் நிறைவேற்ற வேண்டுமென மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வைத்திருக்கிற இந்தத் தனித் தீர்மானத்தை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மனம் நிறைந்து வாழ்த்தவும், வரவேற்கவும், ஆதரிக்கவும் கடமைப்பட்டிருக்கிறோம். இன்னொன்றையும் இந்தத் தருணத்தில் சொல்ல வேண்டியது என்னுடைய கடமை. இந்த மசோதாக்களெல்லாம்

[திரு. ம. சிந்தனை செல்வன்] [*2023 நவம்பர் 18*

தன்னுடைய நிதியில், தன்னுடைய கொள்கைத் திட்டத்தின் அடிப்படையிலே, தான் உருவாக்கிய பல்கலைக்கழகம் எவ்வாறு இயங்க வேண்டுமென்பதற்காக மாநில அரசு, இந்த மாமன்றம் உருவாக்கிய சட்டங்கள்தான். மாநில அரசுதான், நம்முடைய மாண்புமிகு ஆளுநருக்கு 'வேந்தர்' என்கிற பொறுப்பைத் தந்திருக்கிறதே தவிர, அரசமைப்பு சாசனம் 'வேந்தர்' என்கிற பொறுப்பை மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்குத் தரவில்லை என்பதைப் பணிவோடு மீண்டும் இந்த அவையிலே நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுவொரு constitutional mandatory அல்ல. அரசமைப்பு சாசனத்தின் அடிப்படையில் அவருக்கு வழங்கப்பட்ட பணியல்ல. இந்த வேந்தர் என்கிற பொறுப்பு, நாம் இயற்றிய சட்டத்தின் மூலமாக அவருக்குத் தரப்பட்டிருக்கிற discretionary power.

நான் எண்ணிப் பார்க்கிறேன். ஒரு மண விழா நடக்கிறது. அந்த மண விழாவிலே ஆபத்துக்குரிய அந்நியர்கள் யாரும் வந்துவிடக் கூடாது என்று என்னுடைய தகப்பனார், வாயிலிலே ஒரு பாதுகாவலாக ஒருவர் இருக்க வேண்டுமென்று சொல்கிறார். ஒரு வாயில் காப்பாளனாக இருந்து, உறவினர்களை மாத்திரம் அனுப்ப வேண்டும்; மற்றவர்கள், அந்நியர்கள், ஆபத்தானவர்கள் உள்ளே வந்துவிடக் கூடாது என்று பார்க்கிற பொறுப்பில் இருக்க வேண்டிய ஒரு நபர் மணமகனையே உள்ளே விட முடியாது என்று சொல்கிறார் என்ற காட்சியை இன்று தமிழ்நாடு பார்த்துக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) திரைப்பட அரங்கத்திலே ticket விநியோகம் செய்பவர்களை நாம் பார்ப்போம். அந்த நிர்வாகம் அச்சடித்து தருகின்ற அந்த tickets-ஐ அவர் தருவதுதான் அவருடைய கடமை. அந்த ticket விநியோகம் செய்கிறவர் தானாகவே ticket-ஐ அடித்துக்கொண்டு விநியோகம் செய்யத் தொடங்கினால், என்னவாகும் என்பதுதான் கேள்வி.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மிகுந்த வலியோடு இங்கே இன்னொன்றைச் சொல்ல விரும்புகிறேன். இது ஏதோ, மரியாதைக்குரிய மாண்புமிகு ஆளுநர் திரு. R.N. ரவி அவர்கள் தொடர்பான பிரச்சினை மாத்திரமல்ல, எங்கெல்லாம் பாரதிய ஜனதா கட்சி அரசு இல்லாத, பாரதிய ஜனதா கட்சி அல்லாத இதர அரசுகள் இயங்குகின்றனவோ, அங்கெல்லாம்

2023 நவம்பர் 18] [திரு. ம. சிந்தனை செல்வன்]

இந்தப் பிரச்சினை இருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். அதை மீண்டும் வரிசையாக, பஞ்சாப் மாநிலத்திலிருந்து, கடந்த ஆட்சிக் காலத்திலிருந்து எல்லாவற்றையும் நான். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும், போதும். (மணியடிக்கப்பெற்றது)*

திரு. ம. சிந்தனை செல்வன்: *நான் குறிப்பிட விரும்புவது, இப்படிப்பட்ட நிலையிலே பஞ்சாப் பிரச்சினையில் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டிருக்கிற, ஆளுநர்கள் தங்களை சுயபரிசோதனை செய்துகொள்ள வேண்டுமென்கின்ற அந்தச் சொல்லை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மிகக் கடுமையான சூழல் இது. இதற்குப் பிறகு, தமிழக அரசு நிர்வகிக்கின்ற எந்தப் பல்கலைக்கழகத்திலும் வேந்தராக ஆளுநர் அவர்கள் இருக்கக் கூடாது என்கிற ஒரு கருத்துருவை, கொள்கை முடிவை தமிழக அரசு எடுக்க வேண்டிய சூழல் இருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் தருணத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

என் உரையை நிறைவு செய்கிற இந்தத் தருணத்தில் மறைந்த நம்முடைய மகத்தான இடதுசாரி இயக்கத்தின் ஆகப் பெருந்தலைவர், தேசத் தலைவர், தோழர், தகைசால் தமிழர் திரு. என். சங்கரய்யா அவர்களுக்கு விடுதலை சிறுத்தைகளின் சார்பில் என்னுடைய செம்மார்ந்த வீர வணக்கத்தைப் பதிவு செய்கிறேன். அவருக்கு மாத்திரமல்ல, திரு. பங்காரு அடிகளாரும்கூட, சனாதனம், பெண்களை கோயிலுக்குள்ளே நுழையக் கூடாது என்று மறுதலித்தபோது, பெண்களையே அந்தக் கோயிலின் மையமாக மாற்றிய, ஓர் ஆன்மிகக் களத்தில் ஒரு சமத்துவப் புரட்சியை நடத்திக் காட்டிய அந்தப் பெருமகனாருக்கும் இந்தத் தருணத்திலே அக வணக்கம் செலுத்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். மாபெரும் தேசத் தலைவர் திரு. என். சங்கரய்யா அவர்களுக்கு, நிச்சயமாக அடுத்து வருகிற கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மாபெரும் நினைவரங்கத்தை அறிவிப்பார் என்கிற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் தீர்மானம் நூறு விழுக்காடு இந்த தேசத்தின் நலன் தொடர்பானது, அரசமைப்பு சாசனத்தைப் பாதுகாக்கக்கூடியது. அதை நான்

[திரு. ம. சிந்தனை செல்வன்] [2023 நவம்பர் 18

மாத்திரமல்ல, ஒட்டுமொத்த தமிழக மக்களும் நூறு விழுக்காடு உடனிருந்து, துணையாக இருந்து வரவேற்போம். தேசத்தைப் பாதுகாக்கக்கூடிய இந்த யுத்தத்திலே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எல்லா வகையிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி துணையாக இருக்கும் என்பதைப் பதிவுசெய்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

திரு. நயினார் நாகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தின்மீது பேசும்போது, நீங்கள்கூட ஆரம்பத்திலே சொன்னீர்கள். இதில் மத்திய அரசையோ, ஆளுநரையோ, யாரும் குறைத்து பேசக்கூடாது என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு, இந்திய குடியரசுத் தலைவர், நீதிபதிகள், ஆளுநர்.

திரு. நயினார் நாகேந்திரன்: ஆளுநரைப் பற்றி பேசக் கூடாது என்று சொன்னீர்கள். பேசக் கூடாது என்று சொல்லிவிட்டு. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்கார்ந்து கொண்டு யாரும் பேச வேண்டாம்.

திரு. நயினார் நாகேந்திரன்: பேசக் கூடாது என்று சொல்லிவிட்டு, பேசவிட்டு கேட்டுக்கொண்டுள்ளீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, ஒரு நிமிடம். அவர்கள் செய்த அந்தக் கோப்பில் எடுத்த முடிவைப் பற்றிதான் பேசினார்கள்தவிர, (குறுக்கீடு) தனிப்பட்ட முறையில் அவர்கள் பேசிய வார்த்தைகள் எதுவும் பதிவாகவில்லை.

திரு. நயினார் நாகேந்திரன்: முடிவைப் பற்றி அல்ல. தீர்மானங்கள் வேறு. அதாவது, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனித் தீர்மானம் கொண்டு வருவது, தீர்மானங்கள் வேறு. . . (குறுக்கீடு) அதை ஆதரிப்பதா? எதிர்ப்பதா? என்பது வேறு விஷயம்.

2023 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதில்தான் பேசினார்கள். அதில் எந்த ஆளுநர் கையெழுத்து போட்டு, இதை அனுப்பினார்களோ அந்தக் கருத்தைத்தான் சொன்னார்களே தவிர, ஆளுநர் என்பவர்கள் மாறலாம். நாளைக்கு நீங்களே ஆளுநர் ஆகலாம். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்கூட சொன்னார்கள். அதாவது, ** என்பது குழந்தைத்தனம்தான் என்று சொன்னார்கள். குழந்தைத்தனம். அது அதைவிட மோசம். (சிரிப்பு) மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் நம்முடைய மாவட்டத்தில் பயன்பாட்டிலுள்ள பேச்சு வழக்கிலுள்ள வார்த்தையைச் சொன்னீர்கள். நான் சொல்கிறேன், குழந்தை என்று சொன்னால், கள்ளம், கபடம் தெரியாத வெள்ளை மனசுக்குச் சொந்தக்காரர்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவரின் விளக்கங்களுக்கு ரொம்ப நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் ஏத்துக்கிடவில்லையா?*

திரு. நயினார் நாகேந்திரன்: *என்னைப் பொறுத்தமட்டிலும் என்னவென்றால், (குறுக்கீடு) இல்லை. ஆளுநர் குறித்து நமது அரசாங்கம், ஒரு கூர்மையான போக்கைக் கடைப்பிடிப்பது என்பது வேண்டுமா எனன்பதைக் கருதிப் பார்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். அதே நேரத்தில், இந்தச் சட்டமன்றம் மிகப் பெரிய மாண்பும், மரபும் மிக்கது. இதைப் பொதுக்கூட்ட மேடையாக மாற்றிவிடக் கூடாது. தனித் தீர்மானத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்தார்கள். நிதானமான சொற்கள். ஆனால், ** நிறைய பேர் இங்கே பேசினார்கள். பி.ஜே. பி. அரசாங்கம், ஆளுநர் அப்படியென்றெல்லாம் பேச வேண்டிய அவசியம் இங்கு இருக்கிறதா என்பது தெரியவில்லை. (குறுக்கீடு) இதையெல்லாம் எப்படி. . . (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[*2023 நவம்பர் 18*

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ** *யாரும் பேசவில்லை. சரியாகத்தான் எல்லோரும் பேசியிருக்கிறார்கள். தவறான வார்த்தை பதிவாகவில்லை. (குறுக்கீடு) அதை நான் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) அது எடுத்தாகிவிட்டது. இதோ பாருங்கள் எவ்வளவு பணிவாக உங்களைக் கும்பிடுகிறார்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *அதாவது, கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். பொதுவாக, என்னுடைய நினைவு சரியாக இருக்குமேயானால், துணை வேந்தர்களை நியமனம் செய்வதில் ஆளுநருக்குத்தான் அதிகாரம் வழங்க வேண்டுமென்று 1998 ஆம் ஆண்டு இதே சபையில், கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே பல்கலைக்கழகங்களுக்கு வேந்தராக இருக்க வேண்டுமென்று கேட்டு தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்னைப் பொறுத்தமட்டில், இது இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்றேதான் நான் கருதுகிறேன். Emergency காலகட்டத்தில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *இல்லை, நான் பேசிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதிலை வாங்கிவிடுங்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போதெல்லாம் வேந்தர்கள், துணை வேந்தர்கள் நியமனம் குறித்தெல்லாம் அரசினுடைய பரிசீலனைக்குக் கொண்டு வந்து, கலந்து பேசி அதற்குப் பிறகுதான் நியமிப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆனால், இப்போது அப்படி அல்ல; அதனால்தான் இதைக் கடுமையாக நாங்கள் எதிர்க்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 நவம்பர் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* emergency *காலகட்டத்தில் கல்வி, அரசமைப்பின் ஏழாவது அட்டவணையில் மாநில பட்டியல் பிரிவு 11–லிருந்து பொதுப் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. இதன்படி கல்வி தொடர்பாக மாநில சட்டமன்றம் கொண்டிருந்த அதிகாரம், மாநில சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றம் இரண்டிற்கும் பொதுவான அதிகாரமாக மாற்றப்பட்டது. இதனால்தான் மத்திய அரசு கொண்டுவரும் தேசிய கல்விக் கொள்கையாக இருந்தாலும் சரி, தேசிய தகுதி மற்றும் நுழைவுத் தேர்வு ஆகிய மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கைகளுக்கு மாநில அரசின் கொள்கைகளைவிட முன்னுரிமை அளிக்கப்படுகிறது.* Standard of higher education, entry *66–ல் மத்திய அரசு பட்டியலில் இருக்கிறது. உயர் கல்வி நுழைவுத் தேர்வுகள், வேந்தர் பொறுப்புகள் குறித்து முடிவெடுக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் மட்டுமே உள்ளது. இதை மாற்றுவதற்கு நமது அரசாங்கம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது முனைந்திருக்கிறார்கள். வேந்தர் பதவி ஓர் அரசியல் பதவியாக இருக்கக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றமே ஒரு முறை கூறியுள்ளது. ஆக, இப்படிப்பட்ட காலகட்டத்தில் எதற்காகத் திருப்பி அனுப்பப்பட்டது என்பதையெல்லாம் ஆராய்ந்து அல்லது அதற்குத் தகுந்தாற்போல் நமது சட்டங்களை மாற்றியமைத்து நாம் அதைத் திருப்பி அனுப்ப வேண்டுமென்பதுதான் பாரதிய ஜனதா கட்சியினுடைய ஒரு வேண்டுகோள். அதேநேரத்தில்* online. . . *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) என்ன சொல்கிறார்கள் என்பதைக் கேட்டுக்கொள்ளுங்கள்.*

***மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி, பொதுப் பட்டியலில் இருக்கின்ற காரணத்தினால்தான் 'நீட்' விலக்கு போன்றவற்றிற்கெல்லாம் விலக்கு கோரி இங்கே தீர்மானம் நிறைவேற்றி, ஆளுநர் அவர்கள் மூலமாக குடியரசுத் தலைவர் அவர்களுடைய ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அது பொதுப் பட்டியலில் இருக்கிறது. இப்போது இங்கே இருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு*

[திரு. எஸ். ரகுபதி] [2023 நவம்பர் 18

உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபடி, நம்முடைய ஆளுநர் அவர்கள் இங்கே அரசியல் செய்வதற்காக ஆளுநர் அல்ல. அவர் அரசியல் சட்டத்தை மதித்து நடந்து கொள்வாரேயானால் எல்லோரும் ஏற்றுக்கொள்வார்கள். அரசமைப்புச் சட்டத்தின்படி, ஆளுநர் அவர்கள் இன்றைக்கு அந்தப் பதவியில் நீடிப்பதில் எந்தப் பிரச்சினையும் கிடையாது. ஆனால், அவர் இன்றைக்கு அரசியல் செய்கின்றவராக இருக்கின்ற காரணத்தினால்—அத்தோடு இல்லாமல் இன்றைக்கு பல நீதிமன்றங்களுடைய தீர்ப்புகள் இருக்கின்றன. உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னாள் தலைமை நீதிபதி Madan Mohan Punchhi தலைமையிலான Commission 2007 ஆம் ஆண்டில் கொடுத்துள்ள, பல்கலைக்கழக வேந்தர்கள் நியமனம் குறித்து அளித்துள்ள பரிந்துரையை இந்த நேரத்தில் இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகின்றேன். Para 4, 5, 12 என்ற பரிந்துரையில் 'To be able to discharge the Constitutional obligations fairly and impartially, the Governor should not be burdened with positions and powers which are not envisaged by the Constitution and which may expose the office to controversies or public criticism' என்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டு 'Making the Governor the Chancellor of the Universities and thereby conferring powers on him which may have had some relevance historically has ceased to be so with change of times and circumstances. The Council of Ministers will naturally be interested in regulating University education and there is no need to perpetuate a situation where there would be a clash of functions and powers' The Commission is also of the view that the Governor should not be assigned functions casually under any state statute. His role should be confined to the constitutional provisions' என்று பரிந்துரைத்துள்ளது. இது ஒன்று.

முற்பகல் 11–30

அடுத்து, ஆளுநர்கள் வேந்தர்களாக நியமிக்கப்படுகிறார்கள் என்று இன்றைக்கு சொல்லியிருக்கிறார்கள். குஜராத் மாநிலத்தில் முதன்முதலில் நியமித்தது பாரதிய ஜனதா கட்சிதான். நீங்கள்தான் முதன்முதலில் நியமித்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு withdraw செய்திருக்கிறீர்கள். இன்றைக்கு தெலுங்கானாவில் துணை வேந்தரை நியமிக்கின்ற உரிமை அந்த மாநில அரசுக்கு இருக்கிறது. கர்நாடகா மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களினுடைய துணை வேந்தர்களை நியமிக்கின்ற உரிமை, தெலுங்கானாவில் துணை வேந்தர்களை நியமிக்கின்ற உரிமை, அந்தந்த மாநில

2023 நவம்பர் 18] [திரு. எஸ். ரகுபதி]

அரசுக்கு இருக்கிறது. அதைப்போல, கர்நாடகா மாநிலத்தில் ஒரு குழு நியமிக்கப்பட்டு, அந்த மாநில அரசினுடைய பரிந்துரைகளின் அடிப்படையிலேதான் துணை வேந்தர்களை நியமிக்க வேண்டுமென்கிற சட்டம் அங்கு இயற்றப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, குஜராத் மாநிலத்திலும் மாநில அரசுதான் துணை வேந்தர்களை நியமிப்பது என்றிருந்தது. அதுதான் மாற்றப்பட்டிருக்கிறதே தவிர, இன்றைக்கு எங்களைப் பொறுத்தவரைக்கும், நிறைய மாநிலங்களில் ஆளுநர்கள் மூலமாக பல்கலைக்கழகங்களினுடைய துணை வேந்தர்கள் நியமிக்கப்பட்டால்—இன்றைக்கு, அவர்களுடைய choice-படி துணை வேந்தர்களைத் தேர்ந்தெடுக்கின்ற சூழ்நிலை—மக்கள் விரும்புகின்றபடி அவர்கள் இல்லை. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசுக்கு எதிராகச் செயல்படுபவராகக்கூட மாறிவிடுவார்கள். எனவேதான், துணை வேந்தர்களை நியமிக்கின்ற அதிகாரம் மாநில அரசுக்கு வேண்டுமென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய அரசு முன்வைத்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது வேந்தர்கள் ஏதோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்களெல்லாம் இருக்கக் கூடாது என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். (சுறுக்கீடு) அரசியல் இருக்கக் கூடாது என்று சொன்னீர்கள். ஆனால், ஓர் உதாரணத்தை நான் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன். மேற்கு வங்கத்தில் இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்தினுடைய வேந்தரே இந்திய நாட்டினுடைய பிரதமராக இருப்பவர்தான். அன்பிற்குரிய மாண்புமிகு திரு. மோடி அவர்கள்தான் அதனுடைய Chancellor ஆக இருக்கிறார்கள். இது எப்படி நடந்தது? ஆக, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர் அவர்களுடைய மாநிலத்தில்கூட அல்ல, West Bengal-ல் இருக்கக்கூடிய மத்திய பல்கலைக்கழகத்தினுடைய வேந்தராக இருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு வழிவகுக்கிற சட்டம் இதற்கு வழிவகுக்காதா? (மேசையைத் தட்டும் ஒலி) குஜராத் மாநிலத்திலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களில் அங்குள்ள முதலமைச்சர் அவர்கள்தான் வேந்தராக இன்றும் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே வேந்தராக இருக்கிறார்கள்.

[முனைவர் க. பொன்முடி] [2023 நவம்பர் 18

குறிப்பாக, தெலுங்கானா, ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களிலெல்லாம் துணை வேந்தர்களை முதலமைச்சர், அந்த அரசு யாரைப் பரிந்துரை செய்கிறதோ அவர்களைத்தான் துணை வேந்தராக நியமிக்க வேண்டுமென்கிற சட்டங்களும் அங்கே இருக்கின்றன. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் இதை வலியுறுத்துகிறோம். அரசமைப்புச் சட்டத்திலே இதைப் பற்றியெல்லாம் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அரசமைப்புச் சட்டமே இதற்கான வழிவகைகளை வகுத்திருக்கிறது என்பதுதான் உண்மை. அந்த உணர்வோடு உங்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் இருக்கிற அனைத்து பல்கலைக்கழகங்களினுடைய வேந்தராக இருந்தால்தான் இங்கு உண்மையாக எல்லாம் நடைபெறும் என்பதை நான் உங்களுக்கு மீண்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தேசிய கல்விக் கொள்கையைப் பற்றியெல்லாம் இங்கே பேசினீர்கள். அதைப் பற்றி பேச வேண்டுமென்று சொன்னால், debate-ஐ பெரிய அளவில் நடத்தலாம். தேசிய கல்விக் கொள்கையில், 3 ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு, 5 ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு மற்றும் 8 ஆம் வகுப்பிற்கு பொதுத் தேர்வு என்றெல்லாம் சொல்லியிருப்பதை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதே ஒரு குழுவை நியமித்து, மத்திய அரசாங்கத்திற்கு நீக்க பரிந்துரை செய்திருக்கிறார்கள். ஆகவே, அவற்றையெல்லாம் கண்டித்து, தமிழ்நாட்டினுடைய கல்விக் கொள்கையை வளர்ப்பதற்காக, தமிழக மாநில கல்விக் கொள்கையை வளர்ப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஒரு குழுவை நியமித்து,அதற்கானஏற்பாடுகளையும்செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கல்விக் கொள்கையைப் பொறுத்தவரையில், உயர் கல்வியாக இருந்தாலும், பள்ளிக் கல்வியாக இருந்தாலும் தமிழ்நாடு அரசுதான் அனைத்திலும் சிறந்து விளங்குகிற ஒரு மாநிலமாக இதுவரை திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து திகழும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள்.

2023 நவம்பர் 18]

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்லைன் ரம்மியைப் பொறுத்தமட்டிலும், நீதிமன்றத்திற்குச் சென்றால் நிற்காது என்று ஏற்கெனவே சொன்னோம். இன்றைக்கு, நீதிமன்றமே* online rummy, poker *போன்ற விளையாட்டுகளைத் தடை செய்திருக்கிறது. ஆகவே, நாம் சட்டங்களை இயற்றி ஆளுநருக்கு அனுப்பும்போது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆன்லைன் ரம்மியைத் தடை செய்வதைப் பொறுத்தவரைக்கும், மேதகு ஆளுநர் அவர்கள் அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லையென்று சொன்னார்கள். ஆனால், அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு என்பதை இன்றைக்கு நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. அவர் அதிகாரம் இல்லையென்று சொன்னார், இன்றைக்கு அதிகாரம் இருக்கிறது என்று நீதிமன்றம் சொல்லியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுதவிர, பல்வேறு விவாதங்களையெல்லாம்—இன்றைக்கு* appeal *செய்தால், அதைப் பற்றி அங்கே விவாதிக்கலாம். இங்கே நாம் அதைப் பற்றி விவாதிக்கக் கூடாது. ஏனென்றால், அவற்றை நாங்கள் பல வகைகளில் எடுத்துச் சொல்லியிருக்கின்றோம். நீதிபதிகளை திருப்திப்படுத்துகின்றவகையிலே, எங்களுடைய வாதங்கள் முன்வைக்கப்பட்டிருந்தாலும்கூட, அந்த வாதங்கள் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தில் அதற்குரிய நியாயம் கிடைக்குமென்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. ஆன்லைன் சூதாட்டம் என்பது தடை செய்யப்பட வேண்டுமென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து.*

முற்பகல் 11–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மேல் முறையீடு செய்யப்பட்டிருக்கிறது.*

திரு. நயினார் நாகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள இந்தத் தனித் தீர்மானத்தை பாரதிய ஜனதா கட்சி ஏற்றுக்கொள்ளாமல், நாங்கள் வெளிநடப்பு செய்கின்றோம்.*

[*2023 நவம்பர் 18*

(பாரதிய ஜனதா கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்பு செய்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொள்ளுங்கள். இந்த 10 மசோதாக்களில் ஒன்று; கல்விக் கொள்கையில் Higher Education செயலாளர் அவர்களையும் நியமிப்பதில் என்ன இறையாண்மை இல்லையென்று நீங்கள் சொல்லுங்கள்? நீங்கள் வெளிநடப்பு செய்வதில் ஒரு நியாயம் இருக்க வேண்டும் இல்லையா? உயர் கல்வித் துறை செயலாளர் அவர்களையும் ஒரு சிண்டிகேட் உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது? மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வித் துறை செயலாளர் அவர்கள் முதலிலேயே சிண்டிகேட் உறுப்பினராக இருக்கின்றார். ஏனென்றால், பல்கலைக்கழகங்களுக்கெல்லாம் மாநில அரசு நிதி வழங்க வேண்டியிருப்பதால், நிதித் துறைச் செயலாளர் அவர்களையும் சிண்டிகேட் உறுப்பினராக நியமிக்க வேண்டுமென்று தீர்மானத்தில் உள்ளது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நிதித் துறைச் செயலாளர் என்று திருத்திக்கொள்கிறேன்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை விதி 143-ன்கீழ் சிறப்புக் கூட்டத்தை தாங்கள் கூட்டியிருக்கின்ற இந்தச் சூழலில், இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு, 200-ன்கீழ்; மாநில அரசுகளுக்கு இருக்கின்ற உரிமை நிலைநாட்டப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தை இங்கே முன்மொழிந்து வாசித்திருக்கின்றார்கள்.*

2023 நவம்பர் 18] [திரு. ஜி.கே. மணி]

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து வாசித்திருக்கின்ற சூழ்நிலையில்; அவர் சொன்ன வார்த்தையைப் பார்த்து, இது காலம் கருதி இடத்தாற் செயின் என்ற கூற்றிற்கு ஏற்பதான் உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறார். மீண்டும் வழக்கு விசாரணைக்கு வரக்கூடிய இந்தச் சூழலில், இடைப்பட்ட காலத்தில் இந்தத் தீர்மானம் அவசியம் என்பதை உணர்ந்து; காலம் கருதி இடத்தாற் செயின் என்ற வள்ளுவரின் கூற்றிற்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் இந்தத் தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நான் எண்ணிப் பார்க்கின்றேன்.

இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்து வாசிக்கின்ற நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டார்கள்; எனக்கு காய்ச்சல், உடல்வலி, உடல் நலக்குறைவு என்று இருந்தாலும்கூட, தமிழ்நாட்டின் நலன் கருதி, தமிழ்நாட்டு மக்களின் முன்னேற்றம் கருதி இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றேன் என்று சொன்னது, நம்முடைய நெஞ்சத்தை உருக்கியிருக்கிறது. ஆகவே, நான் முதலாவதாக வேண்டிக்கொள்வதெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பூரண உடல்நலம் பெற்று முழுநிறைவோடு பணியாற்ற முன்வர வேண்டுமென்ற என் ஆவலை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

பொதுவாக, இந்த அரசினர் தனித் தீர்மானத்தைப் பொறுத்தவரையில், ஆளுநர் அவர்களின் செயல்பாடுகளைப் பற்றி குறிப்பிடுகின்றபோது, ஒட்டுமொத்தமாக நமக்கு கவலையளிக்கின்ற நிகழ்வாக, தமிழ்நாட்டின் உரிமையை மதிக்காத போக்கைக் காட்டுவதாகவே பார்க்கின்றோம். தமிழ்நாடு சட்டமன்றத்தை விடுதலைக்கு முன்பும், விடுதலைக்குப் பிறகும் பார்த்தால், இந்திய நாட்டுக்கு வழிகாட்டக்கூடிய சட்டமன்றமாக இருந்திருக்கிறது. இந்தியாவிற்கு அல்லது இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்களில் உள்ள சட்டப் பேரவைகளுக்கு எடுத்துக்காட்டான சட்டமன்றமாக தமிழ்நாடு திகழ்ந்திருக்கிறது என்பதற்கு பல்வேறு முன்னுதாரணங்கள் உள்ளன. இந்திய நாட்டின் பிரதமர்களுக்கு வழிகாட்டிய தலைவர்கள் அமர்ந்த அவை. அப்போது சட்டப் பேரவையில் நடைபெற்ற விவாதங்கள், தீர்மானங்களையெல்லாம் எண்ணிப் பார்க்கின்ற வேளையில், தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்தியத் திருநாட்டில் இதுவரையில் எந்த ஆளுநரும் செய்யாத ஒரு போக்காகவே இதை நாம் பார்க்க முடிகிறது. இவர் போன்று எந்த

[திரு. ஜி.கே. மணி] [2023 நவம்பர் 18

ஆளுநரும் இல்லை. இடையில் ஏதோ அத்தி பூத்தாற்போல ஒருசில நிகழ்வுகள் நடந்திருக்கலாம். அதைக்கூட மாற்றியமைத்திருப்பதாக வரலாற்று உண்மைகள் நமக்கு உணர்த்துகின்றன.

முற்பகல் 11–40

குறிப்பாக, நமது 8 திருத்த சட்டமுன்வடிவுகளை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டினார்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் கொண்டுவரப்பட்ட இரண்டு திருத்தச் சட்டமுன்வடிவுகள். அதில் 2020 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9 ஆம் நாள் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவு திருத்த எண் 2-ன்கீழ் 2020, 12-ன்கீழ் 2020 ஆகும். இன்றைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட 8 சட்டமுன்வடிவுகளை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதனால் ஆளுநருக்கு என்ன பாதிப்பு இருக்கிறது? இது தமிழ்நாட்டின் நலன் கருதியது; தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு உகந்தது. ஆகவே, ஆளுநராக இருப்பவர் மாண்புமிகு முதலமைச்சருக்கும், தமிழக அரசிற்கும், தமிழ்நாட்டிற்கும் இணக்கமானவராக இருக்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மத்திய அரசிற்கும், மாநில அரசிற்கும் பாலமாக இருந்து செயல்பட வேண்டியவர். இதிலே குறிப்பாக, இந்தச் சட்டமுன்வடிவுகளில் பல்கலைக்கழகங்களைக் குறித்து அதிகமாக சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. இப்போது பல்கலைக்கழகங்கள் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிற சூழல். இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்கின்ற பொறுப்பு தமிழக அரசிற்கு இருக்கிறது. அதேநேரத்தில் இந்தப் பல்கலைக்கழகங்களை உருவாக்கியது மாநில அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். ஆகவேதான், இந்த நெருக்கடியான சூழலில் இந்தச் சட்டமுன்வடிவுகளை மீண்டும் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பினால் இந்திய அரசமைப்புச் சட்டம், 200-வது பிரிவின்படி, அவர் கட்டாயம் ஒப்புதல் வழங்கியாக வேண்டும் என்ற சூழல் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு, சட்டமன்றக் கூட்டம் வருகிறது என அறிவிப்பதற்கு முன்பாக, நானும், சில அரசியல் கட்சித் தலைவர்கள், மூத்தவர்கள், சட்ட வல்லுநர்களிடத்தில் கலந்து பேசினேன். ஒட்டுமொத்தமாக அனைவரும் ஆளுநர் அவர்களுடைய போக்கு ஏற்புடையது அல்ல. இது தமிழ்நாட்டிற்கு விரோதமானது என்று

2023 நவம்பர் 18] [திரு. ஜி.கே. மணி]

சொன்னார்களேதவிர, ஒருவர்கூட அதை ஏற்றுக்கொள்ளவில்லை, ஆதரிக்கவில்லை. நான் நடுநிலையோடு சொல்கிறேன், ஏதோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின், அந்தத் தனித் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்ற அந்த நோக்கத்தோடு அல்லாமல், நடுநிலையோடு பார்த்தோம் என்றால், ஆளுநர் அவர்களின் போக்கு ஒட்டுமொத்தமாக நமக்கு கவலையளிக்கிறது; தமிழ்நாட்டிற்கு விரோதமானது. இந்தச் சட்டமன்றத்தில் ஆளுங்கட்சி இருக்கிறது; பிரதான எதிர்க்கட்சி இருக்கிறது; மற்ற கட்சிகள் இருக்கின்றன. ஆக, இவை தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, தமிழ்நாட்டு மக்களின் நலனில் அக்கறைகொண்டு, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக நிறைவேற்றப்பட்டிருக்கக்கூடிய சட்டத் திருத்தங்கள். ஆக, இந்தச் சட்டத் திருத்தங்களுக்கு ஆளுநர் அவர்கள் முட்டுக்கட்டை போடுகிறார் என்று சொன்னால், இவர் தமிழ்நாட்டிற்குத் தேவையா என்ற மிகப் பெரிய கேள்வி நமக்கு முன்பு எழுந்து நிற்கிறது. அதோடுமட்டுமல்ல, ஆளுநருக்கு இருக்கிற அதிகாரத்தை எண்ணிப் பார்க்கின்ற வேளையில் அரசமைப்புச் சட்டம் சொல்கிறது, 'ஒரு மாநில சட்டமன்றம், சட்டமுன்வடிவினை நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு முழு மனதோடு அவர் ஒப்புதல் அளிக்க வேண்டும். அவருக்கு ஏதேனும் விளக்கம் தேவைப்பட்டால், விளக்கம் கேட்டு திருப்பியனுப்ப வேண்டும். நிதித் துறை சம்பந்தமாக அல்லது மிக முக்கியமான பிரச்சினைகள் இருக்குமேயானால் அதை குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்கலாம்' இதுதான் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, ஆளுநருக்கு வழங்கப்பட்டிருக்கிற அதிகாரம். ஆகவே, இதையெல்லாம் தவிர்த்துவிட்டு, ஒட்டுமொத்தமாக தமிழக அரசிற்கு, தமிழக சட்டமன்றத்திற்கு, நம்முடைய ஆளுநர் அவர்கள் எதிராக இருக்கிறார் என்று சொன்னால், இது தமிழ்நாட்டின் நலனிற்கு உகந்ததாக இருக்க முடியாது என்பதைத்தான் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தத் தனித் தீர்மானத்தை வரிசையாக முன்மொழிந்து வாசிக்கின்ற நேரத்தில் எவ்வளவு அரசியல் நாகரிகமாக, பக்குவமாக யாருடைய மனதும் புண்படாமல் வாசித்தார். ஆளுநர் அவர்களை எந்த விதத்திலும் குறைத்து மதிப்பிடவில்லை. இப்போதும் சொல்கிறோம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்

[திரு. ஜி.கே. மணி] [2023 நவம்பர் 18

சொல்கிறார், நாம், எல்லோருமே சொல்கிறோம், மேதகு ஆளுநர் அவர்களை மதிக்கிறோம். ஆனால், தமிழ்நாட்டை மதிக்காத ஆளுநர் அவர்களின் போக்கு ஏற்புடையதல்ல. இது தேவையற்றது என்பதுதான் தீர்மானத்தினுடைய நோக்கமாக இருக்கிறது. இன்னொன்றையும் சொல்கிறோம். துணை வேந்தரை நியமிக்கின்ற அதிகாரம் ஆளுநருக்கு இருக்குமேயானால், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவரை நியமிக்கிறார். அவர்களுக்கு இந்த மொழி பற்றித் தெரியாது; மண்ணைப் பற்றித் தெரியாது; மக்களைப் பற்றித் தெரியாது; பல்கலைக்கழகங்களைப் பற்றித் தெரியாது; எதையோ செய்கிறார்கள். யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. கடந்த ஆட்சிக் காலத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தில் திரு. சூரப்பா என்ற ஒரு துணை வேந்தரை நியமித்தார்கள். என்ன நிலைமை ஏற்பட்டது? நீதிமன்றம் சென்றது, எவ்வளவு பிரச்சினைக்கு உள்ளாக்கியது, அது தேவையா? ஆகவேதான், எல்லா பல்கலைக்கழகங்களுக்கும் தமிழ்நாட்டினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான் வேந்தராக இருக்க வேண்டும் என்பது நீதியாக (மேசையைத் தட்டும் ஒலி) எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசின் கொள்கை முடிவாக இருக்க வேண்டும் என்பது நமக்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

முற்பகல் 11–45

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேந்தராக இருக்கின்ற நேரத்திலேதான், யாரைத் துணை வேந்தராக நியமிப்பது, பல்கலைக்கழகங்களை எப்படி மேம்படுத்துவது, புதிய ஆராய்ச்சிகளை, கண்டுபிடிப்புகளை, வளர்ச்சியை எப்படி கொண்டு வருவது என்பதில் அரசிற்கு அக்கறை இருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அக்கறை இருக்கும். ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவுகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளக் கூடியதாகவே இருக்கிறது என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே தெரிவிக்கிறேன். இன்னும் நிறைய கருத்துக்கள் சொல்ல வேண்டியிருந்தாலும்கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, நேரத்தின் அருமை கருதி நான் சுருக்கமாகச் சொல்ல விரும்புவது, மாண்புமிகு ஆளுநரின் போக்கு எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, மாண்புமிகு ஆளுநர் அவர்களே, இனி சட்டமன்றத்தை மதியுங்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் இணக்கமாக இருங்கள். தமிழ்நாட்டின் வளர்ச்சியிலே அக்கறை கொள்ள

2023 நவம்பர் 18] [திரு. ஜி.கே. மணி]

வேண்டும் என்பதை வேண்டுகோளாக வைக்கிற அதேவேளையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற பல்கலைக்கழகம் குறித்த திருத்தச் சட்டமுன்வடிவுகள் பத்தையும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன். அதோடு, இந்தத் தனித் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு முழு ஆதரவையும் நல்குகிறோம்; மனதார வரவேற்கிறேன்.

அடுத்த நிதிநிலை கூட்டத் தொடருக்கு இடைவெளி இருக்கிறது என்பதால், மாண்புமிகு அரசின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். இது தீர்மானத்திற்கு சம்பந்தம் இல்லை என்றாலும்கூட, சமூக நீதிக்கு முன்னுரிமை கொடுக்கிற தமிழக அரசு, தந்தை பெரியார் பிறந்த மண், சமூக நீதிக்கு வழிகாட்டுகிற மண், நாடு விடுதலை பெற்றால் மட்டும் போதாது;—என்று சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமல்படுத்தப்படுகிறதோ அன்றுதான் முழு சுதந்திரம் பெற்ற நாடாகும் என்று தந்தை பெரியார் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையில், பீகார் மாநிலமும் வழிகாட்டி இருக்கிறது. ஆகவே, மாநில அரசு சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தலாம், அதற்கு அரசு முன்வர வேண்டும். மத்திய அரசு மக்கள்தொகை கணக்கெடுப்பைச் செய்ய வேண்டும். ஆனால் செய்யவில்லை. சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்தமாட்டோம் என்று மத்திய அரசு அறிவித்துவிட்டது. ஆனால், இதற்கு மாநில அரசு முன்வர வேண்டுமென்ற வேண்டுகோளை வைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இந்தத் தனித் தீர்மானத்தை முழு மனதோடு வரவேற்று அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.*

திரு. கு. செல்வபெருந்தகை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 143-ன்கீழ் இன்று கொண்டு வந்திருக்கின்ற, 10 சட்டமுன்வடிவுகளை இப்பேரவை மறு ஆய்வு செய்து அனுப்ப வேண்டும் என்ற தீர்மானத்தை காங்கிரஸ் பேரியக்கம் முழு மனதோடு வரவேற்கிறது, ஆதரிக்கிறது. எங்களுடைய தேசியத் தலைவர் திரு. மல்லிகார்ச்சுன கார்கே அவர்கள், இளம் தலைவர் திரு. ராகுல் காந்தி அவர்களுடைய வழிகாட்டுதலிலே காங்கிரஸ்*

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 நவம்பர் 18

பேரியக்கம் என்றென்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வலுப்படுத்தும் என்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இன்னும் 10 நிமிடத்தில் திருச்செந்தூரில் சூரசம்ஹாரம் நடக்கவிருக்கிறது. எதற்காக இந்தச் சூரசம்ஹாரம் தமிழ்நாட்டில் நடக்கிறது? தமிழ்நாட்டிற்கு படையெடுப்புகள், தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு மக்களையும் அழிக்க வரும்போது, தமிழ் முருகக் கடவுள், முருகப் பெருமான் விழித்தெழுந்து சூரசம்ஹாரம் செய்த நாள் இன்று (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நாளில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டிற்கு மட்டுமல்ல இந்தியாவிற்கே வழிகாட்டுகின்ற இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்ததற்கு நாங்கள் மனமார அவருக்குப் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறோம். அப்படிப்பட்ட இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்த சூரரை நாங்கள் போற்றுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல முன்னுதாரணங்களை, வரலாற்று சிறப்புகளையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்துரைத்தார்கள். இரட்டை நிலைப்பாடு. ஆட்சியில் இருந்தால் ஒரு நிலைப்பாடு, ஆட்சியில் இல்லையென்றால் ஒரு நிலைப்பாடு என ஒரு தேசியக் கட்சி எடுத்து வந்திருக்கிறது. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, இந்த அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டும், மாநில உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று அன்றைய மாண்புமிகு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் மாவட்டங்களுக்கு ஆய்வு செய்யும்போது, அவருடைய தலைமையிலே அனைத்துக் கட்சிகளும் இந்தத் தேசத்தைப் பாதுகாக்க வேண்டும், அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டுமென்று போராட்டங்களை நடத்தின. எதிர்க்கட்சியாக இருந்தபோது என்ன நிலைப்பாடோ, ஆளும் கட்சியாக இருக்கும்போதும் அந்த நிலைப்பாட்டை அவர் முன்னெடுத்துச் செல்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2 ஆண்டுகளுக்கு முன்பு இதே பேரவையில் நான் பேசும்போது சொன்னேன், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நாகாலாந்து முதலமைச்சர் அல்ல, வரலாற்று சிறப்புமிக்க தமிழ்நாட்டின்

2023 நவம்பர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) அவரைத் தொட்டால் shock அடிக்கும் என்று சொன்னது அவைக் குறிப்பில் இன்றுவரை இருக்கிறது. ஆகவே, இன்று உச்ச நீதிமன்றத்தை நாடி தமிழ்நாட்டு மக்களைப் பாதுகாக்கின்ற வேலையில் முனைப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றார்.

முற்பகல் 11–50

இப்போது உச்ச நீதிமன்றம் சில observations கொடுத்திருக்கிறது. அது முதல் வெற்றி. இன்னும் இரண்டு நாட்களில் அந்த வழக்கும் விசாரணைக்கு வரவிருக்கிறது. எங்களை உச்ச நீதிமன்ற வழக்கிற்குள் எல்லாம் போக வேண்டாம் என்று சொல்லியிருக்கிறீர்கள், அதற்குள் போகவில்லை. ஓர் ஆளுநரைப் பற்றி நாங்கள் criticise பண்ண வேண்டும் என்றெல்லாம் எங்களுக்கு எந்த விருப்பமும் இல்லை. நீங்கள் யார் மனதையும் புண்படுத்தாமல் பேச வேண்டுமென்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காலையில்கூட ஒரு வேண்டுகோள் விடுத்தார். அந்தப் பெருந்தன்மையும், பேதமின்மையும், பேராண்மையும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் பார்க்கிறோம். ஆனால், ஓர் ஆளுநர் என்பவர், அவருக்கு என்ன வரன்முறை இருக்கிறது, என்ன வழிகாட்டுதல் இருக்கிறது, அரசமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது என்பதையெல்லாம் பொருட்படுத்தாமல், ஏதோ இங்கு முடியாட்சி நடப்பதுபோல் அவர் தொடர்ந்து மாநில அரசுக்கு எதிராக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார். எனக்கு மிகப் பெரிய அதிர்ச்சி என்னவென்றால், அவர் என்ன விளையாட்டு வேண்டுமென்றாலும் விளையாடட்டும், கடைசியில் நாளை இந்தியா வெற்றி பெறும்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்தான் வெற்றி பெறப் போகிறார்கள், இந்த விளையாட்டில். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு ஜவஹர்லால் நேரு அவர்களுடைய model இருக்கிறது, அன்னை இந்திரா காந்தி அவர்களுடைய model இருக்கிறது, பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய model இருக்கிறது. இன்றைக்கு பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக்கு என்று ஒரு model இருக்கிறது. அதுதான் திராவிட model. அந்த திராவிட model-ஐ கொச்சைப்படுத்தி ஓர் ஆளுநர் எப்படி மாநில அரசியல் செய்யலாம் என்ற கேள்வி எழுகிறது.

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 நவம்பர் 18

மாண்புமிகு ஆளுநர், 4-5-2023 அன்று Times of India-வில் ஒரு கட்டுரை எழுதுகிறார். அதில், 'there is no such thing as the Dravidian model and it is an expired ideology' என்று சொல்கிறார். அப்படி சொல்கிறவருக்கு, மக்கள் கொடுக்கின்ற வரிப் பணத்தில்தான் அவருடைய தொலைபேசிக் கட்டணத்தை தமிழக அரசு கட்டிக்கொண்டிருக்கிறது. அதை pin பண்ணி tag பண்ணி இன்றுவரை வைத்திருக்கிறார். அதை ஏன் இன்றுவரை ஜனநாயக சக்திகள் எதிர்க்கவில்லை? பத்திரிகைகள் ஏன் எதிர்க்கவில்லை? ஊடகங்கள் ஏன் அதை வேடிக்கை பார்க்கின்றன என்று சொன்னால், அவ்வளவு அச்சத்தில் இன்று தேசம் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு மாநில அரசிலே தலையிடுகிறார், மாநில கட்சியிலே தலையிடுகிறார் என்றால் இதையெல்லாம் எப்படி நாம் கண்டிக்காமல் இருக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் இயற்றும்போது ஒரு மிகப்பெரிய விவாதம் நடைபெறுகிறது. அந்த விவாதத்திலே திரு. K.M. முன்சி, திரு. V.T. கிருஷ்ணமாச்சாரியார் உட்பட அனைவரும் உரையாடும்போது, ஆளுநர் 6 வாரங்களுக்குள் முடிவு எடுக்க வேண்டும் என்று article 200-ல் வருகிறது என்று சொல்கிறார்கள். அப்போது டாக்டர் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் சொல்கிறார். எதற்காக 6 வாரங்கள், 45 நாட்கள்? As soon as possible அதற்கு முன்பாகவே முடிவு எடுக்கப்பட வேண்டுமென்று கூறியது, அந்த விவாதங்களிலே இருக்கிறது. அவர்கள் வரையறுத்தது 6 வாரங்கள், ஆனால், அந்த 6 வாரங்கள்கூட கொடுக்கக் கூடாது; as soon as possible முடிவு எடுக்கப்பட வேண்டுமென்று article 200-ல் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்போன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எவ்வளவு பெருந்தன்மையோடு மாண்புமிகு ஆளுநரை இன்று வரை நடத்திக்கொண்டிருக்கிறார். இதுவரை தமிழகத்தில் எங்குமே முட்டை சம்பவங்கள், அபிஷேகங்கள், அர்ச்சனைகள் எல்லாம் பார்த்ததாக எனக்குத் தெரியவில்லை. கடந்த காலங்களிலே இவையெல்லாம் நடந்திருக்கின்றன. தமிழர்களினுடைய கோபத்தை, தமிழ்நாட்டு மக்களினுடைய கோபத்தை எல்லாம் வாங்கிக் கட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் ஓர் ஆளுநருக்கு, ஓர் ஆட்சியைப் பார்த்து வன்மமும், பொறாமையும் இருக்கிறது என்று சொன்னால், அதை எப்படி நம்மால் ஜீரணித்துக்கொள்ள முடியும்? யாரும் எதிர்பாராத அளவுக்கு மக்கள் எல்லாம் போற்றும் அளவுக்கு ஆட்சி நடந்து கொண்டிருக்கும்போது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒத்துழைப்பு தர வேண்டும்.

2023 நவம்பர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

இன்றைய மாண்புமிகு பாரதப் பிரதமர், UPA 2 ஆட்சியில் இருந்தபோது 2011-ல் team work பற்றிக் குறிப்பிடும்போது, ஓர் அரசு என்பது ஒன்றிய அரசு மட்டும் கிடையாது, 'team of the India' என்று சொல்கிறார். டாக்டர் மன்மோகன் சிங்கைப் பார்த்து 'team of the India' என்றால் நீங்கள் மட்டும் கிடையாது, எங்களுடைய மாநில அரசும் இருக்கிறது என்று சொல்கிறார். அப்போது தமிழ்நாடு அரசு மட்டும் மாநில அரசு இல்லையா? அப்பொழுது ஒரு வார்த்தை, இப்பொழுது ஒரு வார்த்தை, அப்பொழுது ஒரு நிலைப்பாடு, இப்பொழுது ஒரு நிலைப்பாடு என்று எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் என்ன சொல்கிறார் என்றால், தமிழ்நாட்டை தமிழகம் என்று அழைக்க வேண்டுமென்றுசொல்கிறார்;நம்முடையஅரசினுடையசின்னத்தை எடுத்துவிட்டு ஒன்றிய அரசின் சின்னத்தை பொருத்துவேன் என்று சொல்கிறார். சமூக நீதியைப் பற்றி எவ்வளவு criticise பண்ண முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறார். இப்படி தொடர்ந்து செயல்படும்போதெல்லாம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு ஆளுநர் சரியாவார், திருந்துவார் என்று சொல்கிறார்கள். நான்கூட ஒருமுறை சொல்லியிருக்கிறேன். எல்லா மாநிலமும் நீதிமன்றத்திற்குச் செல்கிறார்கள், நாம் ஏன் இன்னும் போகவில்லை என்று கேட்டேன். கண்டிப்பாக செல்வோம், அதற்கான காலம் வரும் என்று சொன்னார்கள்.

முற்பகல் 11-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மசோதாக்கள்மேல் விளக்கம் கேட்பதாக இருந்தால், அவர் இவ்வளவு காலம் எடுத்துக்கொள்ள அவசியம் இல்லை என்று பொதுவெளியில் ஒரு நிகழ்ச்சியில் மேதகு ஆளுநர் அவர்களிடம் கேட்டபோது, "சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்துவது என்பது அதை நிராகரிப்பது என்றுதான் அர்த்தம்" என்று சொல்கிறார். இது எவ்வளவு பெரிய வேதனை. அரசமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய ஓர் ஆளுநர் அவர்கள், அரசமைப்புச் சட்டத்தை எப்படி சிதைக்க முயற்சி செய்ய முடியும் என்பதுதான் எங்களுடைய கேள்வி.

Article 200-ல் மிகத் தெளிவாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது அரசமைப்புச் சட்டத்தை இயற்றிய மாமேதைகளில் ஒருவர்

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 நவம்பர் 18 கூறியதாவது, "ஆளுநர் என்ற பதவிக்கு ஒருவர் பொருத்தமாக இல்லாவிட்டால், அவரை அகற்ற வேண்டும்". இதனை நாம் சொல்லவில்லை. அரசியல் மாமேதைகள் சொல்லியிருக்கிறார்கள். 1969 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாளன்று, ராஜமன்னார் கமிட்டியில் அளித்த பரிந்துரைகள் குறித்து பேசியிருக்கிறார்கள். யார் பேசுகிறார்கள் என்றால், UPA 2, நம்முடைய ஆட்சி இருந்தபோது, 2011 ஆம் ஆண்டு, சர்க்காரியா கமிஷனைப் பற்றியும், ராஜமன்னார் கமிஷனைப் பற்றியும் உத்திரப்பிரதேச மாநிலம், லக்னோவில் இந்தப் பொருளை மிகப் பெரிய விவாதப் பொருளாக மாற்றுகிறார்கள். அதைத்தான் நான் சொன்னேன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்றைக்கும் ஒரே நிலைப்பாட்டில் தமிழ்நாட்டையும், இந்திய தேசத்தையும் பாதுகாப்பதில் முனைப்பாக இருக்கிறார். இவர்கள் ஏன் இந்த இரட்டை நிலைப்பாட்டை எடுக்கிறார்கள்? அரசமைப்புச் சட்ட விவாதங்கள் நடக்கிறபோது, Thiru K.M. Munshi சொல்கிறார், "We agree the Governor to be a rubber stamp of the Government formed by the elected representatives of the State" என அப்போதே இதுபோன்ற விவாதங்கள் எல்லாம் செய்திருக்கிறார்கள். Rubber Stamp குறித்த விவாதம் அப்போதே வந்திருக்கிறது. இந்த விவாதங்கள் அனைத்தையும் மேதகு ஆளுநர் அவர்கள் படிக்கிறார்களா, இல்லையா? அரசமைப்புச் சட்டம் Article 200-ல் என்ன இருக்கிறதென்று தெரியுமா, தெரியாதா? அவர் மெத்தப் படித்தவர். I.P.S. அதிகாரி. இதனால்தான் நான் சொன்னேன், இது நாகாலாந்து அல்ல, இது தமிழ்நாடு. இங்கு விளையாட முடியாது. Thiru K.T. Shah ஓர் இடத்தில் சொல்கிறார், ஓர் அரசமைப்புச் சட்டத்தில் "On the advice of the Chief Minister and Cabinet, இதை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்." அதேபோன்று, Thiru B.G. Kher, திரு. பி.கே. சென், Thiru Viswanathadas, இவர்கள் அனைவரும் இது குறித்துப் பேசும்போது, ஒருவர் கூறுகிறார், அப்போதெல்லாம் மாகாணம் என்று இருந்தது. மாகாணம்-Presidency. பிரதமர் அமைச்சராக இருந்தபோது, "பிரிட்டிஷ் ஆளுநர் எங்களைச் சிதைப்பதற்கும், கலைப்பதற்கும் முயற்சி செய்தார்; சுதந்திரத்திற்குப் பிறகும் இது தொடருமா என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறேன்" என்று சொல்கிறார். அதற்கு டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் தெளிவாகச் சொல்கிறார், தமிழ்நாட்டைச் சார்ந்த

2023 நவம்பர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

Thiru T.T. கிருஷ்ணமாச்சாரியாரும், அவரும் உரையாடியபோது, "He can act only on the advice of the Cabinet or Ministry. So, we need not fear or worry" என்று கூறுகிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Thiru K.M. Munshi அவர்கள் "ஆளுநர் என்பவர் எப்படி இருக்க வேண்டும்" என்பதற்கு ஒரு வரையறை சொல்லியிருக்கிறார். அது நம் ஆளுநர் அவர்களுக்குப் பொருந்தும். "A Governor should be free from passion and jealous of local parties and State Government". மாநில அரசு விஷயத்தில் இவர் தலையிடக் கூடாது என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். அந்தக் காலத்திலேயே அவர்களுக்கு, இப்படிப்பட்ட ஓர் ஆளுநர் வருவார், இவ்வாறெல்லாம் அரசமைப்புச் சட்டத்தைச் சிதைப்பார், இவற்றிற்கெல்லாம் தமிழ்நாடு அரசு போராட வேண்டிய காலம் வரும் என்று தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன். அதுதான் உச்ச நீதிமன்றம், "தமிழ்நாடு அரசு நீதி கேட்டு உச்ச நீதிமன்றத்தை நாடுவது வேதனையளிக்கிறது" என்று தெரிவித்துள்ளது. நேற்றையதினம் பஞ்சாப் மாநிலத்தில் ஒரு மசோதாவிற்கு உடனேயே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றம் எவ்வளவு குட்டு வைத்தாலும், இவர்கள் திருந்துவதாக இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைவாகக் கூற விரும்புகிறேன். 2011 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் நாள், UPA 2 அரசாங்கம் நடைபெற்றபோது, அப்போதைய குஜராத் மாநில முதலமைச்சராக இருந்தவர் இன்றைய மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள்தான். அவர் அப்போது "ஒன்றிய அரசு, மாநில அரசாங்கங்களை நசுக்கப் பார்க்கிறது" என்று முன்மொழிந்திருக்கிறார். எப்படி நசுக்கப் பார்க்கிறது என்றால், ஆளுநருரைப் பற்றி பேசுகிறார்கள், பல்கலைக்கழகத்தைப் பற்றி பேசுகிறார்கள், income tax-ஐப் பற்றி பேசுகிறார்கள். வேறொன்றுமில்லை. அவர் சொல்கிறார், டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் என்ன சட்டத்தை எழுதியிருக்கிறாரோ அந்தச் சட்டத்தை யாரும் மதிப்பதில்லை, அரசமைப்புச் சட்டத்தின்மீது இவர்கள் யாருக்கும் நம்பிக்கை இல்லை என்று UPA 2 அரசாங்கத்தைப் பற்றி சொல்கிறார்.

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 நவம்பர் 18 நண்பகல் 12–00

The federal structure as framed in our Constitution recognizes the diversity of India. Dr. B.R. Ambedkar, in the Constituent Assembly observed: "The Constitution is a Federal Constitution in as much as it establishes a dual polity. மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. The Union is not a league of States, united in a loose relationship, nor are the States the agencies of the Union, deriving powers from it. Both the Union and the States are created by the Constitution, both derive their respective authority from the Constitution." Article 154 பற்றி சொல்கிறார். It provides for the executive powers of the State, whereas Article 246 provides for the distribution of legislative powers between the States and Centre. The powers are clearly divided between the Union and the States in the Union list, State List and Concurrent List. Cooperative federalism or a federal dharma was to be honored. "தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட சொன்னார், "அம்பு இங்கு வருகிறது, ஏவுவது யார்?" என்று, அந்த அம்பை ஏவுபவர்கள்தான் இதையெல்லாம் பேசித் தீர்மானமாகப் போட்டிருக்கிறார்கள். 2011-ல் அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்பதெல்லாம் வெளிப்படையாகவே இருக்கிறது. இப்போது மாண்புமிகு அமைச்சர்களின் வீடுகளில் ** நுழைகிற மாதிரி எல்லோரும் நுழைகிறார்கள். அதற்கு அவர் என்ன சொல்கிறார் என்றால். . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தை நீக்கப்படுகிறது.

திரு. கு. செல்வபெருந்தகை: நான் யாரையோ சொல்கிறேன். யாரையும் நான் புண்படுகிற மாதிரி சொல்லவில்லை. In February 2011, Income Tax notice was issued to the Government of Gujarat asking for details of the Memorandum of Understandings (MoU) signed between the State Government and the various corporate entities during the Vibrant Gujarat Summit. ஒரு முதலீடு வருகிறது, ஒரு company வருகிறது, detail கொடுங்கள் என்று income tax ஒரு notice அனுப்புகிறது. உடனே என்ன

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2023 நவம்பர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

சொல்கிறார் என்றால், இந்த federal sytem-ஐ மாற்றுகிறார்கள். இந்திய அரசமைப்புச் சட்டத்தை மதிக்கவில்லை. ஒரு Detail கேட்டதற்கே இந்த மாதிரி என்றால், இன்றைக்கு என்னென்ன அத்துமீறல்கள் நடக்கின்றன, என்னென்ன அநியாயங்கள் நடக்கின்றன, எப்படியெல்லாம் மிரட்டப்படுகிறது. எந்தெந்த ஏஜென்சியையெல்லாம் வைத்து தன்னுடைய கைப்பாவையாக பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, இவையெல்லாம் முன் உதாரணங்கள்; இதை, நான் சொல்லவில்லை. நான் எதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், இவர்களையும் ஒப்பிட்டுப் பேசுகிறேன் என்றால், மாண்புமிகு முதலமைச்சர் எதிர்க்கட்சியில் இருந்தபோது எந்த நிலைப்பாட்டை எடுத்தாரோ அந்த நிலைப்பாட்டை ஆளுங்கட்சியாக இருக்கின்றபோதும் எடுக்கிறார். ஆளுங்கட்சியாக இருக்கும்போது எந்த நிலைப்பாட்டில் இருக்கிறாரோ, எதிர்க்கட்சியாக இருந்தபோதும் அதேபோன்றுதான் இருந்திருக்கிறார். ஆனால், இவர்களுக்கு எதற்கு இந்த இரட்டை வேஷம்? இதை கிராமத்திலே 'முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்' என்று சொல்வார்கள். Indian Constitution-ஐ வைத்து ஏன் முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள்?

அதுமட்டும் கிடையாது. இப்போது ஆளுநர் பற்றி பேசுகிறோம். கர்நாடகாவில் BJP Government இருக்கிறது. காங்கிரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் சொல்கிறார், "The conduct of the Governors who are working as political agents goes unchecked, notwithstanding the protests from the people, political parties and the media. Repeated constitutional impropriety goes without any reprimand. The repeated violation of proprietary by the Governor of Karnataka is blatant and brazen". நாங்கள் இரண்டு முறை சொல்லியிருக்கிறோம். ஆனால், காதில் வாங்க மாட்டோம் என்கிறார்கள்.

For the second time, his recommendation to remove the elected BJP government was rejected by the Central government. And he still continues as Governor of Karnataka. கர்நாடகாவில் காங்கிரஸ் அரசால் நியமிக்கப்பட்ட ஆளுநர் இரண்டுமுறை நிராகரித்துவிட்டார். நிராகரித்த பிறகு, இவர்கள் ஆளுநர் ஏன் அதை எடுக்கவில்லை என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இது ஒன்று. இந்தத் தீர்மானம் எதை வைத்து போடுகிறார்கள் என்றால்—ராஜமன்னார் குழு பற்றி சொல்கிறார்கள், சர்க்காரியா குழு பற்றிப் பேசுகிறார்கள். டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர்

[திரு. கு. செல்வபெருந்தகை] [2023 நவம்பர் 18

கூறியதைப் பற்றி பேசுகிறார்கள். இப்போது 10 பல்கலைக்கழக மசோதாக்கள் வந்திருக்கின்றன. அவற்றில் முக்கியமாகச் சொல்லப்படுவது University Bill—Uttarakhand's Bill to set up Pandit Deendayal Upadhyaya University passed by its legislature is being held up at the Raj Bhavan. உத்தரகாண்டில் பல்கலைக்கழக மசோதாவை ஓர் ஆளும் கட்சி இயற்றும்போது, பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெரும்பான்மை ஆட்சி இயற்றும்போது, இது ராஜ்பவனில் 45 நாட்களாக முடங்கி இருக்கிறது. 45 நாட்கள், 45 நாட்கள் என்று எல்லாவற்றிலும் சுட்டிக்காட்டுகிறார்கள். 45 நாட்களுக்குமேல் இது ராஜ்பவனில் தூங்கக் கூடாது என்கிறார்களே, 45 மாதங்களுக்குமேல் அங்கு நம்முடைய சட்ட மசோதாக்கள் உறங்கிக்கொண்டிருக்கின்றன. இது யாரை வஞ்சிப்பது, இந்திய இறையாண்மையை சீர்குலைப்பது, தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்துவது. இது பெரும்பான்மை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் எல்லோரும் அங்கிருந்து சீக்கிரம் முடியுங்கள் என்று சிக்னல் கொடுத்துக்கொண்டே இருக்கிறீர்கள். அவரைப் பற்றி பேசுவதற்கு இதற்குமேல் ஒன்றும் இல்லை. ஒன்றிய அரசு, நீங்கள் லக்னோவில் 2011–ல் என்னென்ன தீர்மானம் போட்டீர்களோ நீங்களே அவற்றைத் திரும்பப்பெற வேண்டும். திரும்பப் பெறுவதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுத்து விடாதீர்கள். உங்களுடைய ஆட்டமெல்லாம் இன்னும் 5 அல்லது 6 மாதங்கள்தான். ஒரு புதிய ஆட்சி ஏற்படும். அதற்கு வழிகாட்டியாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை வழிநடத்துவார். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், ஒன்று மட்டும் உறுதி. மேதகு ஆளுநர் அவர்கள் இதில் கண்ணும் கருத்துமாக இருப்பதை—என்னை பொதுக் கணக்கு குழுத் தலைவராக நியமித்து இருக்கிறார்கள். அண்ணா பல்கலைக்கழகம் அவருடைய கட்டுப்பாட்டில் இருக்கிறது. எவ்வளவு ஊழல் அதில் நடந்து கொண்டிருக்கிறது. இதைப் பற்றி ஒரு வார்த்தை பேசுவாரா? காமராஜர் பல்கலைக்கழகத்தில் எவ்வளவு—இதை நான் சொல்லவில்லை Comptroller and Auditor General of India report கொடுத்திருக்கிறார்கள்.

பிற்பகல் 12–05

அந்த report–ல், Anna University–ல் திரு. சூரப்பா பதவி காலம் முதல் இன்றுவரை எப்படியெல்லாம் ஊழல் நடந்திருக்கிறது

2023 நவம்பர் 18] [திரு. கு. செல்வபெருந்தகை]

என்று கொடுத்திருக்கிறார்கள். அதுகுறித்து இதுவரை ஒன்றுமே வாய் திறக்கமாட்டேன் என்கிறார். என்ன காரணம்? எதற்காக மௌனம் சாதிக்கிறார். தேவையில்லாமல் அரசியல் செய்கிறார், தேவையில்லாமல் ராஜ்பவனையே RSS கூடாரமாக மாற்றி வருகிறார். தமிழ்நாட்டு மக்கள்மீது அக்கறை இருந்தால், தமிழ்நாட்டு மக்கள்மீது உண்மையிலேயே இவருக்கு விருப்பம் இருந்தால், இதையெல்லாம் பேச வேண்டும்.

காமராஜர் பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழாவிற்குச் செல்கிறார். அங்கே ABVP நிறுவனத்தினுடைய துணைத் தலைவரை நியமித்து அவருடன் ஒரு மணி நேரம் உரையாடல் செய்துகொண்டிருக்கிறார். அந்தப் புகைப்படங்களெல்லாம் வெளிவந்தன. அப்போது அவர் declare செய்கிறார், நான் RSS அலுவலகம் நடத்துகிறேன், நான் பா.ஜ.க.-வின் பிரதிநிதி, ஆளுநர் கிடையாது, இந்திய அரசமைப்புச் சட்டம் கிடையாது என்று. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் தீர்மானத்தை முழு மனதோடு நாங்கள் ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். என்றென்றும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு காங்கிரஸ் பேரியக்கம் உறுதுணையாக இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இந்தத் தீர்மானத்திற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் உடனே ஒப்புதல் தர வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசினுடைய தனித் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதிலே, பிரதான எதிர்க்கட்சி என்ற முறையில் எங்களுடைய கருத்துகளை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 சட்டமுன்வடிவுகளை மேதகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியுள்ளதாகவும், அது சட்டமன்றத்தில் மீண்டும் கொண்டு வரப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு அதை நிறைவேற்ற வேண்டுமென்ற கருத்தினை தனித் தீர்மானத்தில் தெரிவித்திருக்கிறார்கள். அதில் "I withhold assent" என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நிறுத்தி வைப்பதாகத் தெரிவித்திருக்கின்றார்கள். 'நிறுத்தி*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 நவம்பர் 18

வைப்பதாக' என்று தெரிவிக்கப்படுகின்றபோது, அது தொடர்ந்து இருப்பதாகத்தான் பொருள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அது இரத்தானதாகவோ அல்லது நிராகரிக்கப்பட்டதாகவோ தெரிவிக்கப்படவில்லை. ஏற்கெனவே சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள் மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அது நிலுவையில் இருப்பதாகத்தான் பொருள் கொள்ளப்படும் என்று கருதுகிறேன். இதில் ஏதாவது சட்ட சிக்கல் இருக்குமா என்பதையும் இந்த அரசு ஆய்வு செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை நிலுவையில் இருப்பதாக அர்த்தம் அல்ல, திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன. மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பவில்லை, மாறாக அவர் தனது ஒப்புதலை நிறுத்தி வைத்துள்ளார் என்று இன்றைக்கு பல ஊடகங்களில் சொல்வதைப்போல மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் இன்றைக்குச் சொல்கிறார்.

சட்டமன்றம் இதனை மீண்டும் ஒப்புதல் அளித்து அனுப்பி வைத்தாலும் அரசமைப்புச் சட்டம், பிரிவு 200-இன்படி அவர் ஒப்புதல் வழங்கக் கட்டுப்பட்டவர் அல்ல என்று, யாரோ தவறாக அப்படி கருத்துகளைத் திணித்துக்கொண்டிருக்கிறார்கள். அது ஒரு தவறான கருத்து. யாரோ ஒரு சட்ட மேதாவி அளித்த ஆலோசனையின்படி, கெட்டிக்காரத்தனமாகச் செயல்படுவதாக நினைத்துக்கொண்டு இப்படி ஒரு குறிப்புரையை அவர் எழுதியுள்ளார் என நினைக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டத்தின் ஓட்டைகளுக்குள் ஒளிந்து கொண்டு, இல்லாத அதிகாரத்தை இருப்பதாகக் கருதிக்கொண்டு, மாநில மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுபவருக்கு இதற்கான சட்ட பின்புலத்தை, வரலாற்றை கொஞ்சம் எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

1-8-1949 அன்று நடைபெற்ற அரசமைப்பு சட்ட விவாதத்தின்போது, பேராசிரியர் திரு. ஷிப்பன் லால் சக்ஸேனா அவர்கள் ஓர் அச்சத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது, ஆளுநர் என்பவர் ஒன்றிய அரசால் நியமிக்கப்படுபவர்

2023 நவம்பர் 18] [திரு. எஸ். ரகுபதி]

என்பதால், ஒன்றிய அரசின் கட்சி ஆட்சியில் இல்லாத ஒரு மாநிலத்தில் அவரால், மாநில சட்டமன்ற முடிவுகளுக்கு ஒத்துப் போகாமல் இருக்கக் கூடும் என்ற அச்சத்தை அன்றைக்கு அவர் வெளிப்படுத்துகிறார்.

எனவே, சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பும் அதிகாரத்தை இரு அவைகள் உள்ள மாநிலங்களுக்கு மட்டுமே பொருந்தும் வகையில் அமைக்க வேண்டும் என்று தன் கருத்தினை அன்றைக்குப் பதிவு செய்கிறார். அதற்குப் பதிலளித்த அரசமைப்பு வரைவுக் குழு உறுப்பினர் திரு. டி.டி. கிருஷ்ணமாச்சாரி அவர்கள், பேராசிரியர் திரு. சக்ஸேனா அவர்களின் அச்சம் அவசியமற்றது என்றும், ஆளுநர் என்பவர் தன்னிச்சையாகச் செயல்பட வகை செய்யப்படவில்லை என்றும், அவர் எப்போதுமே அமைச்சரவையின் அறிவுரையின்படியே செயல்பட வேண்டியவர்தான் என்பதையும் தெளிவுபடுத்துகிறார்.

எனவே, இரு அவைகள், அதாவது, முன்பு சட்டமன்ற மேலவை என்ற அமைப்பு இருந்தபோது, அதனடிப்படையில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவினை, அதில் மாற்றுக் கருத்து சட்டமன்றத்திற்கு இருந்தால், ஆளுநருக்கு அந்தச் சட்டமுன்வடிவினை ஏற்பது அல்லது திரும்ப அனுப்புவது குறித்த அறிவுரையை அமைச்சரவை வழங்க வழிசெய்யப்பட்டது. ஆளுநருக்கு இதில் தனிப்பட்ட எந்தவித முடிவெடுக்கும் அதிகாரமும் வழங்கப்படவில்லை என்பதை 1-8-1949 நாளிட்ட அரசமைப்புச் சட்ட விவாதங்கள் பக்கம் 61-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்பகல் 12-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். ஒரேயொரு நிமிடம், நீங்கள் நியாயமான. . . (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய தலைவர்களில் ஒருவர் சொன்னாரே, If I put it in a cold storage நான் அதற்கு பதில் அளிக்கவில்லையென்றால், அது மறுக்கப்பட்டது, செத்துப்போய்விட்டது என்று அர்த்தமாகிவிடும். அங்கே உயிரோடு இருக்கிறது என்று நீங்கள் நினைக்கிறீர்கள். அவர் என்ன

[திரு. துரைமுருகன்] [2023 நவம்பர் 18

சொல்கிறார், அப்படி வைத்திருந்தால் அது செத்துப்போய்விட்டது என்று சொல்கிறார். ஆகையால், இப்போது செத்துப்போய்விட்டதா, உயிரோடு இருக்கிறதா என்று பார்க்கின்ற அந்த வேலையையும் நாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், அதற்கான right இந்த அவைக்கு இருக்கிறதா என்று. . . (குறுக்கீடு) மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Withheld or withhold என்பது it amounts to rejection actually. Withhold என்று அவர் சொல்வது, It's a rejection. I will come to the point. It is a euphemism. இல்லை, It is a euphemism. Withheld பண்ணியிருக்கிறது, (குறுக்கீடு) நான் வருகிறேன். I will come to the point, Sir. I will come to the point.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: என்ன காரணம் என்றால், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களோ அல்லது மாண்புமிகு ஆளுநர் அவர்களோ, சட்டமன்றத்திலிருந்து வரக்கூடிய ஒன்றை நாங்கள் reject செய்கிறோம் என்று சொல்வது இல்லை. ஆனால், அதனுடைய பொருள்படக்கூடிய அளவில், அவர்கள் "withheld" என்று சொல்கிறார்கள் என்று சொன்னால், அவர் அதை நிராகரிக்கிறார் என்பதுதான் பொருள்.

நான் இந்த அவையில் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கெனவே NEET மசோதாவின்மீது—மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அந்த மசோதாவை இங்கிருந்து நாம் அனுப்பியபோது, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் என்ன சொன்னார் என்று கேட்டீர்கள் என்றால்,—அது "withheld" என்று போட்டு வந்தது. இதே அவையில் அன்றைக்குச் சொன்னார்கள், இல்லை, அது withheld-தான். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, அது "withheld"-தான், அதன்மீது முடிவெடுக்கவில்லை என்று சொல்லும்போது—ஆனால், நீதிமன்றத்திற்கு வந்தபோது, அது தெளிவுபடுத்தப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் Solicitor

2023 நவம்பர் 18] [திரு. தங்கம் தென்னரசு]

அவர்களே நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள், withheld என்று சொன்னார் என்றாலே, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் அதை நிராகரித்திருக்கிறார் என்றுதான் அது பொருள்படும் என்று ஏற்கெனவே அந்த வழக்கிலேயே உயர் நீதிமன்றத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. எனவே, இந்த இடத்திலும், மாண்புமிகு ஆளுநர் அவர்கள், "withhold" "I withhold my assent" என்று சொல்கிறார்கள் என்றால், இதை நான் நிராகரிக்கிறேன் என்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் சொல்வதாகவே அது பொருள்படும் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதாவது, இந்த அவைக்கு நானும் சில விவரங்களைச் சொல்ல வேண்டும். நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்கள் அதை "I withhold assent" என்று போட்டிருக்கிறார்கள். அப்படியென்றால், திரும்ப இந்தச் சட்டமன்றத்தில் விவாதிப்பதற்கோ, மறு ஆய்வு செய்வதற்கோ உரிமை இருக்கிறதா என்கின்ற கோணத்தில்தான், நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அவர்களின் கேள்வி நியாயமான கேள்விதான். அதில் ஒன்றும் தவறில்லை. ஆனால், NEET தேர்வில் நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுமாதிரி, நம்முடைய மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் இதேபோன்று, "I withhold assent" என்று சொல்லி, திருப்பி அனுப்பியபோது, அப்போது நம்முடைய சட்டத் துறை அமைச்சராக இருந்த திரு. சி.வி. சண்முகம் அவர்கள், நாங்கள் அதற்கு மத்திய அரசிடம், என்ன காரணத்திற்கு withhold என்று நீங்கள் அனுப்பினீர்கள் என்ற விவரத்தைக் கேட்டிருக்கிறோம். அந்த விவரம் வந்திருந்தால் அந்த Bill-ஐ மறு ஆய்வுக்கு நாங்கள் இந்தச் சட்டமன்றத்திற்குக் கொண்டு வந்திருப்போம் என்று அவர்கள் சொன்னபோது, அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த இன்றைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், *2019* ஜூலை மாதம் *17* ஆம் தேதி, தெளிவாகச் சொன்னார்கள், withhold என்று சொன்னதை, Article *201* of the Indian Constitution-ன்படி, மறு ஆய்வு செய்வதற்கு இந்தச் சட்டமன்றத்திற்கு உரிமை இருக்கிறது. சட்டமன்றம், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது. பெரும்பான்மை உறுப்பினர்களைக் கொண்டவர் முதலமைச்சராக இருக்கின்றார். அந்த அவைக்கு முழு இறையாண்மை இருக்கின்றது, மாண்பு இருக்கின்றது,

[பேரவைத் தலைவர்] [2023 நவம்பர் 18

மக்கள் பிரச்சினையை எத்தனை முறை வேண்டுமென்றாலும் கொண்டு வரலாம் என்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அப்போது தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். இந்த அவையின் அவைக் குறிப்பில் அது இருக்கிறது.

பிற்பகல் 12–15

இன்னும் அதற்குமேல் சொல்ல வேண்டுமென்றால், withhold என்று சொல்லி, அதை நிறுத்தி வைத்திருப்பதாக அவர் சொன்னால், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வு செய்யுங்கள் என்றோ, மறு ஆய்வு செய்யக் கூடாது என்றோ எந்த இடத்திலும் குறிப்பிடவில்லை. இந்திய அரசமைப்புச் சட்டத்தில் மறு ஆய்வுக்கு உட்பட்டது, மறு ஆய்வு செய்யக் கூடாது என்று சொல்லவில்லை. இந்த இடத்தில், இந்தப் பேரவைக்கு மிகப் பெரிய மாண்பு இருக்கின்றது. பேரவை விதி 286-ன்படி இந்திய அரசமைப்புச் சட்டத்திலோ அல்லது பேரவை விதிகளிலோ குறிப்பிட்டு சொல்லப்படாத பொருள் குறித்து சட்டமன்றத்தில் இவ்வாறு அரசு ஒரு தனித் தீர்மானம் கொண்டு வந்தால், அந்த இடத்தில் சட்டமன்றப் பேரவைத் தலைவர் என்ற முறையில், அதாவது, இந்தச் சட்டமன்றப் பேரவை எனக்குத் தந்திருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி, இந்தச் சட்டப் பேரவையிலே மறு ஆய்வுக்கு சபாநாயகர் என்ற முறையில், நான் அனுமதி அளித்துத்தான் இதுவரை இந்த விவாதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அதில் மாறுபட்ட கருத்து யாருக்கும் இல்லை. மறு ஆய்வுக்கு உட்பட்டதுதான். எந்தக் காரணமும் இல்லாமல், உள்நோக்கத்தோடு அது திருப்பி அனுப்பப்பட்டது என்றுதான் அதில் பொருள்கொள்ள வேண்டும். காரணம் உயர் கல்விக்கு என்று சொல்லி ஒரு சட்டத் திருத்தம் வந்திருக்கிறது. அது எந்த இறையாண்மைக்கு எதிரானது? இது எந்த அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது? இன்னும் சொல்லப்போனால், தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்தப் பல்கலைக்கழகத்திற்கும் ஒன்றிய அரசு தற்போது மானியமே வழங்குவதில்லை. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு 3 ஆண்டுகளாக ஒரு நயா பைசாகூட வழங்கப்படவில்லை. இது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

ஆகவே, இந்த நிலையிலே முழுவதுமாக ஓர் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு உயர்

2023 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

கல்வித் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் நம்முடைய வரி வருவாயின்மூலம் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் அனைத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில், 3 வருடங்களுக்குப் பிறகு மொத்தமாக அவர்கள் withhold என்று எழுதி அனுப்பியதில், உள்நோக்கம் இருப்பதாகத்தான் அனைவருமே வெளிப்படையாகச் சொல்கிறார்கள். நம்முடைய பாரதிய ஜனதா கட்சியினுடைய சட்டமன்றக் குழுத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் சரியான பதில் இல்லாத காரணத்தால் வெளிநடப்பு செய்திருக்கிறார். நான்கூட அவர்கள் வெளிநடப்பு செய்வதைப் பார்த்தால், தமிழ்நாட்டிலே யாருமே ஆளுநருடைய செய்கைக்கு சரி என்று சொல்லவில்லை. இவர்கள் சொல்லித்தான் அவர் செயல்படுகிறாரோ என்கின்ற ஓர் அர்த்தம் வந்துவிடும், இவர் வெளிநடப்பு செய்வதாலேயே அப்படி ஒரு நோக்கம் வந்துவிடும். ஆகவே, இவருக்கு தமிழ்நாட்டின்மீது அக்கறை இருக்கிறதா என்று தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தத் தனித் தீர்மானம் நிறைவேற்றப்படுவதன்மூலம், இச்சட்டமுன்வடிவுகள் மறு ஆய்வுக்கு உட்பட்டவை. 10 சட்டமுன்வடிவுகளையும் ஒரு fullstop, ஒரு comma கூட இல்லாமல், NEET விலக்கு மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, online Rummy தடை மசோதா எவ்வாறு மீண்டும் நிறைவேற்றி அனுப்பப்பட்டதோ, அதேபோன்று இந்த 10 மசோதாக்களும் மீண்டும் அனுப்பப்படும். அவற்றிற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் தர வேண்டும். இதுதான் சட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், ஐயா.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசமைப்புச் சட்டத்தின் 200 ஆவது பிரிவை நாம் வாசித்துப் பார்த்தால், ஒரு தீர்மானம் அனுப்பும்போது, 'Governor has to give assent or withhold assent' இந்த வார்த்தை மட்டும்தான் அங்கே பயன்படுத்தப்பட்டு இருக்கிறது. அதைப் பயன்படுத்தித்தான் ஆளுநர் திருப்பி அனுப்பி இருக்கிறார். எனவே, அந்தச் சட்ட மசோதாக்களை மறு ஆய்வு செய்வதிலே நமக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தடையும் இல்லை. (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

[*2023 நவம்பர் 18*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, சட்டமன்றத்தில் இந்தச் சட்டமுன்வடிவு கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் அவர்கள் காலதாமதம் செய்த காரணத்தினால், இந்த அரசு அதைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது. அதனால்தான் இதைக் குறிப்பிடுகின்றேன். வழக்கு தொடர்ந்திருக்கின்ற காரணத்தினாலேயே—நம்முடைய தீர்மானத்திலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'நிறுத்தி வைப்பதாக, withhold' என்று சொல்லியிருக்கின்றார். அதைத்தான் சுட்டிக்காட்டியிருக்கின்றேன். ஆகவே, இன்றைக்கு வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இருக்கின்றது. அந்த வழக்கு வருகின்றபோது இதில் ஏதாவது பிரச்சினை ஏற்படுமா அல்லது சட்ட சிக்கல்கள் ஏற்படுமா. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் பதில் சொல்கிறேன். வழக்கு இருக்கும்போது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த முடிவு எடுத்தது சரியா என்பதையும் நாம் பார்க்க வேண்டுமல்லவா! அந்த முடிவு எடுத்ததன் பேரில்தான், நாம் இந்த முடிவை எடுத்து, தனித் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் நடுநிலையோடு இருக்கின்றவர். மாண்புமிகு அமைச்சரைப்போல நீங்களே பேசிக் கொண்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்ல வேண்டிய கருத்துகளையெல்லாம் நீங்களே சொல்லிவிடுகிறீர்கள். (குறுக்கீடு) அதற்கு **. எல்லா இலாகாவையும் நீங்களே எடுத்துக்கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்வதைத் தவறாக எண்ண வேண்டாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, தமிழ்நாட்டில் (குறுக்கீடு) அதற்கு ** என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) இது சட்டப் பேரவைத் தலைவர் சார்ந்தது. ஏனெனில், தனித் தீர்மானம் கொண்டு வருவதற்கு*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2023 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

நான்தான் அனுமதி கொடுத்திருக்கிறேன். அவ்வாறு அனுமதி கொடுத்தது சரியா, தவறா என்பதற்கு நான் பதில் சொல்ல வேண்டும். எனக்கும் கடமை இருக்கிறது. எனவே, நீங்கள் ** என்று சொன்னதை நீக்குகிறேன். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த இலாகாவிற்கு அமைச்சர்கள் இருக்கின்றார்கள். அந்த இலாகா சம்பந்தப்பட்ட பிரச்சினை வருகின்றபோது, அவர்கள் அதைத் தெளிவுபடுத்துவார்கள். எல்லா இலாகா சார்பாகவும் நீங்களே பதில் சொல்லிவிடுகிறீர்கள். (குறுக்கீடு) ஆனால், நாங்கள் சொல்வது வெளியில் வருவதில்லை. நீங்கள் பேசுவதுதான் தொலைக்காட்சியிலே ஒளிபரப்பாகின்றது. (குறுக்கீடுகள்) நிகழ்ச்சி நிரலிலும் இடம்பெறுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் எல்லா பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும் வரும். (குறுக்கீடுகள்) அதாவது, ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக எல்லாம் உண்டு. (குறுக்கீடுகள்) நான் வாதத்திற்குச் சொல்லவில்லை. ஒன்று சொல்கிறேன். சபையிலே மறு ஆய்வு செய்யலாமா, செய்யக்கூடாதா என்பதுதான் உங்கள் கேள்வி. மறு ஆய்வு செய்யலாம். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது அவ்வாறு செய்யலாமா என்று கேட்கிறீர்கள். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு இருக்கும்போது ஆளுநர் திருப்பி அனுப்பலாமா? (குறுக்கீடு) அவர் திருப்பி அனுப்பினால், இந்தப் பேரவைக்கு என்று ஒரு மாண்பு இருக்கிறது. இந்தச் சட்டமன்றத்திற்கென்று ஒரு மாண்பு இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலே சபாநாயகருக்கு நீங்கள் தந்த உரிமை இருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: எல்லா பதில்களையும் நீங்களே சொல்லிவிடுகிறீர்களே!

பிற்பகல் 12–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நான் சம்பந்தப்பட்டது. அரசினர் தனித் தீர்மானம். இதற்கு பேரவைத் தலைவராகிய நான்தான் அனுமதி கொடுக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[*2023 நவம்பர் 18*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுவிட்டது. அந்த வழக்கு முறையாக நடைபெற வேண்டும். அதில் எந்தவொரு பிரச்சினையும் ஏற்படக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் இதை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேநேரத்தில் இந்த வழக்கு தொடரப்பட்டுவிட்டது. கோப்பு பல மாத காலமாக நிலுவையில் இருக்கிறது என்று கருதி, இந்த அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறது. அந்த வழக்கில் தீர்ப்பு வருவதற்குமுன் ஏன் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்ட வேண்டும்? அந்த வழக்கிலேயே, நல்ல தீர்ப்பு கிடைத்துவிட்டால், நீங்கள் எண்ணியவாறு தீர்ப்பு கிடைக்கப்பெற்றுவிட்டால், இந்தச் சிறப்புக் கூட்டம் கூட்டுவதற்கு அவசியம் இல்லாமல் போயிருக்கும். அவசர அவசரமாக ஏன் இந்தச் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, இந்தச் சட்டமுன்வடிவுகளை மறு ஆய்வு செய்ய வேண்டும் என்பது குறித்து மக்களிடையே சந்தேகம் ஏற்படுகிறது. (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் ஒரு சின்ன பிரச்சினை. தமிழ்நாடு ஆளுநரின் செயல்பாடு சரியில்லை;* satisfaction *இல்லை; திருப்திகரமாக இல்லை என்று உச்ச நீதிமன்றத்தில் சொன்னோம். அவ்வாறு சொன்னவுடனேயே, அதுவரையிலும் மாதக் கணக்கில் நிலுவையில் வைத்திருந்தவர், உடனேயே அவற்றை அனுப்பிவிட்டார். அந்தக் கோப்புகளை மாண்புமிகு சபாநாயகருக்கு அனுப்பிவிட்டார். தற்போது கோப்புகளைத் திருப்பி அனுப்பிவிட்ட நிலையில், நாளை மறுநாள் வழக்கு விசாரணைக்கு வரும். அப்போது என்ன சொல்வார் என்றால், நான் கோப்புகளைத் திருப்பி அனுப்பிவிட்டேன் என்று சொல்லிவிடுவார். கோப்புகளை அனுப்பிவிட்டார்போலும் என்று உச்ச நீதிமன்றமும் நினைக்கக்கூடும். மறுபடியும் அந்தக் கோப்புகள் போகாது. அதனால்தான், சட்டத்தை மிகவும்* clear cut *ஆகவே சொல்கிறேன்.* The Governor may give assent to the Bill; *ஏற்பிசைவு கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுள்ளது.* The Governor may give assent to the bill or withhold the bill or return the bill to the Legislature with his message or send the bill for consideration of the President. If the bill is returned

2023 நவம்பர் 18] [திரு. துரைமுருகன்]

to the Legislature—*இதைத்தான் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.* If the bill is returned to the Legislature with message for reconsideration and if it is passed again with his message or without his message, the Governor thereafter is bound to accord his assent to the bill. *அதாவது, அவர் திருப்பி அனுப்பும்போது, அதில் ஏதேனும் யோசனை சொல்லியிருந்தாலோ அல்லது சொல்லாமல் அனுப்பியிருந்தாலோ, இந்த மன்றம் அந்த யோசனையை ஏற்றுக்கொள்ளலாம்; ஏற்றுக்கொள்ளாமல் பழைய மாதிரியே அனுப்பலாம்; அப்படி அனுப்பினால், அவர் நிச்சயமாக அதற்கு* assent *கொடுத்தே ஆக வேண்டும். ஆகவே, தற்போது வலையில் சிக்கிவிட்டார். எனவே, நாங்கள் திருப்பி அனுப்பிவிட்டோம் என்று நாளைக்கு உச்ச நீதிமன்றத்தில் சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அடுத்து வழக்கு விசாரணைக்கு வருவதற்கு முன்பாகவே, நாம் நிறைவேற்றிய இந்தச் சட்டமுன்வடிவுகள் ஆளுநர் மாளிகை ராஜ் பவனில் இருக்கும். அவற்றில் கையெழுத்திட்ட பிறகே அவர் டில்லிக்குச் செல்ல வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவை மட்டுமல்ல; இன்னும் பல சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்பட்டு, மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, நிலுவையில் இருக்கின்றன. அவ்வாறு நிலுவையிலிருக்கின்ற அனைத்தையும் கோடிட்டுக் காட்டித்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருக்கிறீர்கள். அந்த வழக்கு இருக்கிறதல்லவா! அந்த வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை பொறுத்திருக்கலாமல்லவா! (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, நிலுவையிலிருப்பவற்றைச் சுட்டிக்காட்டித்தான். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களது ஆட்சிக் காலத்தில் சென்ற கோப்புகளும் தூங்கிக் கொண்டிருந்தன. அவற்றையும் எழுப்பி அழைத்து வந்திருக்கிறோம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)*

[*2023 நவம்பர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் நாம் தொடுத்திருக்கின்ற வழக்கு நமக்கு சாதகமாக அமைய வேண்டுமென்ற நோக்கத்தோடுதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், உச்ச நீதிமன்ற வழக்கு, அடுத்த விசாரணைக்கு வருவதற்கு முன்பாகவே, சட்டமன்றத்தையும் கூட்டி, இந்தச் சட்டமுன்வடிவுகளை நிறைவேற்றியிருக்கிறார் என்பதைத்தான் நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் சொன்னார்கள். அதையே நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலுவையிலிருந்த இந்த 10 மசோதாக்கள் குறித்து மட்டும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தீர்களா அல்லது சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டமுன்வடிவுகள், மேதகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு நிலுவையிலுள்ள ஒட்டுமொத்த மசோதாக்கள் குறித்தும் வழக்கு தொடர்ந்தீர்களா என்ற விவரம் தெரிவிக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோ அல்லது மாண்புமிகு அமைச்சர்களோ அவைக்குத் தெரிவித்தால் நன்றாக இருக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அவைமுன் மறு ஆய்வுக்காக வைக்கப்பட்டுள்ள 10 மசோதாக்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறார். இவற்றை மீண்டும் நிறைவேற்றி நாம் அனுப்புவோம். மேலும், ஏற்கெனவே நிலுவையில் வைத்திருக்கும் மசோதாக்களை அதேபோன்று வைத்திருந்தாரேயானால், மீண்டும் நீதிமன்ற வழக்கு வரும் என்று பயப்படுவார். அடுத்து அந்த மசோதாக்கள் இங்கு அனுப்பப்படும். நாம் மீண்டும் அவற்றை நிறைவேற்றி அனுப்பலாம்.*

2023 நவம்பர் 18]

பிற்பகல் 12–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வினா வேறு. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்கிற கருத்துகள் வேறுபட்டிருக்கின்றன. (குறுக்கீடு) இல்லை, எங்கள் ஆட்சியின்போது, பல துறைகள் தொடர்பான மசோதாக்கள், சட்டமுன்வடிவுகள் இந்த அவையிலே நிறைவேற்றப்பட்டு மேதகு ஆளுநருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பல மாத காலமாக நிலுவையில் இருக்கின்றன. நிலுவையில் இருக்கின்ற அனைத்து மசோதாக்களும் நிறைவேற்றப்பட வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டித்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தீர்களா என்ற கேள்வியைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, உறுதியாக, மாநில சுயாட்சிக் கொள்கையோடு நாங்கள் தொடருவோம். அதில் எந்த சந்தேகமும் வேண்டாம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருக்கு அதுகுறித்து எந்த அச்சமும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் கேட்கின்ற கேள்விகள், . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். கேட்பது, 12 மசோதாதானா, வேறு மசோதாக்களும் அவரிடம் நிலுவையில் இருக்கின்றதா என்று கேட்கிறார்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இந்த 12 மசோதாக்களுக்கு மட்டும்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தீர்களா அல்லது இந்தச் சட்டமன்றத்தில் பல சட்டமுன்வடிவுகள் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மேதகு ஆளுநருக்கு*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 நவம்பர் 18

அனுப்பி வைக்கப்பட்டு, நிலுவையில் இருக்கின்ற மசோதாக்களைச் சுட்டிக்காட்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தீர்களா என்ற விவரம் மக்களுக்குத் தெரிய வேண்டுமென்பதற்காகத்தான் இந்தக் கேள்வியை நான் கேட்கிறேன். பதில் கிடைக்க வேண்டுமென்று கருதுகிறேன். இல்லையென்றால், பதிலுரையில்கூடச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ். ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 12 மசோதாக்கள் தவிர, சமீபத்தில் நிறைவேற்றி அனுப்பப்பட்ட 5 மசோதாக்கள் ஆளுநரிடத்திலே நிலுவையிலே உள்ளன. அதுதவிர, முன் விடுதலை கோரி அனுப்பப்பட்ட அந்த 50 கோரிக்கை மனுக்களும் ஆளுநரிடத்திலே நிலுவையிலே உள்ளன. (குறுக்கீடுகள்) அதாவது remedy என்பது எல்லாவற்றிற்கும்தான். ஆளுநர் எல்லாவற்றிற்கும் எங்களுக்கு ஒப்புதல் தர வேண்டும்; வேகமாகத் தர வேண்டும்; விரைந்து தர வேண்டுமென்று ஆளுநரை வற்புறுத்தத்தான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றிருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் குறிப்பிடுகின்றேன். ஆகவே, நீங்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துவிட்டீர்கள். இன்றைக்குச் சட்டமன்றப் பேரவையிலே கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட அந்த மசோதாக்களுக்கு மேதகு கவர்னர் அவர்கள் குறித்த நேரத்தில் அனுமதி வழங்காத காரணத்தினால், அதைச் சுட்டிக்காட்டித்தான் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, உச்ச நீதிமன்றத்தில் அந்த வழக்கு நடைபெற்று முடிந்து, அதற்கு ஒரு நல்ல தீர்ப்பாக வருகின்றபோது இதுவும் அதனுள்ளே அடங்குமே. இதற்கு இந்தச் சிறப்புக் கூட்டமே கூட்டியிருக்க வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காது என்பதைத்தான் சுட்டிக்காட்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. நீங்கள் சொல்வது correct.

2023 நவம்பர் 18]

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *தீர்ப்பு என்பது எல்லாவற்றிற்கும் ஒன்றுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆனால், இந்த 12 மசோதாக்களையும்தான் அவர்கள் திரும்ப அனுப்பியிருக்கிறார்கள். அதற்குத்தான் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டியிருக்கிறோம். அவர்கள் என்ன நினைக்கிறார்களென்றால், திங்கள்கிழமையன்று நீதிமன்றத்திற்கு வழக்கு வந்ததென்றால், என்னிடம் ஒன்றும் நிலுவையில் இல்லையென்று சொல்லலாம். அரசு இன்னும் வேகமாகச் செயல்பட்டு, உடனே தீர்மானத்தை நிறைவேற்றி அவர்களிடமே கொண்டு கொடுத்துவிடுவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட கேள்விக்கு ஒரு விளக்கத்தைத் தர நான் விரும்புகிறேன். மீதமுள்ள சட்டமுன்வடிவுகள் தொடர்பான கோப்புகள் குறித்து ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். மீதமிருக்கக்கூடிய சட்டமுன்வடிவுகள் தொடர்பான கோப்புகள் குறித்து வருகிற வழக்கு விசாரணையில் எடுத்துச்சொல்லி, ஆளுநர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்க நிச்சயம் இந்த அரசு ஆவன செய்யும் என்பதை உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் 1994, ஜனவரி மாதமே கிட்டத்தட்ட 29 ஆண்டுகளுக்கு முன்பாகவே நீங்கள் கொண்டு வந்த சட்டத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது உங்களுடைய நிலைப்பாட்டை அப்போதிருந்த அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அது இந்த அவையிலே பதிவாகியிருக்கிறது. அதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். அப்போது அமைச்சராக இருந்த மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் சொன்ன*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 நவம்பர் 18

கருத்து; 'கடந்த கால அரசு எல்லா பல்கலைக்கழகங்களிலும் முதலமைச்சர், வேந்தராக அமைய வேண்டுமென்பதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அந்த நோக்கம் ஜனநாயகத்திலே ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு நல்ல நோக்கமல்ல. முதலமைச்சர் அவர்களுக்கு எத்தனையோ வகைகளில் அவரவர் தகுதிக்கேற்ப மதிப்பு கிடைக்கும். ஆனால், அப்படி ஒரு சட்டம் வருவதன் மூலமாக சுய உரிமையோடு கல்வி வளர வேண்டுமென்ற பொதுக் கொள்கைக்கு அது நேர்மாறான ஒரு கொள்கையாக நாட்டப்பட்டது. அரசாங்கத்தினுடைய கொள்கையோ, திறமையோ, நோக்கமோ வலியுறுத்தப்படுவதற்கு ஒரு வாயிலாக இது அமைகிற காரணத்தினால் பல்கலைக்கழகத்தினுடைய தனி உரிமை கைவிடப்படுவதாக ஓர் எண்ணம் ஏற்பட அது இடம் தருகிறது. ஆகவே, இந்த அரசு அப்படி பல்கலைக்கழகங்கள் தனித்து சுயமாக இயங்குகின்ற ஒரு வாய்ப்பைக் கெடுக்கக்கூடாது என்பதற்காகவே அந்தச் சட்டத்தைப் பின்வாங்குவதாக, கைவிடுவதாக முடிவெடுத்து அறிவிக்கப்படுகிறது.' இதுதான் அன்றையதினம் அறிவிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏன் அப்படி பேசினோம் என்றால் (குறுக்கீடு) நான் அப்போது (குறுக்கீடு), சென்னை பல்கலைக்கழகத்தில் syndicate member ஆக 8 ஆண்டுக்காலம் இருந்தேன். எனக்குத் தெரியும். அப்பொழுது, 3 பேர் கொண்ட ஒரு panel அமைப்பார்கள். அந்த 3 நபர்களில் யாரை நியமிக்கலாம் என்று முதலமைச்சருடன் கலந்துபேசி, யாரைக் குறிப்பிடுகிறார்களோ அவரை கவர்னர் நியமிப்பார். இதுதான் அப்போது இருந்த முறை. ஆகையினால்தான் அப்போது தனியே தேவையில்லை என்று சொன்னார்கள். ஆனால் இப்போது எப்படி இருக்கிறது என்று கேட்டீர்களென்றால், syndicate, senate இரண்டும் சேர்ந்து தீர்மானம் போட்டாலும், கவர்னர் அவர்கள், நான் திரு. சங்கரய்யாவிற்கு Doctorate கொடுப்பதற்கு ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று சொல்வது கடைந்தெடுத்த சர்வாதிகாரம். (மேசையைத் தட்டும் ஒலி) நான் இன்றைக்கு சபையில் ஒன்றைச் சொல்கிறேன். இப்போது திரு. பண்ருட்டி இராமச்சந்திரன்

2023 நவம்பர் 18] [திரு. துரைமுருகன்]

அவர்கள் உயிருடன் இருக்கிறார். மாண்புமிகு அண்ணன் எம்.ஜி.ஆர். அவர்களுக்கு Doctorate தர வேண்டும் என்று சொன்னார்கள். அதற்கு நான் எதிர்ப்பு தெரிவிப்பேன் என்று எண்ணி, அந்த Vice-chancellor பயந்து போய்விட்டார். அதற்காக, கூட்டத்தை உடனே துவங்க வேண்டுமென்று காலையிலேயே கூட்டத்தைக் கூட்டினார்கள். யாராவது ஒருவர் மறுத்தால்கூட ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்று அவர் சொல்லிவிட்டார். அதனால், அண்ணன் அவர்கள் வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். நான், திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் மற்றும் திரு. காமேஸ்வரன் ஆகிய அனைவரும் சென்று கலைஞர் அவர்களைப் பார்த்தோம். கலைஞர் அவர்கள் சொன்னார், "முதலாவதாக, Doctorate பெறுவதற்குரிய அனைத்து தகுதிகளும் அவருக்கு உண்டு". (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால், நீங்கள் எதிர்க்கக் கூடாது என்று சொன்னார். இரண்டாவதாக, "உனக்கும் அவருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு, உனக்கு பலவகைகளில் அவர் உதவி செய்துள்ளார், ஆகையால் நீயே சென்று அத்தீர்மானத்தை முன்மொழிய வேண்டும்" என்று சொன்னார். நானே சென்று தீர்மானத்தை முன்மொழிந்தேன், உடனே அவர் வந்தார். அப்போதெல்லாம் phone கிடையாது. திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் என்னை police bike-ல் அழைத்து வந்தார். வந்து, என்னிடம், தலைவர் என்ன சொன்னார் என்று கேட்டார். "உங்களுக்கு உண்டு" என்று சொன்னேன். இன்று சொல்கிறேன், அப்படியே அவருக்கு கண் கலங்கிவிட்டது. ஆகவே, syndicate சொன்னால் அதை ஏற்றுக்கொள்ளும். ஆனால், இந்த கவர்னர் syndicate சொன்னாலும் ஏற்றுக்கொள்ளவில்லை, indicate செய்தாலும் ஏற்றுக்கொள்ளவில்லை. எதையும் ஏற்றுக்கொள்ளாத கவர்னராக இருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் சாதுர்யமாகப் பதில் சொல்லியிருக்கிறார். (சிரிப்பு) ஏற்கெனவே, இது நடைமுறையில் இருந்தது. (குறுக்கீடு) ஆகவே, வேண்டாம் என்று சொல்லித்தான் இது கொண்டுவரப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[2023 நவம்பர் 18

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொல்வதுபோல் அவை முன்னவர் சாதுர்யமாகச் சொல்லவில்லை, உண்மையைச் சொல்லியிருக்கிறார், அவ்வளவுதான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களும் பழைய வரலாறு சொல்லியிருக்கிறீர்கள், அவர்களும் பதில் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதும் senate இருந்தது, syndicate இருந்தது. ஆகவே, இந்த நிலையெல்லாம் மாற வேண்டும் என்பதற்காகத்தான், அன்றைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேந்தர் குறித்து சட்டமுன்வடிவைக் கொண்டு வந்தார்கள். அப்பொழுது பேசப்பட்ட கருத்தைக் கைவிட்டுவிட்டீர்கள். 1996-ல் ஆட்சி மாற்றம் வந்தது. அப்பொழுது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால், திராவிட முன்னேற்றக் கழக அரசு இதனைக் கைவிட்டுவிட்டதாக, அன்றைய அமைச்சரே தெரிவித்துள்ளார்கள். இது அவைக் குறிப்பில் உள்ளது. யாரும் மாற்ற முடியாது. அதேபோல. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொன்னது correct. அப்பொழுது பிரதமர் வேந்தராக இல்லை, இப்பொழுது உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு)

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாட்டுப் பிரச்சினையைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கிறேன். தமிழ்நாட்டில் அன்றையதினமே, வேந்தர் குறித்து முடிவெடுக்கப்பட்டிருந்தால், இந்த நிலைமை இப்போது ஏற்பட்டிருக்காது. (குறுக்கீடு) இந்த விவாதமே இப்போது நடைபெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னொன்று. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே இதற்கு ஒரு தெளிவான பதில் சொல்லியிருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்கிறேன்.

2023 நவம்பர் 18] [திரு. மு.க. ஸ்டாலின்]

அப்பொழுதெல்லாம் துணை வேந்தர்களை நியமிக்கிற நேரத்திலே, அரசினுடைய பரிசீலனைக்குக் கொண்டுவந்து, கலந்து பேசி அதற்குப் பிறகுதான் முடிவெடுத்து அறிவிப்பார்கள். ஆனால், அந்த நடைமுறை தற்போது இல்லை. அது மீறப்படுகிறது. அதனால்தான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறதே தவிர, வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பொழுதும் கிடையாது. அப்பொழுது அது நடைமுறையில் இல்லாத காரணத்தினால்தான்—துணை வேந்தரை நியமிக்கக்கூடிய அதிகாரம் வேந்தருக்குத்தான் இருந்தது. அதனால்தான், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வேந்தர் குறித்து சட்டமுன்வடிவு கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டுமென்று—அவ்வாறே சட்டமுன்வடிவும் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. ஆனால், அப்போது எதிர்க்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் அதற்கு ஆதரவு தெரிவிக்கவில்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை வேந்தரை நியமிக்கும் அதிகாரம் வேந்தருக்குத்தான் இருந்தது என்கிறீர்களே! (குறுக்கீடுகள்) நான் மூன்று* Vice-chancellor-*களைத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்.* Syndicate-*ல் இருந்திருக்கிறேன்,* Ruling party *ஆகவும் இருந்திருக்கிறேன். அப்போது, அது எப்படி நிறைவேற்றப்பட்டு வரும் என்று தெரியும். திரு. சுந்தரேசனை கொண்டுவந்தது அப்படித்தான், அதன்பிறகு திரு. சுந்தரவடிவேலை கொண்டுவந்ததும் அப்படித்தான். ஆகையால், அந்த* subject *பற்றி எனக்கு கொஞ்சம் தெளிவாகத் தெரியும் என்பதால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இதனைச் சொல்கிறார்கள்.*

பிற்பகல் 12-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆரோக்கியமான விவாதம் இருக்கிறது. இப்போது அடுத்த பத்து மசோதாவிற்கு வந்து விடுவோம்.*

[*2023 நவம்பர் 18*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்போதிலிருந்து இப்போதுவரை ஒரே சட்டமாகத்தான் இருக்கிறது. இன்னும் மாறவில்லை. அதனால்தான் அன்றைக்கே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு வேந்தரை குறித்து சட்டமுன்வடிவு கொண்டுவந்து நிறைவேற்றியது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு, அன்றைய முதலமைச்சராக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு புத்தகத்தை வெளியிட்டார். அதிலே அவர் குறிப்பிட்டிருக்கிறார். 'நெஞ்சுக்கு நீதி' என்ற புத்தகத்திலே பாகம் 4-ல் பக்கம் 511-ல் குறிப்பிட்டிருக்கிறார். 1994 ஆம் ஆண்டு ஜனவரி 5 ஆம் தேதியன்று தமிழ்நாட்டில் அப்போதிருந்த 13 பல்கலைக்கழகங்களினுடைய வேந்தர் பொறுப்பு, அதுவரை ஆளுநரிடம் இருந்ததை மாற்றி, முதல்வர்தான் அந்த பல்கலைக்கழகத்தினுடைய வேந்தர் என்று சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினார். சட்டமன்றப் பேரவையில் சட்டம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட போதிலும் அதற்கு ஆளுநருடைய ஒப்புதல் கிடைக்குமா என்ற கேள்விக்குறி அப்பொழுதே பெரிதாக எழுந்தது. ஏனென்றால், ஆந்திராவில் திரு. என்.டி. ராமராவ் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது, இதுபோன்ற ஒரு சட்டத்தை அங்கே நிறைவேற்றினார். ஆனால், அதற்குப் பிறகு அந்த மாநிலத்தின் முதல்வராகப் பொறுப்பேற்ற திரு. மர்ரி சென்னா ரெட்டி அவர்கள் அந்தச் சட்டத்தை இரத்து செய்துவிட்டு ஆளுநரே வேந்தராக நீடிப்பதற்கு வழி செய்தார். எனவே, அவர் தமிழகத்தின் ஆளுநராக இருந்து இந்தச் சட்டத்திற்கு ஒப்புதல் தருவாரா என்ற எண்ணம் அனைவருக்கும் ஏற்பட்டது. இன்னொரு கருத்தையும் சொல்கிறார். மாநிலத்தில், குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப்பட்டால் அந்தக் காலத்தில் முதல்வர் இருக்கமாட்டாரே! அப்போது யார் பல்கலைக்கழகத் துணை வேந்தராக இருப்பார் என்ற கேள்வியும் (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் வட்டாரத்தில் கேட்கப்பட்டது. தமிழக சட்டப் பேரவையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அந்தச் சட்டம் தேவையற்றது என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கட்சித் தலைவருடைய கருத்து. ஆகவே, எங்களைப் பொறுத்தவரைக்கும், நாங்கள் யாருக்கும் வக்காலத்து வாங்கிப் பேச வேண்டிய அவசியம் இல்லை. ஏற்கெனவே, நாங்கள் கொண்டு வந்தோம். அப்போது நீங்கள் எங்களை ஆதரிக்கவில்லை. ஆகவே, ஆளுகின்ற

2023 நவம்பர் 18] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

கட்சியாக இருக்கின்றபொழுது திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு நிலைப்பாட்டுடனும், எதிர்க்கட்சியாக இருந்தபோது ஒரு நிலைப்பாட்டுடனும் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இரட்டை நிலைப்பாடு எதற்குத் தேவை? ஆகவே, நல்லதொரு திட்டத்தைக் கொண்டு வருகின்றபோது ஆதரிக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து, அதோடு (குறுக்கீடு) எங்களுடைய நிலைப்பாட்டை தெளிவாகச் சொல்லிவிடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லிவிட்டார்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *1994 ஆம் ஆண்டிலே நாங்கள் கொண்டுவந்துவிட்டோம்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *இதற்குமுன் ஒரு நிலைப்பாடு, இப்போது ஒரு நிலைப்பாடு உங்களுக்கு இருந்ததுதானே, பட்டாரே, திரு. மர்ரி சென்னா ரெட்டி, அடேங்கப்பா! (சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய திறமையை நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால், அதை மறைத்து ஏதேதோ வார்த்தை ஜாலங்களைப் போட்டு திசை திருப்புவது அவை முன்னவருக்கு கைவந்த கலை என்பதை நாடே அறியும். (சிரிப்பு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டமன்றத் தொகுதியில் சிப்காட் அமைக்கும். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இதை முதலில் முடித்துவிடுங்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *இதிலேயேதான் வருகிறது. சிப்காட் அமைப்பதற்காக ஏற்கெனவே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு ஆட்சியில் இருந்தபொழுது கிட்டத்தட்ட அதில். . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. அதில். . .*

[*2023 நவம்பர் 18*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மற்ற தலைவர்கள் எல்லாம் பேசினார்கள். மற்ற செய்திகள் எல்லாம் சொன்னார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் அனுமதித்தீர்களே? நீங்கள் அவைக் குறிப்பில் எடுத்துப் பார்த்தீர்களென்றால், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் நாட்டில் நடைபெற்ற சம்பவங்கள் குறித்து அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். நானும் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தவறாகக் கூறவில்லை. நான் சொல்கிறேன். இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றிய பின்னர் கூறச் சொல்கிறேன். அது முடிந்துவிட்டது.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அவர்களையெல்லாம் அனுமதித்தீர்கள், எங்களுக்கு ஏன் அனுமதி கொடுக்காமல் இருக்கிறீர்கள்? (குறுக்கீடுகள்) மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய கருத்துகளை முழுவதும் தெரிவித்தார்கள். அந்தக் கருத்துகளின் அடிப்படையில் எங்களுடைய கருத்துகளையும் சொல்கிறோம். அந்தக் கருத்துகளுக்கும் சேர்த்து பதில் சொல்லுங்கள்.

பிற்பகல் 12–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் பதில் சொல்கிறேன். ஒரு நிமிடம் இருங்கள் சொல்கிறேன். இன்று விவாதத்தில் திரு. ஜி.கே. மணி அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், திரு. ந. சங்கரய்யா அவர்களுடைய இறப்பினைத் தொடர்ந்து, அவருக்கு மதுரை பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் வழங்கப்படவில்லை என்கிற விஷயத்தைத்தான் சொன்னார்கள். அவர் இதுகுறித்து பேசியதற்கு காரணம், அது ஆளுநர் சம்பந்தப்பட்ட விஷயம். ஆளுநர் அதனை வழங்கவில்லை என்று கூறினார். திரு. ஜி.கே. மணி அவர்கள் இதற்கு related ஆகத்தான் பேசினார்கள். வேறு கதை பேசவில்லை. (குறுக்கீடுகள்) நான் சொல்லி முடித்துவிடுகிறேன். நீங்கள் சொல்கிற செய்யாறு விஷயம், நீங்களும் பார்த்திருப்பீர்கள், எங்களுக்கும் தெரியும். ஒரு சம்பவம் நடக்கிறது. அது முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வருகிறது. பின்னர் இரத்தாகிவிட்டது. அது pending இல்லை. நீங்கள் அதில் கோரிக்கை வைத்து அதில் ஏதும் pending இல்லை. நீங்கள் அழகாகச் சொன்னீர்கள். அதனால், அதை மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இது வேண்டாம். (குறுக்கீடு)

2023 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

தயவுசெய்து (குறுக்கீடு) இல்லை, கொஞ்சம் please (குறுக்கீடு) அதாவது, அரசினர் தனித் தீர்மானம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ளது. அந்தத் தீர்மானத்தை (குறுக்கீடு) ஒரு நிமிடம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், ஒரு நிமிடம் இருங்கள், நான் சொல்கிறேன். (குறுக்கீடு) தமிழ்நாட்டில் இந்த ஒரு சம்பவம் மட்டும் நடைபெறவில்லை. சட்டமன்றக் கூட்டத் தொடர் கடந்த மாதம் 3 நாட்கள், 11 ஆம் தேதியுடன் நடைபெற்று முடிந்த பிறகு, தமிழ்நாட்டில் இதுபோன்று பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. எல்லாவற்றையும் குறிப்பிட்டு நாம் பேசலாம். அவற்றை நாம் வரும் ஜனவரி மாதம் நடைபெறும் கூட்டத்தில் பேசலாம். இப்போது ஒரு தனித் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்தவர்கள். அந்த மாண்புடன்தான் அவர்கள் முழுவதும் பேசிக் கொண்டு வருகிறார்கள். இதற்கிடையில் அந்தப் பிரச்சினையைத் தொட வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வியாகும். அதனால், தயவுசெய்து அது வேண்டாம். இதைப் பற்றி பேசி முடியுங்கள். அதற்குப் பிறகு நான் சொல்கிறேன். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது என்னவெனில், நீங்கள் ஆட்சியிலே இருந்தபோது சூரப்பா அவர்கள்மீது விசாரணை அமைத்தீர்கள். அப்போது நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் நாங்களும் உங்களுடைய கோரிக்கையை ஏற்று ஆதரவளித்து, சூரப்பாமீது அரசு வழக்கு தொடர்ந்ததற்கு எதிராக நாங்களும் உறுதுணையாக இருந்தோம் என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது. சூரப்பாவினுடைய வழக்கு நீங்கள் போட்டதைப் போலவே இன்றும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, எந்த நல்ல நிகழ்வுகளாகயிருந்தாலும், காலத்திற்கேற்ப—அப்போதிருந்த ஆளுநர்கள் எப்படி செயல்பட்டார்கள்; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் எப்படி செயல்படுகிறார் என்பது உங்களுக்குத் தெரியாதது அல்ல; இப்போதிருக்கிற ஆளுநர் அவர்கள் மிக அதிகமாக பல்கலைக்கழகங்களினுடைய விவகாரங்களிலே தலையிட்டுக்கொண்டிருக்கிற காரணத்தினாலேதான், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதற்காக ஒரு தீர்மானத்தைக்*

[முனைவர் க. பொன்முடி] [2023 நவம்பர் 18

கொண்டுவர வேண்டும் என்று இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்சி வேறுபாடுகள் இல்லாமல் இதை அனைவரும் நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால், அரசமைப்புச் சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது; தமிழ்நாடு அரசுக்கு இந்த உரிமைகளெல்லாம் இருக்கின்றன. குறிப்பாக, இந்திய அரசமைப்புச் சட்டம், பிரிவு 246-ன்கீழ், ஏழாவது அட்டவணை, பட்டியல் II-மாநிலப் பட்டியல், வரிசை 32-ன்படி, மாநில அரசு பல்கலைக்கழகத்தை நிறுவுதல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் கலைத்தல் ஆகியவை மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. அதைத்தான் நிறுவ வேண்டும் என்ற எண்ணத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுவும் இன்றைய ஆளுநர் அவர்களுடைய செயல்பாடுகளையெல்லாம் இங்கே நண்பர்களெல்லாம் சுட்டிக்காட்டினார்கள்.

திரு. சங்கரய்யா அவர்களுக்கு முனைவர் பட்டம் கொடுக்க வேண்டும் என்று சென்ட் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், ஆளுநர் அவர்கள் மறுத்ததிலிருந்து அவர் என்னென்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். பல்கலைக்கழகங்களில் அரசியல் செய்து கொண்டிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாகியிருக்கிறது; அதுபோன்று இருக்கக் கூடாது என்ற காரணத்தினால்தான் இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. நம்மை அரசியல் செய்கிறோம் என்று சொல்கிறார்கள்; அதெல்லாம் கிடையாது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் இங்கே சொன்னதைப்போல, அப்போதிருந்து சென்னை பல்கலைக்கழகத்தில் 3 பேர் இருக்கிற குழுதான் துணை வேந்தரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு அனுப்பும். அதில் ஒருவரைத்தான் நியமிப்பார்கள் என்பதெல்லாம் இருந்தது. நீங்கள் சொன்னீர்கள், இந்த ஆளுநர் அவர்கள், அந்த 3 பேர், அவர்கள் நியமிப்பது மட்டுமல்லாமல், UGC-லிருந்து வருகிற ஒருவரையும் நியமிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அதையெல்லாம்தான் நாம் எதிர்க்கிறோம். UGC என்பது ஒரு advisory body; அவ்வளவுதானே தவிர, அவர்கள் சொல்வதைக் கேட்க வேண்டும் என்பது அல்ல; பல்கலைக்கழகங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதை வலியுறுத்தி சொல்லியிருக்கிறார்கள். நீங்கள் இருந்தபோதிலும் சரி,

2023 நவம்பர் 18] [முனைவர் க. பொன்முடி]

இப்போதும் சரி, உண்மையிலேயே இது தமிழகத்தினுடைய உயர் கல்வித் துறையின் வளர்ச்சிக்கு ஏதுவாக இருக்கும் என்பதைத்தான் நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் சுட்டிக்காட்டிப் பேசினேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், நீங்கள் நல்ல விஷயங்கள்தான் பேசினீர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, அதிகமானோர் உயர் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக ஏராளமான கல்லூரிகளைத் திறந்தார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அதிகளவில் திறக்கப்பட்டன; பொறியியல் கல்லூரிகள் அதிகளவில் திறக்கப்பட்டன; வேளாண் கல்லூரிகள் அதிகளவில் திறக்கப்பட்டன; பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் ஐ.டி.ஐ. போன்றவை அதிகளவில் திறக்கப்பட்டன; சட்டக் கல்லூரிகள் அதிகமாகத் திறக்கப்பட்டன; கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் திறக்கப்பட்டன; மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது 7 மருத்துவக் கல்லூரிகள், அதற்குப் பிறகு மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் ஒரே ஆண்டில் 11 மருத்துவக் கல்லூரிகள் என மொத்தம் 18 மருத்துவக் கல்லூரிகள் கொடுக்கப்பட்டன. ஆக, உயர் கல்வியை அதிகமானோர் கற்க வேண்டும் என்பதற்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது, மாண்புமிகு பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்த காலத்திலும் சரி, மாண்புமிகு அம்மா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலும் சரி, உயர் கல்வி பயில்வோரின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகமாக இருக்க வேண்டும் என்கிற அடிப்படையில் இவ்வளவு கல்லூரிகள்*

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [*2023 நவம்பர் 18 திறக்கப்பட்டதையடுத்து, அதிக மாணவர்கள் உயர் கல்வி பயின்றார்கள்.*

பிற்பகல் 12–45

2011 ஆம் ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பு வகித்தபோது, 100–க்கு 34 பேர்தான் உயர் கல்வி கற்றார்கள். ஆகவே, கல்வியில் புரட்சி, மறுமலர்ச்சி, பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதியொதுக்கீடு, உயர் கல்வித் துறைக்கு அதிக நிதியொதுக்கீடு போன்ற காரணங்களால், உயர் கல்வி படிப்போருடைய எண்ணிக்கை அதிகரித்தது. கல்லூரிகள் திறக்கப்பட்டதன் விளைவாக இது சாத்தியமானது. ஆக, 2030 ஆம் ஆண்டு அடைய வேண்டிய இலக்கை, 2019–2020 ஆம் ஆண்டிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அந்த இலக்கை எட்டியது. (மேசையைத் தட்டும் ஒலி) சுமார் 100–க்கு 52 பேர் உயர் கல்வி படிக்கின்ற அளவிற்கு எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில் அம்மாவுக்குப் புகழ் சேர்த்த (குறுக்கீடு) நான் இதை பேசி முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களும் நல்ல கருத்தைத்தான் சொல்ல வருகிறார்கள். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் சொன்னதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதே நேரத்தில் உயர் கல்வி என்று சொன்னால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரை கலைஞர் ஆட்சியில்தான் அதிகமாக வளர்ந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் இங்கே சட்டப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. விவசாயப் பல்கலைக்கழகம் தனியாக உருவாக்கப்பட்டது. ஆகவே, பல்வேறு பல்கலைக்கழகங்களை உருவாக்கியவர் கலைஞர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி கொடுக்க வேண்டுமென்று சொன்னவரே தலைவர் கலைஞர்தான். அந்த அடிப்படையில் அவர் இருக்கின்றபோதே பல்வேறு மாவட்டங்களுக்கு மருத்துவக் கல்லூரி வழங்கப்பட்டது. அதற்குப் பிறகுதான் இன்றைக்கு மத்திய அரசுகூட இங்கே மருத்துவக் கல்லூரி கொண்டுவர*

2023 நவம்பர் 18] [முனைவர் க. பொன்முடி]

வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, கலைஞருடைய ஆட்சியில் உயர் கல்வி என்பது வளர்ந்தது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுடைய காலத்தில் ஆரம்பக் கல்வி வளர்ந்தது; தலைவர் கலைஞருடைய காலத்தில் உயர் கல்வி வளர்ந்தது. அதனால்தான் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்னுடைய இரண்டு கண்களிலே ஒன்று கல்வி என்று சொல்லி, இன்றும் கல்வி வளர்ச்சிக்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. அவர்களும் செய்தார்கள்; நான் இல்லையென்று சொல்லவில்லை. அதேநேரத்தில் கலைஞர் அவர்கள் செய்ததையும் நீங்கள் நினைவில் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதனை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

திரு. எடப்பாடி K. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2011 ஆம் ஆண்டு உங்களுடைய ஆட்சி முடிகின்ற தருவாயில் அம்மா முதலமைச்சராகப் பொறுப்பேற்றபோது 100-க்கு 34 பேர் உயர் கல்வி படித்துக்கொண்டிருந்தார்கள். அதற்குப் பிறகு 10 ஆண்டுக் காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது, நிறைய கல்லூரிகள் உருவாக்கப்பட்டன. நான் சொன்ன கல்லூரிகளெல்லாம் உருவாக்கப்பட்டன. அதனால்தான் பிற்படுத்தப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) அதிகளவில் குறைந்த கட்டணத்தில் அரசால் திறக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனங்களில் படித்தார்கள். (குறுக்கீடு) அதிகமான எண்ணிக்கையில் உயர் கல்வி படித்தார்கள் என்றுதான் குறிப்பிட்டேன். வேறொன்றும் சொல்லவில்லை. அதோடு பல்கலைக்கழகங்களெல்லாம் துவங்கப்பட்டன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவருடைய மாவட்டத்தில் நாங்கள் தொடங்கிய பல்கலைக்கழகத்தையே அவர்கள் மூடினார்கள். அதுதான் அவருடைய சாதனை. இன்னும் என்ன சொல்வது? புதிய பல்கலைக்கழகம் திறக்கப்பட்டது என்று சொன்னீர்கள். ஆனால், புதிய பல்கலைக்கழகம் திறக்கப்பட்டபோது, (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள். ஒரே ஒரு நிமிடம். நான் முதலில் பேசிவிடுகிறேன். அதன்பிறகு நீங்கள் பேசுங்கள்.

[*2023 நவம்பர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு ஒரே ஒரு சந்தேகம். இன்றைக்கு அவையினுடைய நிகழ்ச்சி ஒரு தனி தீர்மானத்தைப் பற்றியது. அதைப் பற்றித்தான் பேச வேண்டும். ஆனால், தற்போது விவாதம் திசை மாறி எங்கேயோ சென்று கொண்டிருக்கிறது. இந்தத் தனி தீர்மானத்தின்மீது பேசுவதற்காகத்தான் நாம் இங்கே வந்திருக்கிறோம். பதில் சொல்ல வந்திருக்கிறோம். (குறுக்கீடுகள்) அப்படியொன்றுமில்லை. பிறகு சொல்லுங்கள் என்பதெல்லாம் கிடையாது. இப்போது சொல்வதுதான்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய மாவட்டத்தில் தொடங்கப்பட்ட பல்கலைக்கழகத்தைப் பற்றிச் சொன்னார். அதற்கு ஏதாவது நிதியை ஒதுக்கியிருந்தார்களா என்பதை மாண்புமிகு முன்னாள் முதல்வர் அவர்களைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நிதியும் ஒதுக்கப்படவில்லை; இடமும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. பெயர் வைப்பதற்காக மட்டுமே ஒன்றை அறிவித்துவிட்டு சென்றார்களேதவிர, உண்மையிலேயே அவர்கள் பல்கலைக்கழகத்தை உருவாக்கவில்லை. அந்த அடிப்படையில்தான் அவர்கள் காலத்தில் அரசுடைமையாக்கப்பட்ட அண்ணாமலை பல்கலைக்கழகத்தோடு அந்தக் கல்லூரிகள் இணைக்கப்பட்டு, இன்றும் அவை சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தற்போது மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பியனுப்பிய இந்த மசோதா குறித்ததை முடித்துக்கொள்ளலாம். (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. எடப்பாடி K. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய காலத்தில் புதிய*

2023 நவம்பர் 18] [திரு. எடப்பாடி K. பழனிசாமி]

பல்கலைக்கழகங்கள் நிறைய திறக்கப்பட்டன என்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்தான் சொன்னார்கள். அப்படியிருக்கும்போது, ஏன் நாங்கள் திறந்ததை மூடினீர்கள்? ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டது. ஆரம்பக் கட்ட பணிகள் முடிக்கப்பட்டன; துணை வேந்தர் நியமிக்கப்பட்டார். ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பிறகு, எதற்காக நீங்கள் அதனை cancel *செய்தீர்கள். மேலும், அது தங்களுடைய மாவட்டம்; பின்தங்கிய மாவட்டம்; ஏழை மக்கள் நிறைந்த மாவட்டம்; தொழிலாளிகள் நிறைந்த மாவட்டம். அந்தப் பகுதியில் கல்வி வளர்ச்சி அடைய வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் இந்தப் பல்கலைக்கழகத்தைத் திறந்தோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையால், நீங்கள் நிறைய பல்கலைக்கழகங்களைத் திறந்தீர்கள் என்று சொல்கிறீர்களே, அதனையும் தொடர்ந்து நடத்தியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா பெயரில் இருக்கின்ற பல்கலைக்கழகத்தை மூட வேண்டுமென்பதற்காகத்தான் இங்கே சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.*

ஆகவே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2012 ஆம் ஆண்டு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் என்று ஒரு பல்கலைக்கழகத்தைத் துவக்கினார்கள். அந்தப் பல்கலைக்கழகத்திற்கு இவ்வளவு சிறப்புத் திட்டங்களை நிறைவேற்றிய முதலமைச்சராக இருந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற விதமாக அவருடைய பெயரை தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு நாங்கள் சூட்டினோம். புரட்சித் தலைவி அம்மாவினுடைய திருநாமத்தின் பெயரை அந்தப் பல்கலைக்கழகத்திற்கு நாங்கள் அறிவித்தோம். ஆனால், உங்களுடைய அரசு, இப்போது நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டமுன்வடிவில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு, அம்மாவினுடைய பெயர் வைக்கப்பட்டதை மாற்றி, மீண்டும் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம் என்று நீங்கள் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். வேண்டுமென்றே திட்டமிட்டு, எங்களால் கொண்டுவரப்பட்டு, அறிவிக்கப்பட்டு, பெயர் சூட்டப்பட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்

[திரு. எடப்பாடி K. பழனிசாமி] [2023 நவம்பர் 18 தலைவி அம்மாவினுடைய பெயரை நீக்கிய காரணத்தினால், இதனைக் கண்டித்து, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

(திரு. ஓ. பன்னீர்செல்வம், திரு. பால் மனோஜ் பாண்டியன், திரு. ஆர். வைத்திலிங்கம், திரு. பி. அய்யப்பன் ஆகியோரை தவிர)

பிற்பகல் 12–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: தலைவர் கலைஞர் பெயரையே மாற்றி வைத்தார்கள் அவர்கள். கலைஞர் கல்லூரி என்று திருவாரூர் மாவட்டத்தில் இருந்த கல்லூரியின் பெயரையே மாற்றியவர்கள் இவர்கள். இவர்கள் இப்படிப் பேசுவதற்கு எந்தவிதமான தகுதியும் இல்லை. திருவாரூரில் கலைஞர் கொண்டுவந்த கல்லூரிக்கு, கலைஞர் அரசு கலைக் கல்லூரி என்று இருந்த பெயரை மாற்றியவர்கள் இவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த தனித் தீர்மானத்திலே, எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும், பேசுகின்ற எல்லோரும் ஆதரித்து பேசினார்கள். பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த நண்பர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் வெளிநடப்புச் செய்வதாகச் சொன்னார்கள். அதன் தொடர்ச்சியாக, மற்ற தலைவர்களும் பேசி நிறைவு செய்தார்கள். ஏற்கெனவே, எதிர்க்கட்சித் தலைவர் பேசிக்கொண்டிருக்கின்றபோது, இதை நாங்கள் ஆதரிக்கின்றோம் என்றுதான் 2, 3 முறை, அவர்கள் இதை ஆதரித்தே பேசினார்கள். நிறைவாக அம்மையார் ஜெயலலிதா பெயர் மீன்வளத் துறை கல்லூரியிலே இடம்பெறவில்லை என்று சொன்னார்கள். அதற்கு தனித் தீர்மானம் ஏற்கெனவே கொண்டு வந்து, அதிலே அவர்களுடைய கருத்துகளையெல்லாம் பேசிவிட்டார்கள். இப்போது அந்த 10 மசோதாக்கள் ஆளுநர் அவர்களால் திருப்பி அனுப்பப்பட்டதை நாம் இதே அவையில் வைத்து மீண்டும் நம்முடைய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு அனுப்புகின்றோம். இதில் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. எதற்காக மாண்புமிகு எதிர்க்கட்சித்

2023 நவம்பர் 18] [பேரவைத் தலைவர்]

தலைவர் அந்த நிலைப்பாட்டை எடுத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அதுவும், அம்மையார் ஜெயலலிதா பெயர் கொண்ட பல்கலைக்கழகத்தினுடைய பெயர் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நிச்சயமாக அந்தப் பெயர் மாற்றப்படவில்லை. இன்னும் ஆளுநர் அவர்கள் அனுமதி தரவில்லை. இன்னும் நிலுவையில் இருக்கின்ற 10 மசோதாக்களில் இதுவும் ஒன்றாகத்தான் இருக்கின்றது. இதை இன்றைய ஆட்சியில் இருக்கின்றவர்கள், (குறுக்கீடு) ஒரு நிமிடம் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அம்மையார் ஜெயலலிதா பெயரை மாற்றிவிட்டார்கள் என்று ஓர் உண்மைக்கு மாறான செய்தியை இங்கு சொல்லிவிட்டு, அவர்கள் வெளிநடப்பு செய்திருக்கிறார்கள். வெளிநடப்பு செய்ததன் நோக்கம், அந்த அம்மையாருடைய பெயரை எடுத்தார்கள் என்பதல்ல; பெயரை எடுக்காமலேயே அப்படி சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் BJP-லிருந்து வெளியே வந்துவிட்டாலும், அவர்களுக்கு உள்ளூர (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நீரோட்டம் இருக்கிறது. ஆகையினால், கவர்னரை எதிர்த்தால், அது திரு. மோடியை எதிர்த்ததுபோல் ஆகும். BJP-ஐ எதிர்த்ததுபோல் ஆகும். எனவே, இல்லாத காரணத்தைச் சொல்லிவிட்டு, வெளியே போயிருக்கிறார்கள். கிராமத்தில் சொல்வார்கள்; 'பூனைக் குட்டி வெளியே வந்துவிட்டது' என்று, அ.இ.அ.தி.மு.க.-வினுடைய கொள்கை என்ன, இலட்சணம் என்ன என்பதைத் தெரிவித்துவிட்டார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், பெயரை எடுத்துவிட்டதாகச் சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், மருத்துவப் பல்கலைக்கழகத்திற்கு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம் என்று பெயர்சூட்டி, திறந்து வைத்தவரே கலைஞர் அவர்கள்தான் என்பதை அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.*

[*2023 நவம்பர் 18*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு எந்தவித பெயர் மாற்றமும் செய்யப்படவில்லை. எந்தப் பெயரில் இருந்ததோ, அந்தப் பெயரில்தான் தொடர்ந்து இருக்கின்றது. தவறான ஒரு கருத்தைச் சொல்லி இன்று வெளிநடப்பு செய்திருக்கின்றார் என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்கு விளக்கம் அவை முன்னவர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்தக் காரணத்துக்காகத்தான், அவர்கள் வெளிநடப்பு செய்தார்களே தவிர, பல்கலைக்கழக மசோதாவில் அந்த அம்மையார் பெயர் மாற்றப்பட்டது அல்ல என்று அவை முன்னவர் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.*

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

13–11–2023 அன்று எவ்வித காரணமும் குறிப்பிடாமல், ஏற்பிசை அளிப்பதை நிறுத்தி வைப்பதாக (I withhold assent) சட்டமுன்வடிவுகளில் குறிப்பிட்டு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 10 சட்டமுன்வடிவுகளைத் திருப்பி அனுப்பியுள்ளதை, இப்பேரவை ஏற்கவில்லை.

பிற்பகல் 12–55

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தனித் தீர்மானம் பேரவையால் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டதன் அடிப்படையில் 10 சட்டமுன்வடிவுகளும் மறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன.